*10.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.188/2015) வா.சா.1. பூச்செல்வி.*

*எனது சொந்த ஊர் பழைய அப்பனேரி கிராமம் என்றால் சரிதான். எனது தகப்பனார் இராஜாமணி எனது சொந்த கிராமத்தில வைத்து இறந்துபோனார் என்றால் சரிதான். எனது தாயார் ஜெயமணி 1ம்வாதி வழக்கின் இடைக்காலத்தில் இறந்து போனார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் முதல் மனைவி செல்லம்மாள் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கும் முதல் மனைவியான செல்லம்மாளுக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். முதல் மனைவி செல்லம்மாள் எங்கு வைத்து எந்த தேதியில் இறந்து போனார் என்றால் எங்கள் ஊரில் வைத்து இறந்து போனார். ஆனால் தேதி தெரியாது. எனதுதகப்பனாரும், முதல் மனைவியும் பிரிந்திருந்த காலத்தில் எனது தாயாரை 2வது தாராமாக திருமணம் செய்திருந்தார் ஏ்னறால் சரிதான். முதல் மனைவியும் எனது தகப்பனாரும் சட்டரீதியாக பிரிந்ததற்கு ஆதரவான ஆவணம் இல்லை என்றால் சரிதான். முதல் மனைவி உயிருடன் இருக்கும் போது எனது அம்மாவை திருமணம் செய்து கொண்டதால் எனது அம்மா எனது அப்பாவின் சட்டரீதியான வாரீசு இல்லை என்றால் சரியல்ல. எனது அம்மாவான ஜெயமணிக்கும் எனது தகப்பனாருக்கும் எங்கு வைத்து எதன்அடிப்படையில் திருமணம் நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. நாங்கள் எந்த மதத்தை சேர்ந்தவர்கள் என்றால் கிறிஸ்துவ மதத்தைசேர்ந்தவர்கள். வழக்குதாக்கல் செய்த பின்பு எனது அக்கா செல்வி இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஷ எனது அக்கா செல்வியின் கணவர் மற்றும் அவரின் பிள்ளைகளை 4 முதல் 7 வாதிகளாக வழக்கில் சேர்த்துள்ளேன்ள ன்றால்சரிதான். 2ம்வாதியின் இறப்பு சான்று மற்றும் 4முதல் 7 வாதிகள் இறந்துபோன 2ம்வாதியின் வாரீசு என்பதை காட்டக்கூடிய வாரீசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதலில் அப்பா இறந்து போனதற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் வாரீசு சான்றுகேட்டு மனுக்கொடுத்திருந்தோம் அதற்கு நீதிமன்றத்தில் போய் பார்த்துக்கொள்ளும்படி திருப்பி அனுப்பிவிட்டார்கள். வருவாய்துறை விசாரணையிலும், நீதிமன்ற விசாரணையிலும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறனே் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 4ம்வாதி இறந்து போன எனது தகப்பாரின் சட்டப்படியான வாரீசு இல்லை என்றால் சரியல்ல. பிரிவு 80 சி.பி.சி.படி வழக்கிற்கு முன்பு அரசு அதிகாரிகளுக்கு அறிவிப்பு அனுப்பாததால் எனது வழக்கு செல்லத்தக்கதில்லை என்றால் சரியல்ல. உண்மையான தகவல்களையும்,*

முழுதையான தகவல்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காததால் எனது வழக்கு நிலைநிற்கத்தக்கதில்லை ென்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
10.03.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண். 126/2019.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் - ரா.அழகுமலை
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை.</u> நான் தற்போது வாதி வங்கி கிளையில் தமிழ்நாடு மெர்கன்டையல் வங்கி கோவில்பட்டி கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 25.02.2010 பிரதிவாதிகள் கடன் வேண்டி வாதி வங்கிக்கு அளித்த கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1. |
| 2 | 27.10.2010ல் வாதி வங்கி பிரதிவாதிக்கு அளித்த அனுமதி கடிதம் வா.சா.ஆ.2. |
| 3 | 27.10.2010ல் வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் சேர்ந்து எழுதிக்கொடுத்த பிராமசரி நோட்டு அசல் வா.சா.ஆ.3. |
| 4. | 27.10.2010ல் கொதுவை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.4. |
| 5. | 27.10.2010ல் கடனுறுதி உடன்படிக்கை அசல் வா.சா.ஆ.5. |
| 6. | 27.10.2010 உத்திரவாதக்கடிதம் மற்றும் சம்மத கடிதம் ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.6. |
| 7. | 27.10.2010 உத்திரவாத ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.7. |
| 8. | 07.09.2013ல் உயிர்ப்பிப்பு கடிதம் அசல் வா.சா.ஆ.8. |
| 9. | 30.08.2016 உயிர்ப்பிப்பு கடிதம் அசல் வா.சா.ஆ.9. |
| 10. | 20.07.2019 வழக்கறிஞர் அறிவிப்பு நான்குஅஞ்சலக ரசீதுகளுடன் அலுவலக நகல் வா.சா.ஆ.10. |
| 11. | 22.07.2019ல் மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள்மேற்படி முகவரியில் இல்லையென திரும்ப வந்த அஞ்சல் உறைகள் நான்கு அசல் வா.சா.ஆ.11. |
| 12 | 06.08.2019 கணக்கு பேரேட்டு நகல் வா.சா.ஆ.12.ஆகும். |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

மு.வி.தொடர்ச்சி : வாதி தரப்பில் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய

மு.வி.தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*10.03.2020.*

*10.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.139/2014) வா.சா.1. முருகன்.*
*6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.*

*வழக்கு சொத்துக்கள் அனைத்து இனாம்மணியாச்சியை சேர்ந்த அய்யப்ப நாயக்கர் மகன் நாராணசாமி நாயக்கரூருக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களுக்கும் ஆவல்நத்தம் கிராமத்தை சேர்ந்த அய்யப்ப நாய்ககர் மகன் நாராணசாமி நாயக்கருக்கு எவ்வித சம்பந்தமில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்களைப்பொறுத்து இனாம்மணியாச்சியை சேர்ந்த நாராணசாமி நாயக்கருக்கும் அவரின் மகன்களும் 1976ல் ஒரு பதிவு பெற்ற பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பதிவு பாகப்பத்திரத்தின் நகலை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் 4வது அயிட்டச்சொத்து 9வது பிரதிவாதி சீனிவாசன் பாகத்திற்க்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 4வது அயிட்டச்சொத்தை தான் ராஜேந்திரன் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஷ ராஜேந்திரன் என்பவர் செல்லையா நாயக்கரின் மகன் என்றால் சரிதான். ஷ செல்லையா நாயக்கருக்கும் சேர்ந்து தான் 1976ல் பாகம் செய்து கொண்டார் என்றால் சரிதான். பிராது 4வது அயிட்டச்சொத்தை ராஜேந்திரன் அனுபவம் செய்து வந்து எனக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற 4வது அயிட்டச்சொத்திற்கு எனது பெயரில் பட்டா மற்றும் தீர்வை உள்ளது என்றால் சரிதான். 4வது அயிட்டச்சொத்து கடந்த 20வருடங்களாக எனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.*

*1,2,3 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி. 6முதல் 8 பிரதிவாதிகளின் கு.வி.யை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*10.03.2020.*

07.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ். 152 /2012) பி.வா.சா.1. ஆறுமுகம்.

வழக்கில் பிரதிவாதி தரப்பில தாக்கல் செய்யப்பட்ட பதிலுக்கான தகவல் என்னால் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கான இடம் அதற்கு கீழ்பக்கம் உள்ள இடத்திற்கு அரசாங்கத்தினரால் பட்டா கொடுக்கப்பட்ட விவரம் எனக்குத்தெரியும் என்றால் சரிதான். எனது இடத்திற்கு நாகம்மாள் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் எனது கைவசம் தான் உள்ளது.ஆனால் அதில் அளவுகள் வாதியால் சுமால் 12வருடத்திற்கு முன்பு எனக்கு இடத்தை கிரையம் கொடுத்த நபர் அடமானம் வைத்த போது கிழித்து விட்டதாக என்னிடம் கூறினார். என்னிடம் உள்ள ஷ பட்டாவை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். ஷ பட்டாவில் வரைபடம் வரையப்பட்டுள்ளதா என்றால் வரைபடம் இல்லை. எனக்கு அந்த பட்டாவை யார் கொடுத்தார்கள் என்றால் நாகம்மாளும் அவரது மகன் கணேசன் என்பவரும் என்னிடம் கொடுத்தார்கள். கணேசன் தான் எனத மனைவிக்கு எங்கள் வீட்டை கிரையம் செய்துகொடுத்தார் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த தேதி 05.06.2000ம் என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. அந்த பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் அதுவும் எனக்கு ஞாபகமில்லை. நான் கிரையம்பெற்ற போதுஓட்டுவீடாக இருந்தது என்றால் சரிதான். அந்த ஓட்டு வீடு சிறிய வீடாக இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டைவிட தற்போது பெரிய வீடாக கட்டியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது மனைவியின் பெயரில் கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.5 ஆகும். எனது பத்திரத்தில் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் என்ன என்றால் எனது

பத்திரத்தினை பார்த்தால் தான் தெரியும். வா.சா.ஆ.5 ஆவணமான எனதுபத்திரத்தை பார்த்து என்னால் கூறமுடியுமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தினால் அது பற்றி எனக்கு கூறமுடியாது. எனது வீடு கட்டுவதற்குநகராட்சியில் உரிய அனுமதி பெற்றுள்ளேனா என்றால்பெற்றுள்ளேன். எனது வீட்டின் முதல் தளம் தனியாக கட்டினேன் என்றால் அவ்வாறு இல்லை. வீடு கட்டும்போதே தரை தளம் மற்றும் முதல் தளம் சேர்த்து கட்டிவிட்டேன். கணேசனுக்கு நாகம்மாள் எழுதிக்கொடுத்த பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் எனதுகைவசம்தான் உள்ளது. அந்த பத்திரதம்தை நீதிமனம்றதில் தாக்கல்செய்ய முடியுமாள ன்றால் முடியும். கணேசனுக்குதானமாக எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நாகம்மாள் கணேசனுக்குமுழு இடத்தையும் தானமாக கொடுத்துள்ளாரா என்றால் முழு இடத்தையும் கொடுத்துள்ளார். அந்த இடத்தின் தென்பகுதியில் உள்ள இடத்தை கணேசன் விற்பனை செய்து விட்டாரா என்றால் கிழமேல் 11 அடி,தென்வடல் 19 அடியுள்ள இடத்தை அவர் கணணனுக்கு விற்பனை செய்துள்ளார். கண்ணன் இடத்திற்கும் வாதியின் இடத்திற்கும் இடையே உள்ள சந்து அகலமாக உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் வாதியின் வீட்டிற்கும் இடையே உள்ள சந்தின் அளவு எவ்வளவு இருக்கும் என்றால் 2அடி இருக்கும், அளவு செய்து பார்க்கவில்லை. சந்தை நோக்கி 3 ஜன்னல் வைத்து கட்டியுள்ளேன் என்றால் தரை தளத்தில் ஒரு ஜன்னல் முதல் தளத்தில் 2 ஜன்னல் வைத்து கட்டியுள்ளேன். ஷை சந்தில் வடகடைசியில் இருந்த எனது ஜன்னலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன் அடிப்படையில் நான் அடைத்து விட்டேன் என்றால் சரியல்ல, எனது வீடு கட்டுவதற்காக எனது வசதிக்காக நானாக அடைத்துவிட்டேன். வாதி காவல்நிலையத்தில் புகாரின் பேரில் ஷை சந்தில் நான் வைத்துள்ள எல்லாத ஜன்னல்களையும் அடைத்து விடுவதாக விசாரணையின் போது எழுதிக்கொடுத்துவிட்டு ஒரு ஜன்னலை மட்டும் அடைத்துவிட்டேன் என்றால்சரியல்ல. வாதி இடத்தின் பட்டா மற்றும் உயிலை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. பட்டாவில் உள்ள அளவு தான் போடப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. வாதி உயிலில் அளவு எழுதப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி உயிலில் உள்ள அளவு பற்றி எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் எனக்குத்தெரியாது. வாதி கட்டியுள்ள வீடு நான் கிரையம் பெறுவதற்கு முன்பே கட்டப்பட்ட வீடு என்றால் சரிதான்.வாதியின் மாடிக்கு செல்லக்கூடிய படி

அவர்கள் வீட்டின் வடகடைசியில் ஷ சந்தின் ஒரு அடி அளவு நீட்டப்பட்டுள்ளது என்றால் 1/2 அடி அளவு நீட்டப்பட்டியிருக்கும். ஷ சந்தில் என்ன என்ன பொருட்கள் உள்ளது என்றால் பொருட்கள் எதுவும் இல்லை. ஷ சந்தை உடனடியாக சென்று பார்க்கலாமா என்றால் பார்க்கலாம். எனது வீட்டிற்கு ஒரு மாதத்திற்கு முன்பு வெள்ளை அடித்தேன் என்றால் எனது அப்பாவின் நினைவு நாளுக்காக வெள்ளை அடித்தேன். அப்போது வீடு வேலை செய்யும் போது ஷ சந்தில் தேவையில்லாத பொருட்களை போட்டேன் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக எங்களுக்குள் பிரச்னை ஏற்பட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வாதி எதற்காக காவல் நிலையத்தில புகார் கொடுத்தார் என்றால் (சாட்சி கு.வி. தொடங்கிய நேரம் முதல் கேட்ட கேள்விகளுக்கு நேரிடையாக பதில் கூறாமல் நீதிமன்ற நடவடிக்கையை இடையூறு செய்யும்விதமாக பதில் அளித்து வந்தார். அதனால் நீதிமன்றத்தினால் எச்சரிக்கை செய்யப்பட்டு கு.வி.தொடர்ந்து எடுக்கப்பட்டது.)

இரு தரப்பினரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க கு.வி. வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
07.03.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.97 /2014.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் - வி.எஸ்.எஸ்.ஆர். காந்தி
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யபட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் 1ம்வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 24.01.2013ல் 1ம்வாதியால் பிரதிவாதிகள் மீது எட்டையபுரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகர் மனு வா.சா.ஆ.1. |
| 2 | 30.01.2013ல் 1ம்பிரதிவாதியால் 1ம்வாதிக்கு அனுப்பப்பட்ட வாக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2. |
| 3 | 18.02.2013ல் 1ம்வாதியால் அனுப்பப்பட்ட பதில் வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.3. |
| 4 | 10.03.2014அன்று 1ம் வாதியால் 2ம்வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பதிவு தானசெட்டில்மெண்ட் ஆவணம் அசல் வா.சா.ஆ.4.ஆகும். |

கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,

*07.03.2020.*

*மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.*

*ஓ.எஸ்.எண். /2015.*

*வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.*

*.....*

பெயர் -
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

*1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*முதல் விசாரணை.* *நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.*

| | |
|---|---|
| | |

*கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.*

*07.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.32 /2013) வா.சா.1. குருசங்கர்.*

*1,2,3,4,5,7 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.*

*என்னிடம் காட்டப்படும் ஆவணங்க்ள இரண்டும் வழக்கு நடத்த வாதிகளாகிய நாங்கள் திருமணிபாண்டியனுக்கு வழங்கிய பொது அதிகாரப்பத்திரம் என்றால் சரிதான். பொது அதிகார பத்திரத்தின் அசல் வழக்கு தாக்கல் செய்த போது பிராதுடன் நாங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். அது முறையே எக்ஸ்.1,எக்ஸ்.,2 ஷை 2 ஆவணங்களும் பதிவு செய்யப்படாத ஆவணங்கள் என்றால் சரிதான். எக்ஸ்,1,2 ஆவணங்களில் விற்பனை செய்ய அடமானம் வைக்க பட்டா மாற்ற அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். ஷை ஆவணங்கள் மூலம் இந்த வழக்கு தாக்கல் செய்ய அதிகாரம் எங்களால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. இதே போன்று இந்நீதிமன்றத்தில் திருமணிபாண்டியனால் தாக்கல் செய்யப்பட்ட 3 வழக்குகளிலும் வாதிகளாகிய எங்களால் பொது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஷை 3 வழங்ககுகளும் இனாம்மணியாச்சி கிராமத்தில் அமைந்துள்ள சொத்துக்கள் பற்றியது என்றால் சரிதான். ஷை 3 வழக்குகளிலும் சேர்த்து சுமார் 16 சொத்துக்கள் இருக்கும் என்றால் சரிதான். அந்த 3 வழக்குகளும் இந்நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1,2 ஆவணங்களில் வழக்கு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் 1946ல் ஒருபாகம் நடைபெற்றதாக வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்தபாகப்பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்திலும் தாவாச்சொத்துக்கள்இல்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு ஆவல்நத்தம் கிராமம் என்றால் சரிதான். தாவாச்சொத்து இருப்பது இனாம்மணியாச்சி கிராமம் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்குள் நடந்த பாகப்பிரிவினையில் விடுபட்ட சொத்துக்கள் எங்களுக்குப்பாத்தியம் என இவ்வவழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்ய மற்ற 3 வழக்குகளும் அதே அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் என்றால் சரிதான். நான் முதலில் வழக்கு தாக்கல் செய்த போது 4 தபசில் சொத்துக்கள் குறித்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதில் 3 தபசில் சொத்துக்களை நீக்கி தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். 4வது தபசில் சொத்துக்கு மட்டும் தான் வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். 1முதல் 3 தபசில்*

சொத்துக்களைப்பொறுத்து தற்போது வழக்கு இல்லை என்றால் சரியல்ல. 1வது தபசில் சொத்தை மட்டும் தான் நாங்கள் நீக்கியுள்ளோம். வா.சா.ஆ.4 பட்டாவில் அய்யப்ப நாயக்கர் மகன் நாராயணசாமி நாயக்கரின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஷ பட்டாவின் எண் 122 என்றால் சரிதான். பட்டாவில் அய்யப்ப நாயக்கர் மகன் நாராணசாமி நாயக்கர் என்று இருப்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியலல, எங்கள் குடும்பத்தினாரால் கிரையம் பெறப்பட்ட சொத்து. அவ்வாறு கிரையம் பெற்ற ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா எண்.122 அசல் பட்டாவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது எனது கைவசம் இல்லை என்றால் சரிதான். பட்டா எண்.122 செலுத்திய தீர்வை ரசீதுகளை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அய்யப்ப நாயக்கரின் வாரிசு சான்று வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வெங்கட்ராம நாயக்கரின் வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சுப்பா நாயக்கரின் வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.13 வரையிலான பட்டா ஆவணங்களில் வாதிகளாகிய எங்கள் பெயரிலோ அல்லது எகங்களின் முன்பாத்தியஸ்தர்கள் பெயரோ காணப்படவில்லை என்றால் சரிதான். ஷ ஆவணங்களில் பிரதிவாதிகளின் பெயர்கள் தான் உள்ளது என்றால் சரிதான். ஷ பட்டாவிற்கு தீர்வை ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்து இனாம்மணியாச்சி கிராமத்தை சேர்ந்த அய்யப்ப நாயக்கர் குமாரா நாராயணசாமி நாயக்கருக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 1976ல் நாராயணசாமி நாயக்கரும் அவரின் மனைவி மற்றும் அவரின் குமாரர்கள் தாவாச்சொத்து மற்றும் வேறு சொத்துக்களைப் பொறுத்தும் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் பிராது தபிசல் சொத்துக்கள் 1முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனாரான சீனிவாசன் பாகத்திற்கு ஒதுக்கபப்பட்டது என்றால் சரியல்ல. சொத்துக்களில் ஒரு பகுதியை சீனிவாசன் தனது மக்களான 1,2 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. பிராது 4வது தபிசல் சொத்தை சீனிவாசன் பல நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை நான் பார்த்துள்ளேனோ என்றால் 5வருடத்திற்கு முன்பு பார்த்துள்ளேன். வழக்கு சொத்துக்களில் சுமார் எத்ததைன வீடுகள் உள்ளது என்றால் வீடுகள் இல்லை.சொத்துக்களில்

பிளாட்டுகள் போடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அந்த பிளாட்டுகளை பல்வேறு நபர்கள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் கிரையம் பெற்ற பிளாட்டுகள் அவர்களின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். பிரதிவாதிகள் பெயரில் உள்ள பத்திரங்கள் செல்லாது என்று வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் கேட்டுள்ளோம். பிரதிவாதிகள் போட்டுள்ள பத்திரங்களின் விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் ஒப்பநத்ம போடும் போது தெரியும். யாரிடம் ஒப்பந்தம் போட்டோம் என்றால் திருமணிபாண்டியிடம் ஒப்பந்தம் போட்டோம். எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்வதாக ஒப்பநத்ம போட்டோம்என்றால் அந்த விவரத்திற்காக ஒப்பந்தம் போடவில்லை. தாவாச்சொத்தில் எனக்கோ எனது முன்பாத்தியஸ்தர்களுக்கோ எவ்வித உரிமையோ,பாத்தியதையோ கிடையாது என்றுசொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்கும் எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எத்தனை வயதில் இறந்துபோனார் என்றால் 74 வயது இருக்கும் போது இறந்து போனார். எனது தகப்பனார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் நடத்தியிருப்பார். எனது தகப்பனார் தாவாச்சொத்தை பொறுத்து 2013வரை எந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

9முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.

எங்களது குடும்ப பெயர் என்ன வென்றால் கங்கணால். 1முதல் 8 பிரதிவாதிகளின் குடும்ப பெயர் சிந்தலச்சேரி என்றால் சரிதான். பட்டா எண்.122 தாவாச்சொத்துக்குரியது என்றாலும் அவை அய்யப்பநாய்ககர் குமாரரி நாரணயசாமி நாயக்கரின் பொயில் இருந்தது என்றால் சரிதான். முதலில் வழக்கு 17 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்தேன் என்றாலும் அதில் சொத்து விவரத்தையும் 4 தபசிலாக காட்டியுள்ளோம் என்றால் சரிதான். 14,15,16,ஆகிய பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பு 1வது தபசில் சொத்தை நீக்கம் செய்து அதன் அடிப்படையில் 14,15,16 பிரதிவாதிகளையும் பிராதிலிருந்து நீக்கம் செய்து விட்டே டாம் என்று சொன்னால் சரிதான். தற்போது 3தபசில் சொத்தை பொறுத்து தான் வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். ஆனால் நிருபண வாக்குமூலத்தில் 4 தபசில் சொத்துக்களைப் பொறுத்து சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். தாவாச்சொத்துபொறுத்து

நாராயணசாமி நாயக்கர் உயிருடன் இருக்கும் காலத்தில் 1976ல் பாகம்பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். ஷ பாகப்பிரிவினை பத்திரத்தை எங்கள் தரப்பில் வா.சா.ஆ.19 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.19ல் நாராயணசாமி நாயக்கர், அவரது மனைவி மற்றும் 3 ஆண் மக்கள் இடையே பாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அதில் அவர்களின் குடும்ப பெயர் சிந்தலச்சேரி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போதைய தாவாவில் உள்ள 1,3 பாகச்சொத்துக்கள் சீனிவாசன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதாக வா.சா.ஆ.19 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தபசில் 2வது அயிட்டச்சொத்து இராமானுஜம் என்பவரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால்சரிதான். இராமானுஜம் இறப்பிற்கு அவரின் வாரீசுகள் தபசில் 2வது அயிட்டச்சொத்தை 10ம்பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 10ம்பிரதிவாதி 11ம்பிரதிவாதி நிறுவனத்திற்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். தபசில் 1மற்றும் 3 அயிட்டச்சொத்துக்களை சீனிவாசன் அவரின் மக்களும் சேர்ந்து 9ம்பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த கிரையத்திற்கு பின்னர் 9 மற்றும் 11வது பிரதிவாதிகள் பல வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதன் பின்னர் சென்னை நகர ஊரக அமைப்பு துறையினர் இயக்குநர் அலுவலகத்தில் வரைபடம் 81/2002 என அங்கீகாரம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். அதன் பின்னர் பல நபர்களுக்கு வீட்டு மனைகளாக கிரையம் செய்துகொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வரைபட அனுமதியின் நிபந்தனையின்படி பொது மக்கள் உபயோகத்திற்கு பஞ்சயத்திற்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. தாவாச்சொத்துக்களை நாங்கள் எந்தக்காலத்திலும் அனும் செய்து வந்தை காட்டும் தீர்வை ரசீது, விவசாயம் செய்ததை காட்டும் சாகுபடி அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பட்டாவும் வாதிகளாகிய எங்கள் பெயரில் எந்தக்காலத்திலும் இருந்தது கிடையாது என்றால் சரிதான். ஆனால் எனது தாத்தாவின் பெயரில் இருந்தது. எனது தாத்தா பெயரில் இருந்த பட்டாவின் எண் என்ன என்றால் பட்டா 122 ஆகும். ஷ பட்டாவில் இருக்கக்கூடிய நாராயணசாமி நாயக்கரின் வாரீசுகள் நாங்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்துக்கள் நாரணப்ப நாயக்கருக்கு பூர்வீகமாகப்பாத்தியப்பட்டதாக

நாங்கள் கட்சி செய்து வருவதற்கு ஆதரவாக எவ்வித ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்துக்கள் அனைத்தும் இனாம்மணியாச்சி கிராமத்தை சேர்ந்தது என்றால் சரிதான். என்னை தவிர மற்ற வாதிகள் யாரும் வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். வாய்மொழி பாகம்செய்து கொண்டததை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது எந்த வருடம் நடைபெற்றது என்று எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்தில் அனுபவம் இருப்பதை காட்ட பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யவதற்கு முன்பே தாவாச்சொத்தை பல்வேறுபிளாட்டுகளாக பிரித்து பல நபர்களுக்கு கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பிளாட்களாக பிரிக்கப்பட்டு பல நபர்கள் கிரையம் பெற்ற விவரம் எனக்குத்தெரியும் என்றால் சரிதான். எனவே எனது வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பட்டாவில் குறிப்பிடும் நாராயணசாமி நாயக்கர் வேறு நான் குறிப்பிடும் நாராயணசாமி நாயக்கர் வேறு என்று சொன்னால் சரியல்ல. அதனால் 1946ல் பதிவு செய்ப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் தாவாச்சொத்துக்கள் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. எனது எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
07.03.2020.

07.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு மு.வி.தொடர்ச்சி.(ஓ.எஸ். 97 /2012) வா.சா.1. கந்தசாமி.

| | |
|---|---|
| 1 | தாவாச்சொத்திற்கு கடந்த வருடம் சீனிநாயக்கரின்பெயரில் செலுத்திய தீர்வை ரசீது அசல் வா.சா.ஆ.8 |
| 2 | தபசில் சொத்திற்கான சாகுபடி அடங்கல் நகல் வா.சா.ஆ.9.ஆகும். |

வா.சா.ஆ.9 ஆவணம் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது என்பதாலும் ஷ ஆவணம் வாதியின் மூலம் குறியீடு செய்ய முடியாது என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யபப்டுகிறது.)

கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
07.03.2020.

07.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.240/2014) வா.சா.1. முத்தையா.

எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண் நினைவில்லை. நீதிமன்ற ஆணையாளர் வரைபடத்தில் எ,பி.இ.எப் என கட்டப்பட்டுள்ளது எனது வீடு என்றால் சரிதான். அதில் தென்புறத்தில் எக்ஸ் 1 என காட்டப்பட்டுள்ளது எனது வீட்டின் பிறதான வாசல் என்றால் சரிதான். எக்ஸ். 2 என்பது எனது புறவாசல் என்றால் சரிதான். எக்ஸ்1 என காட்டப்பட்டுள்ள இடத்தில் 3 படிக்கட்டுகள் உள்ளது என்றால் சரிதான். ஆனால் படிக்கட்டுக்கள் எனது இடத்திற்குள் உள்ளது. எனதுதென்பக்க சுவரிலிருந்து வடபக்க சுவர் வரை உள்ள அளவுகள் 35 அடி என ஆணையாளர் காட்டியுள்ளது சரியான அளவு என்றால் சரிதான். தென்பக்க சுவருக்கு தெற்கே 3 படிக்கட்டுகளின் அகலம் 3 அடி இருக்கும் என்றால் சரிதான். அந்த படிக்கட்டு இருக்கும் இடம் எனக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். அந்த படிக்கட்டுக்கு தெற்கே எனது முத்தவெளி சுமார் 5,6 அடி இருக்கும் என்றால் சரிதான். முத்தவெளிக்கு தெற்கே கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென்புறம் உள்ள எனது முத்தவெளியை ஆணையாளரிடம் அளந்து பார்க்க சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த முத்தவெளி எனக்கு சொந்தமானது இல்லை. எனது சொத்திற்கு தெற்குமாலாக பிராதில் காட்டப்பட்டுள்ளது சரியான விபரம் என்றால் சரிதான். எனது பிராதில் 1வது தபசில் தெற்கு மால் கிழமேல்தெரு என்று காட்டியுள்ளது விவரம் சரியானது என்றால் சரிதான். தெருவுக்கு வடக்கே தென்வடலாக எனக்கு மேல்தலை 42.64 அடி கீழ்தலையும் 1,2 அடியும் எனக்குப்பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதற்கு மேல் எனக்குப்பாத்தியமில்லை என்றால் சரிதான். அந்த அளவுக்கு வடக்கே பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்டஇடம் என்றால் சரிதான். தெற்கே உள்ள கிழமேல் தெருவின் அகலம் எனக்குத்தெரியுமா என்றால் தெரியாது. ஆணையாளர் அறிக்கையில் தெற்கே உள்ள தெருவை அளந்து பார்த்தாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். எனக்கும்,பிரதிவாதிக்கும் இடையே தென்வடல் இடம் மட்டுமே தாவா என்றால் சரிதான். ஆணையாளர் தென்வடல் அளவுகளை அக்கும் போது கீழ்புறமும், மேல்புறமும் 42.64அடி அளந்தார் என்றால் சரிதான்.ஆனால் எனதுபட்டாவில் கீழ்தலை41.32அடி அளவும் மேல்தலை 42.64அஅடி அளவில் உள்ளதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்குகிழக்கே பிரதிவாதியின் பிளாட்டுடன் சேர்ந்து 10 பிளாட்டுகள் ஒன்றாக

பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 10 பிளாட்டுகளுக்கும் வடபுறம் கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். கிழக்கே உள்ள 9 பிளாட்டுகளில் ஒரு சில பிளாட்டுகளில் வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகளின் தெற்கு அத்தும் பிரதிவாதி அமைத்துள்ள சுற்றுவேலியும் ஒரே நேர்கோட்டில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி 2009ல் கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. பிரதிவாதிவீட்டின் தென்புறம் அவரது வீட்டிலிருந்து 2அடி விட்டு கம்பிவேலி அமைத்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி முதலில் 4 புறமும் கம்பிவேலி அமைத்திருந்தார் என்றால் சரிதான். வீடு கட்டும் போது அவரின் வீட்டிற்கு தென்புறம் உள்ள கம்பிவேலையை மட்டும் வைத்துவிட்டு வீடு கட்டிவிட்டார் என்றால் சரிதான். பிரதிவாதி வீடு கட்டிக்கொண்டியிருக்கும்போது நான் ஆட்சேபனை செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்கு தென்புறம் உள்ள கம்பி வேலிக்கு வடபுறமும் அமைந்துள்ள 2 அடி இடம் அகலம் உள்ள இடம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் அவர் தான் பயன்படுத்தி வருகிறார். ஆனால் அது எனது இடம். வழக்கு போடுவதற்கு முன்பு காவல்நிலையத்தில் பிரதிவாதி 2அடி எனது இடத்தில் கம்பி வேலை போட்டுள்ளார் என்றும் அதை அகற்றக்கோரி நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்குகாவல் நிலையத்தில் அது சிவில் பிரச்சனை அதனால் நீதிமன்றத்தில் போய் பார்த்துக்கொள்ளும்படி கூறி அனுப்பிவிட்டார்கள்ள ன்றால் சரிதான். எனது வீடு மற்றும் பிரதிவாதி வீட்டிற்கு கீழ்புறம் தெருவோ பாதையோ இருந்ததில்லை என்று சொன்னால் சரிதான். ஆணையாரின் வரைபடத்தில் E புள்ளி என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனது வீட்டின் கீழ்புறம் என்றால் சரிதான். E புள்ளியில் உள்ள தெருவை அடிப்படையாக கொண்டு ஆணையாளர் அளந்துள்ளாதாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. 3வது தபசிலாக காட்டப்பட்டுள்ள இடம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட இடம் என்றாலும் பிரதிவாதியை வீண் இடைஞ்சல் செய்யும் நோக்கத்துடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பத்திரத்தில் பட்டாவிலும் கண்டுள்ள அளவுகளை விட எனது அனுபவத்தில் அதிகாமான இடம் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ள இடத்தைப்பொறுத்து நான் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லத்தக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
07.03.2020.

*07.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.233/2013) பி.வா.சா.1. ஜோசப்புதுமைசவரி*

*நான் எந்த ஊரில் குடியிருந்துவருகிறேன் என்றால் திருச்சியில் குடியிருக்கிறேன். எனக்குசொந்த ஊர் காமநாயக்கன்பட்டி என்றால் சரிதான். நான்என்ன வேலை செய்து வந்தேன் என்றால் இரயிவேயில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் திருச்சியில் இருக்கும் போது காமநாயக்கன்பட்டியில் உள்ள சொத்தை யார் பராமரித்து வந்தார்கள் என்றால் எனது பெற்றோர்கள் பார்த்து வந்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலம், எதிர்வழக்குரைக்கான தகவல்களை நான் தான் எனது வழக்குரைஞருக்கு தகவல்களை சொன்னேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலம், எதிர்வழக்குரைக்கான சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் 2வது தபசில் சொத்து பிரதிவாதிக்கோ அவரின் முன்பாத்தியஸ்தருக்கோ எவ்வித பாத்தியதையும் கிடையாது என்றுசொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் சர்வே எண்.257/4 என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.257/4ல் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.8 நன்கொடைப்பத்திரம் சர்வே எண்.257/4க்கு தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நத்தம் அடங்கலில் உள்ள பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் பிரதிவாதியின் பெயரோ அல்லது அவரின் தாயாரின் பெயரிலோ இல்லை என்றால் சரிதான். எனது அம்மாவின் பெயரில் உள்ள அடங்கல் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். எனது பெயரிலோ எனது அம்மாவின் பெயரிலோ எந்தவித நத்தம் அடங்கல் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 ஆவணத்தை வைத்து சொத்து இன்னாருக்குப்பாத்தியம் என்ற முடிவுக்கு வரமுடியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 ஆவணம் வி.ஏ.ஓ. வழங்கியது என்றால் சரிதான். சர்வே எண்.257/4 எனது அம்மா எழுதிக்கொடுத்த நன்கொடை ஆவணம் மூலம் தான் உரிமைகோரியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் உண்மையான ஆவணம் என்றால் சரிதான். நன்கொடை ஆவணத்தில் 2 தபசிலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது சொத்து தென்வடல் தெருவிலிருந்து பார்க்கும்போது எல் வடிவத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 நன்கொடை ஆவணத்தில் 2 தபசிலும் தபசில் மால் தனித்தனியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் மால்விபரத்தில் மரியமிக்கேல் காலிமனைக்கும், எனது 2வது அயிட்ட காலிமனைக்கும் மேற்கே என்று கண்டுள்ளது என்றால் சரிதான். ஷ மால்கள்*

விபரத்தை பார்க்கும் போது எனது மனைக்கு தென்கிழக்கில் மரியமிக்கேல் பாத்தியப்பட்ட மனை என்று தெரியவரும் என்றால் சரிதான். நன்கொடை ஆவணம் 2 தபசிலாகவும் மால் விபரத்தில் தனியார் சொத்துக்களாக கண்டுள்ளது என்றால் சரிதான். மால்களில் காட்டப்பட்டுள்ள மரியமிக்கேல் என்பவர் எனக்கு உறவினர்எ ன்றால் எனக்குத்தெரியாது. மரியமிக்கேல் மகன் தான் மரியமிக்கேல் என்ற சின்னச்சாமி என்றால் எனக்குத்தெரியாது. அந்த விவரம் எனக்கு நன்றாகத்தெரியும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்லுகிறேன் என்றால் சரியலல. மிரியமிக்கேல் என்ற சின்னச்சாமியிடம் தான் தபசில் சொத்தைகிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 1வது தபசில் சொத்தில் தான் வாதி பேரர் போட்டுள்ளார் என்றால் போடப்பட்டு இருந்தது. வழக்குசொத்து சம்பந்தமாக முதன் முதலில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதில் தபசிலில் சர்வே எண்.82/3 என்று காட்டியுள்ளேன் என்றால் அது பழைய எண். அந்த நம்பர் தற்போதைய நம்பர் 257/4 என்றால் சரிதான். எனது அம்மா எழுதிக்கொடுத்த தானப்பத்திரத்தில் கண்டுள்ள காலிமனையில் வீடு கட்டிவிட்டேன் என்றால் வீட்டிற்கு தெற்கே 3 அடி புழக்கத்திற்காக இடம் விட்டுள்ளேன். நான் சொல்லுவதுபோல் 3 அடி இடம் விட்டு வீடு கட்டவில்லை என்றாலும் எனது அம்மா எழுதிக்கொடுத்த தானப்பத்திரத்தில் கண்டுள்ள இடத்தில் முழுமையாக வீடு கட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. 3 அடி இடம் இருக்கிறது. வீடு கட்டுவதற்கு பஞ்சாயத்தில் கட்டிட அனுமதி பெற்றேன் என்றால் சரிதான். அந்த அனுமதி வரைபடத்தில் சர்வே எண்.82/3 என்றுதான் காட்டியுள்ளேன் என்றால் பத்திரத்தில் உள்ளபடி காட்டியுள்ளேன். ஆனால் அனுமதி பெறும் போது புதிய நம்பர் 257/4 என்பது எனக்குத்தெரியும் என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் அந்த விவரம் எனக்குத்தெரியும். பழையநம்பர் 82/3க்கு புதிய எண்.257/4 என்பது கடந்த 27 வருடங்களுக்கு முன்பே மாற்றிவிட்டர்கள் அந்த விவரம் எனக்கு முன்பே தெரியும் என்றால் சரியல்ல. புதிய நம்பர் தெரிந்தும் தெரியாதது போன்று கட்டி அனுமதி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 257/4 அடங்கல் எனது பெயரிரோ எனது தாயரின் பெயரோ இடம் பெறாத காரணத்தினால் தான் அதனை பத்திரத்தில் காட்டபடவில்லை என்றால் சரியல்ல. வரவாய்துறை ஆவணத்தின் படி எனது பெயரிரோ எனது அம்மாவின் பெயரோ காணப்படவில்லை என்றால் சரியல்ல. நன்கொடைப்பத்திரம் என்னாலும் எனது தாயராலும் மோசடியாக

உருவாக்கப்பட்ட பத்திரம் என்றால் சரியல்ல. அது பூர்வீகச்சொத்து. தாவா இடத்தை அளந்து பார்க்க நீதிமன்றத்திலிருந்து ஆணையாளார் மற்றும் சர்வேயர் வந்தார்கள் என்றால் சரிதான். ஆணையாளர் இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் அடங்கல் பதிவேட்டு நகல் மற்றும் புல வரைபடம் எக்ஸ்.1. ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட வரைபடம் எக்ஸ்.2 அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட புல வரைபடத்தில் தென்வடல் 8.2 மீட்டர் என்று கண்டுள்ளது என்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஷ தவறை நிவர்த்தி செய்ய வருவாய்துறை மூலம் நான் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். அவ்வாறுநடவடிக்கை எடுத்ததற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது கைவசம் உள்ளது. எனது தாயார் எழுதிக்கொடுத்த ஆவணத்தில் 31 அடி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் தென்கிழக்கில் வாதி கிரையம் பெற்ற இடம் உள்ளது என்றால் சரிதான். வாதி மரியமிக்கேலிடமிருந்து கிரையம் பெற்ற இடத்திலிருந்து 2வது தபசில் வழியாகத்தான் பாதை அமைந்துள்ளது என்றால் சரியல்ல. 2வதுதபசில் இடம் என்பது கற்பனையானது. வாதி எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண்.257/4 தாக்கல் செய்துள்ளார். வாதி 1வது தபசிலில் போர் போட்ட விவரம் எனக்குத்தெரியுமா என்றால் தெரியும், அப்போது நான் திருச்சியில் இருந்தேன். வா.சா.ஆ.4 ஆவணம் நான் முதன் முதலில் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் தபசில் விவரம் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. அதில் எந்தவிதமான அளவுகள் காட்டப்படவிலை என்றால் அளவுகள் காட்டப்படவில்லை. ஆனால் எனது வீட்டிற்கு தெற்கே உள்ள சுவரை காட்டியுள்ளோம். வாதி 1வது தபசில் சொததில் வீடு கட்டுவதற்கு முறையாக அனுமதி பெற்று தான் வீடு கட்டியுள்ளார் என்றாலும் நான் அவரை இடைஞ்சல் செய்து வந்தால் தான் என்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்எ ன்றால் சரியல்ல. வாதியின் மனைவி தாக்கல் செய்துள்ள சர்வே எண்.257/ 5. இந்த வழக்கின் சர்வே எண்.254 என்றால் சரிதான். இரண்டு வழக்குளை ஒரே சர்வே எண்ணிற்கு தாக்கல் செய்யப்பட்டது என்று எனது எதிர்வழக்குரையிலும் எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். சர்வே எண்.254-க்கும் 257/5-க்கும் எந்தவித சம்பந்தமில்லை என்றால் சரிதான்.

*நான் போட்டுள்ள ஒப்பந்தப்பத்திரம் பதிவு செய்யப்படாத ஆவணம் அதை நாங்களே உறபத்தி செய்துள்ளோம் என்றால சரியல்ல, அதில் நான், வாதி சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் செய்த ஆவணம். வாதிகள் 2ம்தபசில் சொத்தில் புழங்கக்கூடாதென்பது தான் எனது கட்சி என்றால் அது என்னுடையது இடம். பி.வா.சா.ஆ.15 ஆவணமான பஞ்சாயத்து வரைபடம் அனுமதியில் திறந்தவெளியாக 191.58 சதுர அடி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். 191.58 சதுரஅடி எந்த பகுதியில் விட்டுள்ளேன் என்றால் எனது வீட்டைசுற்றி திறந்தவெளியாக உள்ளது. அவ்வாறு விட்டதில் தான் 3 அடி உள்ளது என்று நான் கூறுகிறேன் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் தென்வடல் தெருவிற்கு வாதி வரவேண்டுமென்றால் 1வதுதபசில் சொத்தை தவிர வேறுபாதை இல்லை என்றால் சரியல்ல. வாதி 1வது தபசிலிருந்து 2வது தபசிலுக்கு செல்வதற்கு 2வது தபசிலை தவிர வேறு பாதை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் எனக்கு நன்கொடையாக கொடுத்த சொத்து அவருக்கு எவ்வாறு பாத்தியம் என நன்கொடை பத்த்ரதில் எனக்கு எழுதிக்கொடுத்த குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தாயாருக்கு எவ்வித பாத்தியதையும் இல்லாமல் எனக்கு நன்கொடை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வருவாய்துறை ஆவணங்களில் எனது பெயரும் எனது பெயரும் இல்லை என்றால் சரியல்ல. வாதியை 2வது தபசில் சொத்தில் நடக்கவிடாமல் நான்தான் வீண் இடைஞ்சல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு 2வது தபசில் சொத்து பாத்தியம் என்றாலும் 2013-லிருந்து கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய அறிவிப்பில் 2வது தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதாக நானே ஒப்புக்கொண்டு விட்டு தற்போது அது தவறு என்று கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு பிராதுப்படி தீர்ப்பாவதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரியல்ல.*

*ம.வி.* வாதியின் மனைவி தாக்கல் செய்த வழக்கில் சர்வே எண்.257/5 என குறிப்பிட்டு இந்த வழக்கில் உள்ள 2வது தபசில் சொத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.*

*ம.கு.வி.* பிராது 2வது தபசில் சொத்தில் சர்வே எண்.257/5 என்று கண்டுள்ளதா என்றால் சர்வே எண்.257/4 என்று ஷ எனது இடத்தை காட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.*

*ம.வி.இல்லை.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*07.03.2020.*

*07.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குு.வி.தொடர்ச்சி(ஓ.எஸ்.177 /2008) வா.சா.1. சரோஜினி.*

*நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1,2 ஆவணங்களில் சர்வேண்.7சி3 என காட்டப்பட்டுள்ளனது என்றால் சரிதான். சர்வே எண்.7சி3-க்கு புதிய சர்வே எண். என்னவென்றால் 223பி2. வா.சா.ஆ.2 ஆவணத்தில் என்ன சர்வே எண் காட்டப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.223பி என்று காட்டப்பட்டுள்ளது. அதன் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 25 ஏக்கர் 35 செண்டு. பட்டா எண் 95 யாருடைய பெயரில் உள்ளது என்றால் சிவன் செண்பகராமய்யர், சாமிசெண்பகராமய்யர் ஆகியோர்கள் பெயரில் கூட்டாக உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1,2 ஆவ்ணத்தில் சர்வே எண்.223பி2 காணப்படவில்லை என்றால் சரிதான்,. வழக்கு தாக்கல் செய்த போது தபசில் சொத்துக்கள் அனைத்தும் பேஸ் நாயக்கர் என்ற நாரணப்ப நாயக்கருக்குப் பாத்தியப்பட்டதாக தாக்கல் செய்து விட்டு பின்னர் பேஸ் நாயக்கர் என்ற நாராயணப்ப நாயக்கரின் மகன் நாராணப்ப நாயக்கருக்குப் பாத்தியப்பட்டதாக சீர்திருத்தம் செய்து வழக்கில் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். நாரணப்ப நாயக்கரின் பெயரில் பட்டா இருந்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் வழக்கில் 1ம்பிரதிவாதி அசல் வழக்கு 52/2006 தாக்கல் செய்த ஆவ்ணத்திலிருந்து சான்றிட்ட நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளேன். 2முதல் 5 அயிட்டச்சொத்து சர்வே எண்.233ன் உட்பிரிவுகள் சம்பந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய வழக்குப்படி தாவாச்சொத்துக்கள் அனைத்து நாரணப்ப நாயக்கர் மற்றும் அவருடன் பிறந்த குருசாமி நாயக்கருக்குப்பாத்தியப்பட்டது என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்துக்கள் அனைத்தும் குருசாமி நாயக்கருப் பாத்தியம் என்று 17 மற்றும் 18 பிரதிவாதிகள் தரப்பில் எதிா ்கட்சிசெய்து வருகிறார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் பேஸ் நாயக்கர் என்ற நாரணப்ப நாயக்கர் மகன் நாரணப்ப நாயக்கருக்கு அப்பாசாமி நாயுடு என்பவர் 1வது அயிட்டச் சொத்தைப்பொறுத்து 1913-ஆம் ஆண்டு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1ஆகும். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் 1வது அயிட்டச்சொத்தை பொறுத்து நாரணப்ப நாயக்கருக்கும் அவரின் மகன் சங்கரப்ப நாயக்கருக்கு சேர்ந்து குருசாமி நாயக்கருக்கு 1932ல் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.அது*

பி.வா.சா.ஆ.2 ஆகும். அப்பாசாமி நாயுடுவிடமிருந்து 1913ல் குருசாமி நாயக்கர் கிரையம் வாங்கிய ஆவணம் என்னிடம் காட்டப்படுவது தான் அது பி.வா.சா.ஆ.3 ஆகும். என்னிடம் காடட்ப்படடும் கிரைய ஆவணம் 2,3 அயிட்டச்சொத்தின் சர்வே எண்.233/1ஏ6,233/1பி மற்றும் 223/1/8 ல் உள்ள நிலம் சம்பந்தப்பட்ட ஆவணம் ஆகும். அது பி.வா.சா.ஆ.4 ஆகும். குருசாமி நாயக்கருக்கு கிரையம் எழுதிக்கொடுத்த பின்னர் நாராணப்ப நாயக்கருக்கு எந்தவித சம்பந்தமில்லை என்றால் சரிதான். 2முதல் 5 அயிட்டச்சொத்துக்களையும் குருசாமி நாயக்கர் தான் நேரிடையாக கிரையம் பெற்ற சொத்து என்றாலும் அதில் நான் பாத்தியதை கேட்க முடியாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்துக்கள் பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்றால் தெரியாது. அது எங்களது பெயரிலும் கிடையாது. 17,18 பிரதிவாதிகள் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். அது போலியான ஆவணம். நான் பட்டா கேட்டு எந்தக்காலத்திலும் விண்ணப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். கூட்டு அனுபவத்தில் உள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்லுவது போல் தாவாச்சொத்து கூட்டு அனுபவத்தில் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. குருசாமி நாயக்கர் 17,18 பிரதிவாதிகள் பெற்றோருக்கு 1951ல் நன்கொடை எழுதிக்கொடுத்திருந்த விவரம் தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 மாதத்திற்கு முன்பு தான் தெரியும்.

கு.வி.தொடர்ச்சி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
07.03.2020.

*06.03.2020 சாட்சிமனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.26/2012) பி.வா.சா.1. தெய்வாணை.*

*<u>5,6 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.</u>*

*எனதுதகப்பனார் என்னவென்றால் செண்பகம். நான் செண்பகம் என்பவரின் மகள் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனாரின் பெயர் செம்பன் மற்றும் செண்பகம் என்று உள்ளது. எனது தகப்பனாரின் பெயர் செம்பன் என்பது செண்பகம் என்பதும் ஒரே பெயர் என்பதற்கும் நான் செம்பன் என்பவரின் மகள் என்பதற்கு ஆதாரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எந்த தேதியில் இறந்தார் என்றால் 2002ல் இறந்து போனார். இறந்ததை காட்டும் இறப்பு சான்று உள்ளதா என்றால் வீட்டில் உள்ளது. நான் எனது தகப்பனாரின் வாரீசு என்பதை காட்ட வாரீசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்,. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளரா என்று எனக்குசரியாக நினைவில்லை. வழக்கு சொத்திற்கு எனது பெயரில் பட்டா இருப்பதாக நான் கூறுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞர் கொடுத்துள்ளேன். 3ம்பிரதிவாதி வெள்ளைச்சாமிக்கு தபசில் சொத்தை பொறுத்து*

பொது அதிகார ஆவணத்தை நானும், எனது அம்மாவும் எழுதிக்கொடுத்துள்ளோமா என்றால் எழுதிக்கொடுத்துள்ளோம். 5ம்பிரதிவாதி பால்ராஜ் தெரியுமா என்றால் தெரியும். பால்ராஜின் சித்தப்பா செண்பகம் என்பது பற்றி எனக்குத்தெரியுமா என்றால் தெரியாது. நான் பால்ராஜ் மற்றும் அவரின் மனைவி தாயம்மாளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.56/2016 வழக்கில் சர்வே எண்.27/1எ2 நிலத்திற்குரிய வழக்கு என்றால் சரிதான். இந்த வழக்கு தபசில் சொத்தைப்பொறுத்து 5ம்பிரதிவாதிக்கு அவரது சித்தப்பா செண்பகம் 2002ஆம் ஆண்டு ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் செண்பகத்திற்கு மனைவி மக்கள் இல்லையென உயில் எழுதிக்கொடுத்துள்ளார் ஆனால் அவரது மனைவி மற்றும் மகளான நாங்கள் இருக்கிறோம். தபசில் சொத்தைப்பொறுத்து 5ம்பிரதிவாதி 03.06.2016ல் ஒரு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மென்ட் மூலம்அவரது மனைவிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது மோசடியாக எழுதப்பட்ட ஆவணம். தாவாச்சொத்தை பால்ராஜ் மற்றும் அவரின் குடும்பத்தினர் தான் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த சொத்து யாருடைய பராமரிப்பிலும் இல்லாமல் தரிசாக உள்ளது. தபசில் சொத்தின் நான்கு மால்கள் தெரியுமா என்றால் உரிமையாளர்களின் பெயர்கள் எனக்குத்தெரியாது. தபசில் சொத்து எனது அனுபவத்தில் இல்லாததால் தான் எனக்கு நான்கு மால்கள் பற்றி விபரங்கள் எனக்குத் தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்து 4,5 பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும், நானும், பிற பிரதிவாதிகள் மற்றும் வாதிகள் கூட்டாக சேர்ந்து மோசடியாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கில் 5,6 பிரதிவாதிகள் பெயர்கள் தான் ஆவணங்களில் உள்ளது என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பில் கு.வி.</u>

சர்வே எண். 27/1எ3 என்பது வழக்கின் தபசில் சொத்து என்றால் சரிதான். சர்வே எண்.27/1எ2 என்பது எனது தகப்பனாரின் சொத்து என்றால் வி.ஏ.ஓ.எனது தகப்பனாரக்கு பட்டா மூலம் கொடுத்த சொத்து. எனது தகப்பனாரின் பெயர் செண்பகம் என்றால் சரிதான். எனது தாத்தாவின் பெயர் என்ன என்றால் பலவேசம். எனது தகப்பனாரின் பெயர் குறிப்பிடும் போது பலவேசம் மகன் செண்பகம் என்று தான் குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். நில உச்சவரம்பு திட்டத்தின் கீழ் அதிகாரியால் உபரி நிலங்களை கையகப்படுத்தி எனது தகப்பனார் மற்றும் ஊரில் உள்ள பல நபர்களுக்கு பட்டா மூலம்

நிலங்கள் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நிலங்கள் கொடுக்கப்பட்ட போது ஒவ்வொரு நபர்களுக்கும் அவர்களுக்குரிய நிலங்களுக்கு தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் பட்டா எண்.442ல் கண்ட சர்வே எண்.27/1எ2 நிலத்தை ஒதுக்கி பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.27/1எ3 நிலத்தை செண்பகம் மகன் வேலுக்கு நிலஉச்சவரம்பு அதிகாரி பட்டா எண்.443 கொடுக்கப்பட்டது என்றால் அது எங்கள் புஞ்சைக்கு கொடுக்கப்பட்ட பட்டா ஆகும். அந்த நிலம் சர்வே எண்.27/1எ3 நிலம் செண்பகம் மகன் வேலுவுக்கு கொடுக்கப்பட்ட நிலம் என்றால் சரியல்ல. சர்வே எண்.27/1எ3 நிலத்திற்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமில்லை என்றாலும், சர்வே எண்.27/1எ3 நிலத்திற்கும் சர்வே எண்.27/1எ2 நிலத்திற்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றுசொன்னால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் தபசில் சொத்தை எனது பூர்வீகமாகச்சொத்து என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். பூர்வீகச்சொத்து என்பதை காட்ட எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் கையில் வைத்துள்ளேன். பூர்வீகச்சொத்து என்பதை காட்ட ஆவணம் உள்ளதாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. தபசில் சொத்து சர்வே எண்.27/1எ3 நிலத்தை பொறுத்து 3ம்பிரதிவாதிக்கு பவர் எழுதிக்கொடுத்தது சட்டப்படி செல்லத்தக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எழுதிக்கொடுத்த பவரை வைத்து 3ம்பிரதிவாதி 4ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை பொறுத்து பட்டா எண்.1147 என்று மோசடியாக பட்டா உருவாக்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வி.ஏ.ஓ. தபசில் சொத்திற்கு பட்டா எண்.443 என்று தான் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
06.03.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண். 27 /2019.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் - சின்னத்தாய்.

த/பெ. -

கிராமம் -

தாலுகா -

தொழில் -

வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் வாதியின் தாயார் ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

மு.வி. மு.வி.தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வாதி தரப்பில்

கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
05.03.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண். 28 /2019.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் - தாமோதரன்.
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>முதல் விசாரணை.</u> நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

மு.வி. மு.வி.தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு

செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
05.03.2020.

05.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.154/2019) வா.சா.1. இராமானுஜம்.
பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.

வழக்கின் வாதி சுகுமார் எனது மருமகன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை அவருடைய பெயரில் கிரையம் பெறுவதற்காக எனது பெயரில பவர் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் வழக்கு சொத்தை அவருக்காக நான் பவர் ஏஜெண்ட் நிலைமையில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். பவரின் அடிப்படையில் தாவாச்சொத்தை பராமரிப்பு செய்ய எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளாரா என்றால் ஆமாம். தாவா வழக்கு தாக்கல் செய்ய வாதி எனக்கு தனி பொது அதிகாரம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்து எந்த சர்வே எண்,வார்டு எண்.மற்றும் தெருவின் பெயர் ஆகியவற்றை பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது மருமகனுக்குப் பாத்தியப்பட்டதாக சொல்லும் சொத்து விவரத்தை தபசிலாக காட்டவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்து அமைந்துள்ள இடம் லெட்சுமி ஆலை குடியிருப்பு பகுதியின் மேலக்காலனி என்றால் சரிதான். அது விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதி என்றால்சரிதான். லெட்சுமி ஆலை

மேலக்காலனியில் சுமார் 400வீடுகள் இருக்கும் என்றால்சரிதான். அந்த இடங்கள் அனைத்தும் லெக்குமி ஆலைக்கு பாத்தியப்பட்டு அங்கு பணிபுரியும் அவர்களின் நலனுக்காக தனித்தனி மனைகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட பகுதி என்றால் சரிதான். அவ்விடம் கிரையம் பெற்ற நபர்களிடமிருந்து மேற்படி பகுதிக்கு கோவில்பட்டிக்கு அருகில் உள்ள வெளி நபர்கள் கிரையம் பெற்று வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் மில் ஆலையில் அதிகாரியாக பணிபுரிந்து 2009ல் பணி ஒய்வு பெற்றேன் என்றால் சரிதான். எனது வீடு தபசில் சொத்திற்கு எவ்வகையில் உள்ளது என்றால் அடுத்த தெருவில் 4 வீடுகள் தள்ளி அமைந்துள்ளது. மேலக்காலனி குடியிருப்பில் குடியிருப்போர் நலச்சங்கம் என்று ஒருஅமைப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த அமைப்பில் நான் ஒரு உறுப்பினர் என்றால் சரிதான். அந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டு சுமார் 15 வருடங்கள் இருக்குமா என்றால் 2006ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அந்த அமைப்பு உருவாக்கப்பட்டதிலிருந்து கடந்த 2019 ஆகஸ்ட் மாதம் வரை ஜனகராஜ், என்பவர் தலைவராக செயல்பட்டார் என்றால் சரிதான். அவருக்கும் எனக்கும் சுமூகமான உறவு என்றால் சரிதான். எனதுவழக்குரையில் பிளாட் எண்.60ல் தென்புறத்திலிருந்து 4 அடி தள்ளி கீழ்பக்கத்தில் தாவாப்படக்கூடிய 10X 10 அளவுள்ள தண்ணீர் தொட்டிக்கு சிமெண்ட் தளம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கடிதத்தில் 05.09.2019ம் தேதியில் அனுப்பப்பட்டுள்ளது என்றும், ஷ தேதியில் 5,000/-லிட்டர் கொள்ளவு உடைய தண்ணீர் தொட்டிக்கு சிண்டக்ஸ் டேங்க் வைத்துள்ளார்கள் கான்கிரட் மேடை அமைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோன்று சீனிவாசன் கொடுத்த கடிதத்திலும் மேடை கட்டியிருக்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கடிதத்தை வட்டாரவளர்ச்சி வட்டாட்சியரிடம் நோடையாக கொடுத்த அத்தாட்சியோ அல்லது அதனை அவர் பெற்றுக்கொண்டதற்கான அத்தாட்சியோ அல்லது அவருக்கு அனுப்பப்பட்டதற்கான ஆதரவு ஆவணங்களோ இல்லை என்றால் சரிதான். 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் குடியிருப்போர் நலச்சங்கம் தேர்தலின் போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. அந்த தேர்தல் நடைபெற்றது எனக்குத்தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணம் இந்த வழக்கு தாக்கல் செய்யும் நோக்கத்திற்காக என்னால் பின்னிட்டு உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவா பகுதியில் உள்ள இடங்கள் மற்றும்

அமைத்துள்ள இடங்கள் பற்றி எனக்குத்தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 7 புகைப்படங்களும் எங்களது மேலக்காலனியில் இதற்கு முன்பு அமைக்கப்பட்ட தண்ணீர் தொட்டியின் புகைப்படம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். அந்த புகபைப்படத்தில் உள்ள தண்ணீர் தொட்டிகள் அனைத்தும் மேலக்காலனியில் குடியிருப்போரின் குடிதண்ணீர் வசதிக்காக அமைக்கப்பட்ட தண்ணீர்தொட்டி மற்றும் அடிபம்பு உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 புகைப்படத்தில் கண்டுள்ள அடிபம்பு ஒரு வீட்டின் காம்பவுண்டை ஒட்டி அமைந்துள்ளது. 5வது புகைப்பத்தில் வீட்டிற்கு முன்பாக அமைக்கபப்ட்டுள்ள டிரான்ஸ்பார்மர் வீட்டை ஒட்டி அமைந்துள்ளது என்றால்

- 3 -

சரிதான். எங்கள் மேலக்காலனியில் தாவா இடத்திற்கு கிழக்கு பக்கம் சமுதாயக்கூடம் அருதுகில் 30,000/-லிட்டர் பிடிக்கக்கூடிய தண்ணீர் தொட்டி உள்ளது. ஷ குடிநீர் மேல்நிலை தொட்டியிலிருந்து மேலக்காலனியில் உள்ள இடங்களுக்கு பூமிக்கடியில் குழாய் பதிக்கப்பட்டு அதன் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது என்றால் சரிதான். ஷ பி.வா.சா.ஆ.1 புகைப்படத்தில் கண்டுள்ள தொட்டிக்ள மற்றும் கட்டுமானங்கள் முன்னால் குடியிருப்பு நலச்சங்க தலைவர் ஜனகராஜ் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். தற்போது தாவாப்படும் இடத்திற்கு கிழக்கே கட்டப்பட்டுள்ள தண்ணீர் தொட்டிக்குரிய சிமெண்ட் மேடைத்தளம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட் இனாம்மணியாச்சி பஞ்சாயத்து நிதி உதவியால் கட்டப்பட்ட கட்டுமானம் என்றால் சரிதான். அவர்கள் முறையாக குடியிருப்போர் நலச்சங்கத்தின் மக்களிடமிருந்து விண்ணம் பெற்று பஞ்சாயத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் அடிப்படையில் ஷ கட்டுமானம் கட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. முன்னால் தலைவர் ஜனகராஜ் பதவிக்காலம் முடிவடைந்து அடுத்த தலைவர் பதவிக்கு வந்தவுடன் நானும் ஜனகராஜ் என்பவரும் இணைந்து காழ்புணர்ச்சி காரணமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தற்போது கட்டப்பட்டுள்ள 10 X10 அளவிலான தண்ணீர் தொட்டி மேடை மற்ற தண்ணீர் தொட்டியை போல் தான் கட்டப்பட்டுள்ளது என்றால் தாவாச்சொத்திற்கு அருகில் கட்டப்பட்டுள்ள மேடை 10 X10 அளவில் பெரியதாக கட்டப்பட்டுள்ளது மற்ற தொட்டிகள் அனைத்தும் சிறிய அளவில் 500 மற்றும் 1000 லிட்டர் கொள்ளவுக்குரிய தொட்டிகள் அமைக்கும் அளவிற்கு சிறிய

கட்டுமானமாக உள்ளது. எனது வீட்டிற்கு அருகில் அவ்வாறு சிறிய கட்டுமானம் வைப்பதற்கு எனக்கு ஆட்சேபைனை உள்ளது என்றால் சரிதான். தற்போது கட்டப்பட்டுள்ள கட்டுமானம் பெரிய அளவில் இடையூறாக உள்ளது. எனது வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது போல் தென்பக்கத்திலிருந்து 4 அடியில் தள்ளி கட்டப்பட்டுள்ளதாக கூறுவது சரியா அல்லது 7 அடி தள்ளி கட்டப்பட்டுள்ளதா என்றால் தற்போது அளந்து பார்த்ததில் அது 7 அடி தள்ளி கட்டப்பட்டுள்ளது. எனது வழக்குரையில் பிளாட் எண்.60-க்குரிய தென்வடல் மற்றும் கிழமேல் அளவு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தென்வடல் அளவு மொத்தம் 52 அடி என்றால் சரிதான். அந்த 52 அடியில் தென்பக்கம் முணையிலிருந்து வடக்கு நோக்கி 7அடி தள்ளி ஷ கட்டுமானம் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் நகல் ஆவணம் என்றாலும் அந்த ஆவணம் வழங்கியவரின் கையொப்பம் மற்றும் முத்திரை இல்லை என்றாலும் அந்த ஆவணம் ஏற்றுக்கொள்ள ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் வழக்கிற்காக எங்களால் உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்துள்ள ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் இனாம்மணியாச்சி பஞ்சாயத்து தனிஅலுவலரால் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அதற்கு அடிப்படையான திருநெல்வேலி நகரமைப்பு திட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட அனுமதி உத்தரவு நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கட்டப்பட்டுள்ள தாவாப்படும் தொட்டிக்காக குடிநீர் இணைப்புக்காக பிரதான மேல்நீர்த்தோக்க தொட்டியிலிருந்து பூமிக்கடியில் குழாய் இணைப்பு பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிளாட் எண்.60க்கு எனது மருமகன் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவாப்படும் வீட்டு மனையில் முன்பு ஒரு கிணறு இருந்தது என்றால் சரிதான். அந்த கிணறு தற்போது மூடப்பப்பட்டு அதில் பிளாட் போடப்பட்டுள்ளது என்றால் எங்கள் பிளாட்டில் பாதியும் எங்கள் பிளாட்டிற்கு மேல்பக்கம் உள்ள பிளாட்டில் பாதியும் அமைந்திருந்தது. அந்த கிணற்றின் நீள அகலம் தெரியுமா என்றால் தெரியாது. அது பெரிய கிணறு என்று தெரியுமா என்றால் தெரியும். பொதுவாக கிணறு இருந்து மூடப்பட்ட பகுதியில் கட்டுமானம் எழுப்பினால் அது ஸ்திரமாக இருக்காது என்றால் பொறியாளரிடம் கேட்டுத் தான் பிளாட்டு வாங்கப்பட்டது. வழக்கு தாக்கல் செய்யும் போது பஞ்சாயத்தின் தனி கட்டுப்பாட்டில் இருந்தது, தற்போது பஞ்சாயத்து தலைவர் பொறுப்பேற்று

*விட்டார் என்றால் சரிதான். அவர்கள் வழக்கில் 1ம்பிரதிவாதியாக*



*சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். கோடை காலத்தில் எங்கள் பகுதியில் தண்ணீர் கடுமையான தட்டுப்பாடு இருக்கும் என்றால் சரிதான். கடந்த ஆண்டு வரை தண்ணீர் தட்டுப்பாடு இருந்தது என்றால் சரிதான். இலக்குமி ஆலை மேலக்காலனி மக்களின் நீண்ட நாட்கள் கோரிக்கை நிறைவேற்றும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் மேற்படி பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டைநீக்கும் வகையில் 04.07.2019ம் தேதி இனாம்மணியாச்சி ஊராட்சிமன்ற அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் கோவில்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலரின் 08.08.2019ம் தேதிய நடவடிக்கை உத்தரவின் படி தண்ணீர்தொட்டி அமைக்க தீர்மானிக்கப்பட்டு 02.09.2019ம் தேதியிலேயே பிளாட்பார்ஃம் அமைக்கும் பணி நிறைவேற்றப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. நான் ஊரில் இல்லை. எனது வழக்குரையில் சொல்லியுள்ளது போல் தண்ணீர் தொட்டி அமைந்துள்ள நடைபாதையை பயன்படுத்தும் பள்ளி மாணவர்களுக்கோ அப்பகுதி மக்களுக்கோ எவ்வித பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. இந்த பணிகள் அமைக்கும் போது நானும், வாதிகளின் தகப்பனாரும் அருகில் இருந்துவிட்டு ஏதோ உள்நோக்கத்துடன் தற்போது தடைஏற்படுத்தும் பொருட்டு வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் பின்னால் எழுப்பக்கூடிய கட்டுமானத்திற்கு தண்ணீர் தொாட்டி மூலம் எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்று சொன்னால் அது தவறு. என்னுடைய வழக்கின் மூலம் பொது மக்களிளன் நன்மைக்காக அரசு பணியும் அரசு நலத்திட்டமும் பாதிப்படையக்கூடியதாக அமைந்துள்ளது என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல.*

*ம.வி.இல்லை.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*05.03.2020.*

*05.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.230/2016) வா.சா.2.முருகேசன்.*

*<u>3முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.</u>*

*வாதியை எனக்கு எவ்வளவு காலங்களாக தெரியும் என்றால் சுமார் 15 வருடங்களாக தெரியும். வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு உறவினர். 15வருடத்திற்கு முன்பு வாதி எங்கு இருந்தார் என்றால் தூத்துக்குடியில் இருந்தார். வாதி எனக்கு எப்படி உறவு என்றால் வாதிஎனக்கு அக்கா முறை வேண்டும். வாதிக்கும், ஜெயபாலனுக்கும் திருமணம் நடைபெற்றதற்கு எனக்கு திருமண அழைப்பிதழ் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அந்த நிகழ்ச்சியில் எத்தனை நபர்கள் கலந்து கொண்டார்கள் என்றால் சுமார் 60 நபர்கள் கலந்து கொண்டார்கள். திருமணம் நடைபெற்ற கோவில் பெரிய கோவில் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு ஜெயராணி மந்தித்தோப்பில் இல்லை என்றால் சரிதான். வாதிக்கு ஏற்கனவே திருமணம் முடிந்திருந்தது ஏ்னறால் சரிதான். வாதிக்கும், ஜெயபாலனுக்கும்திருமணம் நடைபெற்றதாக சொல்லும் காலத்தில திருமணம் பதிவு செய்யப்பட்டியிருந்தது என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. திருமணம் நடைபெற்ற கோவில் அறநிலைதுறைக்கு பாத்தியப்பட்ட அரசு கோவில் என்றால் சரிதான். வாதியின் முதல் கணவர் எப்போது இறந்தார் என்று எனக்குத்தெரியுமா என்றால் தெரியாது. ஜெயபாலன் குடும்பத்தை பற்றி எனக்குத்தெரியாது என்றால் சரிதான். ஜெயபாலன் எனக்கு பழக்கம் கிடையாது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்புதான் அவருக்கும் எனக்கும் பழக்கம். ஜெயபாலனுக்கு கோவில்பட்டியில் எங்கு வீடு உள்ளது என்ற விவரம் எனக்குத்தெரியுமா என்றால் தெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் பொய்யான விவரங்கள் என்றாலும் நான் ஜெயபாலன் வீட்டிற்குஅருகில் குடியிருந்தாக சொல்லுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. ஜெயபாலன் இறந்த போது அவரின் இறுதி சடங்கு கோவில்பட்டியில் தான் நடைபெற்றது என்றால் சரியல்ல. வாதி எனக்கு உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.வி.இல்லை.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*05.03.2020.*

*04.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.278 /2013) பி.வா.சா.1. காசிபாண்டியன்*
*<u>வாதி தரப்பில் கு.வி.</u>*

*நானும், எனது சகோதரர் செல்வராஜம் சேர்ந்து தான் வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். நான் படித்துள்ளேனா என்றால் படிக்கவில்லை. கையெழுத்து மட்டும் செய்வேன். எனது சகோதரின் மகன் காவல்துறையில் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். எனது தம்பி பாலையா படிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கில் நான் தாக்கல்செய்துள்ள ஆவணங்களில் எனது சகோதரர் ரேகை தான் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எனது நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் ' எனது தகப்பனார் 1995ல் தபசில் சொத்தை பொறுத்து எங்களுக்குள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொடுத்துவிட்டார்' என்று கூறியுள்ளேன் என்றால் அவ்வாறுநான் கூறவில்லை. எனது நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேனா என்றால் நான் படிக்கவில்லை. ஆனால் என்னிடம் எனது வழக்கறிஞர் படித்துக்காட்டினார். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் காலத்தில் எனது சகோதரர் என்மீது தாவா வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் எந்தக்காலத்திலும் பாகம் செய்து கொடுத்தாக எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அண்ணன் அவரின் பாகத்தை விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். எனக்கு எந்த தேதியில் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் நாளது தேதிவரை எனக்கு பாகம் ஒதுக்கப்படவில்லை. எனது தம்பி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு பாகம் வாங்கித்தருவதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது சகோதரர் பாலையாவுக்கு எப்போது பாகம் ஒதுக்கி கொடுத்தோம் என்றால் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு கொடுத்தோம்.*

*நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது நாங்களாக சமரசம் செய்துகொண்டால் அது செல்லாது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தின் மூலம் வழக்கை முடித்துக்கொள்வதாக எங்கள் வழக்கறிஞர் மூலம் எந்த ஏற்பாடும்செய்யவில்லைஎ ன்றால் சரிதான். பிராதுப்படி எனது சகோதரரின் பாகம் கொடுக்க எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றால் அவரின் பாகம்கொடுக்கப்பட்டு விட்டது. ஆகவே எனக்கு ஆட்சேபனை உண்டு. எனது தம்பிக்கு சரியான பாகம் கொடுக்கப்படவில்லை என்றாலும் அதனால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தம்பிக்கு அவரின் பாகம் கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 2 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் 2 ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மையான நிலவரம் தெரியவரும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.*
*ம.வி.இல்லை.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*04.03.2020.*

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.156 /2015.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் - சென்னையா
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 03.10.1974ம்தேதியிட்ட கிருஷ்ணசாமி நாயக்கர், பால்சாமி நாயக்கர் பொன்னுச்சாமி நாயக்கர், குமாரசாமி நாயக்கர், முத்துசாமி நாயக்கர் ஆகியோர்களிடமிருந்து பெற்ற கிரையத்தின் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.1. |
| 2 | 24.01.1991ம்தேதியிட்ட வாதிக்கு கோவில்பட்டி நத்தம் நிலவரித்திட்டம் வட்டாட்சியர் அவர்கள் கொடுத்த பட்டா அசல் வா.சா.ஆ.2. |
| 3 | 26.05.2006ம் தேதியிட்ட லெக்கம்மாள் மற்றும் ஊமத்துரை ஆகியோர்கள் வாதிக்கு கிரையம் கொடுத்த தபசில் சொத்தின் கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.3. |
| 4. | நீதிமன்ற ஆணையரின் அறிக்கை, வரைபடத்துடன் எக்ஸ்.1 ஆகும். |
| 5 | நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள புல வரைபடம் நகல், அடங்கல் ஆகியவை எக்ஸ்.2 ஆகும். |

(வா.சா.ஆ. 3 ஆவணம் பிரதிவாதி தரப்பினருக்கு வழங்கப்பட்ட நகலில் 2ம் தரப்பினரின் கையொப்பம் இல்லாமல் இருப்பதால் வா.சா.ஆ.3 ஆவணம் குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
04.03.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.188 /2015.
வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.
.....

பெயர் - பூசெல்வி
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் 3ம்வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 28.11.1993ம் தேதிய ராஜாமணி இறப்பு சான்றுஅசல் வா.சா.ஆ.1. |
| 2 | 10.04.2015ம் தேதிய 1ம்பிரதிவாதியின் மேலெழுத்துக்கடிதம் அசல் வா.சா.ஆ.2. |
| 3 | 1ம்வாதி இந்திய தேர்தல் ஆணையம் வழங்கிய அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.3. |
| 4 | 2ம்வாதி இந்திய தேர்தல் ஆணையம் வழங்கிய அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.4. |
| 5 | 3ம்வாதி இந்திய தேர்தல் ஆணையம் வழங்கிய அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.5. |

( வா.சா.ஆ.3 முதல் 5 ஆவணங்கள் நகல் என்பதால் அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது.).
பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

கு.வி.பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு

செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
04.03.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.139 /2014.
பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். பி.வா.சா.1.

.....

பெயர் - பி.முருகன்.
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் 4ம்பிரதிவாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 12.06.1976 அன்று பிராது தபசில் 4ம்அயிட்டச்சொத்தை உள்ளடக்கி நாராணசாமி நாயக்கர் வகையறாவினர் கோவில்பட்டி சார்பதிவக ஆவண எண்.807/1976ன் மூலம் பிறப்பித்துக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் நகல் பி.வா.சா.ஆ.13. |
| 2 | 14.06.1990 அன்று பிராது தபசில் 4ம்அயிட்டச்சொத்தை நாராயணசாமி நாயக்கர் மகன் சீனிவாசன் செல்லையா நாயக்கர் மகன் ராஜேந்திரனுக்கு கோவில்பட்டி சார்பதிவக ஆவண எண்.1638/1990ன் மூலம் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் நகல் பி.வா.சா.ஆ.14. |
| 3 | 25.05.1995 அன்று பிராது தபசில் 4வது அயிட்டச்சொத்தையும், வேறு சொத்தையும் 4ம்பிரதிவாதிக்கு கோவில்பட்டி சார்பதிவக ஆவண எண்.1668/1995ன் மூலம் ராஜேந்திரன் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.15. |
| 4 | 25.05.1996 அன்று பிராது தபசில் 4ம்அயிட்டச்சொத்துக்கு 4ம்பிரதிவாதி பெயருக்கு பட்டா மாறுதல் செய்து கோவில்பட்டி வட்டாட்சியர் பிறப்பித்துள்ள உத்தரவு நகல் பி.வா.சா.ஆ.16. |
| 5. | 01.06.1998 அன்று பிராது தபசில் 4ம்அயிட்டச்சொத்திற்கு 4ம்பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்டுள்ள சிட்ட நகல் பி.வா.சா.ஆ.17. |
| 6. | 13.11.2000 அன்றுபிராது தபசில் 4ம்அயிடடச்சொத்திற்கு 4ம்பிரதிவாதி |

| | |
|---|---|
| | பெயருக்கு கோவில்பட்டி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட நில உரிமைப்பதிவேடு நகல் பி.வா.சா.ஆ.18.<br>(அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்பட்டது). |
| 7 | 25.06.2012அன்று பிராது தபசில் 4ம்அயிட்டச்சொத்திற்கு 4ம்பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்டுள்ள 477 நம்பர் கணினி பட்டா அசல் பி.வா.சா.ஆ.19 |
| 8 | 4ம்பிரதிவாதி பெயரிலுள்ள தீர்வை ரசீதுகள் 10 எண்ணம் - பி.வா.சா.ஆ.20. |
| 9. | 29.08.2019 அன்று தபசில் 4ம் அயிட்டச்சொத்திற்கு 4ம்பிரதிவாதி பெயருக்கு வழங்கப்பட்ட அடங்கல் அசல் பி.வா.சா.ஆ.21.ஆகும். |

<u>கு.வி.</u>வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
04.03.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.136 /2016.

பிரதவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். பி.வா.சா.1.

.....

பெயர் - சேவியர் செல்வராஜ்.
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் 1ம்பிரதிவாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 01.04.2005ல் குருவிநத்தம் கிராம சர்வே எண்.211/08ல் உள்ள 37 செண்ட் புஞ்சை நிலத்தில் தென்புறம் 18செண்ட் புஞ்சை நிலத்தை பொறுத்து வாதியின் தாயரான மிக்லேம்மாள்,வாதி சூசை பிரான்சிஸ், மற்றும் வாதியின் குமாரர்கள் அந்தோணிமுத்து,ஆரோக்கியராஜ் ஆகிய நால்வரும் சேர்ந்து எழுதிக்கொடுத்த பொதுஅதிகாரத்தின் அடிப்படையில் குருவிநத்தம் கிராம வெள்ளைய ரெட்டியார் குமாரர்,திருமால் என்பவர் கோவில்பட்டி தீத்தாம்பட்டியை சேர்ந்த சண்முக நாயக்கர் குமாரர்,சண்முகச்சாமி நாயக்கருக்கு எழுதிக்கொடுத்த பதிவுக்கிரைய ஆவணம் சப்ரி நகல் பி.வா.சா.ஆ.8. |
| 2 | 18.08.2008ல் குருவிநத்தம் கிராம புஞ்சை சர்வே எண்.213/2ல் ஏக்கர் 1.39 தென்புறம் 69.5 செண்ட் புஞ்சை நிலத்தைப்பொறுத்து சென்னை சோளிங்கநல்லூர் தங்கராஜ் மனைவி இருதயமேரி பெயரில் உள்ள பதிவுக்கிரைய ஆவணம் சப்ரி நகல் பி.வா.சா.ஆ.9. |
| 3 | 03.06.1999ல் குருவிநத்தம் கிராம புஞ்சை சர்வே எண்.213/2ல் ஏக்கர் 1.39 தென்புறம் 69.5 செண்ட் புஞ்சை நிலத்தைப்பொறுத்து கோவில்பட்டி தனுஷ்கோடி செட்டியார் குமாரர் முனியசாமி செட்டியார் பெயரில் உள்ள பதிவுக்கிரைய ஆவணம் சப்ரி நகல் பி.வா.சா.ஆ.10. |
| 4. | 14.09.1985ல் பிராதின் தபசில் சொத்துக்களைப்பொறுத்து வாதி,1ம்பிரதிவாதி மற்றும் தாயார் தீருமதி.மிக்கேலம்மாள் பெயரிலுள்ள கூட்டுப்பட்டா எண்.516 அசல் பி.வா.சா.ஆ.11. |
| 5. | 29.05.1985-08.06.1986,30.05.1993-30.05.1993-21.03.1997-10.04.1999-17.08.2000 ஆகிய தேதிகளில் பிராது தபசில் கண்டசொத்துக்களைப்பொறுத்து 1ம்பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதுகள் 7 எண்ணம் அசல் பி.வா.சா.ஆ.12. |
| 6 | 22.10.2003ல் பிராது தபசில் சொத்துக்களைப்பொறுத்து வாதி,1ம்பிரதிவாதி மற்றும்தாயார் திருமதி.மிக்கேலம்மாள் பெயரில் உள்ள கணினிப்பட்டா எண்.517,கோவில்பட்டி மண்ட துணை வட்டாட்சியரால் அத்தாட்சி செய்யப்பட்டது அசல் பி.வா.சா.ஆ.13. |
| 7. | 21.08.2012 பிராது தபசில் கண்ட சொத்துக்களைப் பொறுத்து பட்டா |

| | |
|---|---|
| | எண்.517க்கு 1ம்பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது அசல் பி.வா.சா.ஆ.14. |
| 8. | 28.08.2012ல் பிராது தபசில் கண்ட சொத்துக்களை பொறுத்து வாதி, 1ம்பிரதிவாதி மற்றும் தாயார் திருமதி.மிக்கேலம்மாள் பெயரிலுள்ள கணினிப்பட்டா எண்.517 அசல் பி.வா.சா.ஆ.15. |
| 9. | 06.09.2016ல் பிராதின் தபசில் கண்ட சொத்துக்களைப்பொறுத்து பட்டா எண்.517க்கு 1ம்பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது அசல் பி.வா.சா.ஆ.16. |
| 10. | 28.07.2016ல் பிராதின் 3வது அயிட்ட சொத்தைப்பொறுத்து 1,2,6,7,9 பிரதிவாதிகள் பெயரில் பதிவாகியுள்ள பட்டா எண்.808க்கான கணினிப்பட்டா அசல் பி.வா.சா.ஆ.17. |
| 11. | 02.03.2020ல் பிராதின் 3வது அயிட்ட சொத்தைப்பொறுத்து பட்டா எண்.808க்கு 1ம்பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது அசல் பி.வா.சா.ஆ.18. |
| 12. | 02.07.2012ல் பிராதின் 1வது அயிட்ட தபசில் கணட் சொத்துக்களில் கட்டிடம் கட்டுவதற்கு குருவிநத்தம் ஊராட்சிமன்ற தலைவரால் வழங்கப்பட்ட வரைபட அனுமதிக்கான உத்தரவு அசல் பி.வா.சா.ஆ.19. |
| 13. | 07.08.2012ல் பிராதின் 1வதுஅயிட்ட சொத்தில் கட்டிடம் கட்டும் வகைக்காக குருவிநத்தம் ஊராட்சிக்கு செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான ரசிது பி.வா.சா.ஆ.20. |
| 14. | 31.03.2015,31.03.2016,09.087.2016,28.03.2018,03.03.2020 ஆகிய தேதிகளில் பிராதின் 1வது அயிட்ட சொத்தக்களில் கட்டுப்பட்டு உள்ள கதவு எண்எண்.1/214,1,2,3 மற்றும் 1/215-1,2,3 ஆகிய கடை கட்டிடங்களுக்கு 2ம்பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதகள் 30 எண்ணம் அசல் பி.வா.சா.ஆ.21. |
| 15 | 19.09.1996ல் பிராது தபசில் கண்ட சொத்துக்கைளப் பொறுத்து 1ம்பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டா பாஸ்புத்தகம் அசல் பி.வா.சா.ஆ.22. |
| 16 | 23.10.1983ல் வாதியும்,1ம்பிரதிவாதியும், பிராது தபசில் கண்ட சொத்துக்கள் உள்ளிட்ட குடும்ப சொத்துக்களைப் பொறுத்து எழுதிக்கொண்ட குடும்ப ஏற்பாட்டு குறிப்பு ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.23ஆகும். |

பி.வா.சா.ஆ.23 ஆவணம் பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணம் என்றும், அதனை பிரதிவாதி தரப்பில் நிருபணவம் செய்யும்வரையில் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்று வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

குு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
04.03.2020.

*04.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.12/2013) வா.சா.1. திருமணிப்பாண்டியன்.*
*<u>5,6,7,19 ஆகிய பிரதிவாதிகள்தரப்பில் கு.வி.</u>*

*என்னிடம் காட்டப்படும் ஆவணம் வாதிகள் அவர்களுக்காக வழக்குளநடத்த எனக்கு அளிக்கப்பட்ட பொது அதிகாரம் ஆவணம் என்றால் சரிதான். அது எங்கள் தரப்பில் பிராதுடன் தாக்கல ் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அந்த ஆவணம் எக்ஸ்.1ஆகும். ஷ ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். எக்ஸ்.1ஆவணத்தில் 12.05.2014ல் நானும்,வாதிகளும் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்தை விற்பனை செய்யவும் எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்துக்களை நான் கிரையம் பெற்றுள்ளேனா என்றால் தபசில் 4வதுஅயிட்டச்சொத்தை நான்கிரையம் பெற்றுள்ளேன். அந்த கிரையப்பத்திரத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பெற்ற கிரையத்தைப்பொறுத்து எனது பிராதில் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் பவர்ஏஜெண்டாக இருந்து சமூகம் நீதிமன்றத்தில் எத்தனை வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றால் 5,6 வழக்குகள் தாக்கல்செய்துள்ளேன்.அந்த 5,6 வழக்குகளும் மந்தித்தோப்பு கிராம சர்வே எண்ணைப் பொறுத்தது என்றால் மந்தித்தோப்பு கிராம சொத்துக்களை பொறுத்து 3 வழக்குகளும் இனாம்மணியாச்சி கிராம சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களைப் பொறுத்து 3 வழக்குகளும் தாக்கல் செய்துள்ளேன். நான் பவர்ஏஜெண்டாக இருந்து தாக்கல ் செய்துள்ள அனைத்து வழக்குகளம் ஒப்புமை பதிவேட்டின் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்கும் வா.சா.ஆ.1 ஒப்புமை பதிவேட்டின் அடிப்படையில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி சர்வே எண்.58/1ல் உள்ள 1ஏக்கர் 63 செண்டு முழுவதும் மாரியப்ப பிள்ளை மனைவி மாடத்தியம்மாளின் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். அதில் பட்டா எண்.424 என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா எண்.424க்குமாடத்தியம்மாள் செலுத்திய தீர்வை ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்துக்கள் மாடத்தியம்மாளுக்குப் பாத்தியப்பட்டது என்பதை காட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர வேறு ஆவணம் இல்லை என்றால் சரிதான்.*

தாவாப்படும் சொத்துக்கள் தற்போது 4 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டடுள்ளது என்றால் சரிதான். 4 உட்பிரிவுகளைத்தான் பிராதுசொத்து விவரமாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 4 உட்பிரிவுகளுக்குரிய பட்டாக்கள் தான் வா.சா.ஆ.2,வா.சா.ஆ.16 முதல்18 வரையிலான ஆவணங்கள் என்றால் சரிதான். 4ஆவணங்களிலும் சொல்லப்பட்டுள்ள பட்டாவிற்கான தீர்வை ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர இதர பட்டாக்காள் பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 4ம்பிரதிவாதி 5ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் 4ம்பிரதவாதி ஆதிநாராணன் 5ம்பிரதிவாதி இராமசுப்புக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என்றால்ச ரிதான். அதன் மொத்த அளமான 1ஏக்கர் 67 செண்டில் வடபக்கம் 83 1/2 செண்டில் கீழ்பக்கம் 43 1/2 செண்டுக்குரியது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணம் 5ம்பிரதிவாதி இராமசுப்பு 6ம்பிரதிவாதியான பூவேசுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என்றால் சரிதான். ஷ கிரையப்பத்திரம் 1 ஏக்கர் 67செண்டில் வடபக்கம் 83 1/2செண்டில் மேல்பக்கம் வடபுறத்தில் 21செண்டு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தில் 4ம்பிரதிவாதி ஆதிநாராயணன் 7ம் பிரதிவாதி இளங்கோவனுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என்றால் சரிதான். 1ஏக்கர் 67 செண்டில் வடபக்கம் 83 1/2செண்டில் மேல்பக்கம் தென்புறம் 22 செண்டைபொறுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் 5ம்பிரதிவாதி இராமசுப்பு 8,9 பிரதிவாதிகளான அமுதா,கோபாலகிருஷ்ணனுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என்றால்சரிதான். சர்வே எண்.58/1சி-யை பொறுத்து எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த சொத்து பிராது தபசில் 3வது அயிட்டச்சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணம் 6ம்பிரதிவாதி பூவேசு கிருஷ்ணசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என்றால் சரிதான். அதில் சர்வே எண்.58/1எ குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இது பிராது தபசில் 1வது அயிட்டச்சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணம் 7ம்பிரதிவாதி இளங்கோவன் 10ம்பிரதிவாதி கிருஷ்ணசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என்றால் சரிதான். சர்வே எண்.58/1பி கண்டுள்ளது என்றால் சரிதான். பிராது தபசில் 2வது அயிட்டச்சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணத்தில் 17,18 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் என்றால் சரிதான். சர்வே

எண்.58/1டி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது தபசில் 4வதுஅயிட்டச்சொத்து என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 17,18 பிரதிவாதிகள் தான் 19ம்பிரதிவாதி முனியம்மாளுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். ஷை ஆவணம் பிராது 4வது அயிட்டச்சொத்தில் ஒரு பகுதி என்றால் சரிதான். வா.சா.ஆ.20 ஆவணத்தில் தாவாச்சொத்து இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.21 ஆவணத்தில் 1ம்பிரதிவாதி இராதாகிருஷ்ணன் மற்றும் அவரின் சகோதரர்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட பாகவிஸ்திப்பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.21 ஆவணத்தில் தாவாச்சொத்து இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.22 ஆவணம் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.22 ஆவணம் தாவாச்சொத்துக்களைப் பொறுத்து கோவில்பட்டி வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியரிடம் ஆகியவர்களிடம் நான் கொடுத்த மனு சம்பந்தமப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். அதில் கோவில்பட்டி வட்டாட்சியர் கொடுத்த மனு ஒன்று இணைக்கபப்ட்டுள்ளது என்றால்சரிதான். அந்த உத்தரவு காசிமணி சர்வே எண்.58/1டி-யைபொறுத்து பட்டா மாற்றம் செய்ய கொடுத்த மனுசம்பந்தமான உத்தரவு என்றால் சரிதான். காசிமணி கொடுத்த மனுவில் நான் தரப்பினர் கிடையாது என்றால் சரியல்ல. ஷை உத்தரவில் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் காசிமணிக்காக நான் தான் மனு தாக்கல் செய்தேன். அந்த மனுவின் பேரில் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அதில் காசிமணியையும் விசாரித்தார்களா என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. சர்வே எண்.58/1டி-யைபொறுத்து காசிமணி கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் ஆவண எண்.191/97ன் படி கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசிமணியை தாவா வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளேன். காசிமணி கொடுத்த மனுவின் பேரில் காசிமணி பெயரில பட்டா மாற்றம் செய்ய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த உத்தரவின் பேரில் காசிமணி கோவில்பட்டி கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்தார் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டில் தாவா வழக்கை காரணம் காட்டி நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி கோட்டாட்சியர் உத்தரவு பிறபர்பித்துள்ளார் ஏ்னாறலசரிதான்.அந்த விவரங்கள் ஷை உத்தரவில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அந்த உத்தரவு என்னிடம்

காட்டப்படும் ஆவணம் தான் அதுபி.வா.சா.ஆ.2 ஆகும்.நான் கோவில்பட்டி வட்டாட்சியர்,கோட்டாட்சியரிடம் மனுக்கொடுத்த விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தில் எள்ளு, அவிரி,பாசிபயிரு பயிர்செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான பயிர்எடுப்பு அடங்கல் வழக்கில தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்துக்கள் 1995-லிருந்து பல்வேறு கிரையங்கள் ஆகியுள்ளது என்றால் சரிதான். 2012மார்ச் மாதம் தான் அந்த விவரங்கள் தெரியவந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் பெற்ற கிரையங்கள் செல்லாது என்றுபரிகாரம் கேட்கவில்லை என்றால்சரிதான். தாவாச்சொத்துக்களை பிரதவிாதிகளிடமிருந்து மீட்டுக்கொடுக்க வேண்டி எந்தவித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். பிராது தபசில் சொத்துக்களை பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது ஏ்னறால் பிளாட்டு போடவில்லை. அதற்கான நகல்கள் எடுத்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வில்லங்கச்சான்றிதழ் தாவாச்சொத்துக்குரிய சர்வே எண்.58/1டி-யை பொறுத்த ஆவணம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.3 ஆகும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 05.04.2011 அன்று இராமசேது, சுப்பாலட்சுமி ஆகியோர்கள் பாஸ்கரன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவண குறிப்பு விவரத்தில் பிளாட் எண்.3 என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இராமசேது என்பவர் பல நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நபர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மாடத்தியம்மாளின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. மாடத்தியம்மாளின் வாரீசுகள் வாதிகள் தான் என்பதை காட்ட வாரீசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் மாடத்தியம்மாளின் வாரீசுகள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் நகல் எடுத்து வைத்துக்கொண்டு அதில் கண்ட வாரீசுகள் தான் மாடத்தியம்மாளின் வாரீசுககள் என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்துக்கள் வாதிகளுக்கோ நான் சொல்லும் மாடத்தியம்மாளுக்கோ எவ்வித பாத்தியமில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் வாதிகளுக்கு எவ்வித அனுபமும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்துக்களை பொறுத்து 5ம்பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை 8.9 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால்

சரியல்ல. 6,7 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்தை 10ம்பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 5முதல் 7 பிரதிவாதிகள் பெற்ற கிரையங்களும் அவர்கள் செய்து கொடுத்த கிரையங்களும் சட்டப்படி செல்லும் என்று சொன்னால் சரியல்ல. 17,18 பிரதிவாதிகள் மாடத்தியம்மாளிடம் பெற்ற கிரையங்கள் சட்டப்படி செல்லும் என்று சொன்னால் சரியல்ல. 17,18 பிரதிவாதிகள் 19ம்பிரதிவாதிக்கு செய்து கொடுத்த கிரையமும் சட்டப்படி செல்லும் என்று சொன்னால் சரியல்ல. மாடத்தியம்மாள் 1982ல் இறந்து போனதாக சொல்லுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. வாதிகள் மாடத்தியம்மாளின் வாரீசு என்று மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து என் மூலமாக வழக்குதாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்கும் கெட்ட எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
04.03.2020.

*மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.*

*ஓ.எஸ்.எண். 25/2019.*

*வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.*

.....

*பெயர் - எஸ்.ராஜாமணி.*
*த/பெ. -*
*கிராமம் -*
*தாலுகா -*
*தொழில் -*
*வயது -*

*1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 02 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.*

| | |
|---|---|
| 1 | 19.02.1988ம்தேதியிட்ட வாதியின் தகப்பனார் சங்கனின் இறப்புச்சான்றிதழ் அசல் வா.சா.ஆ.1. |
| 2 | 11.05.1981ம்தேதியிட்ட வாதியின் தாயார் கருப்பியின் இறப்புச்சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2. |
| 3 | 13.01.1984ம்தேதியிட்ட வி.ஏ.ஓ.சான்றிதழ் நகல் வா.சா.ஆ.3. |
| 4 | 23.11.1966ம் தேதியிட்ட வாதியின் பள்ளிச்சான்றிதழ் நகல் வா.சா.அ.4. |
| 5. | 26.03.2016ம் தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது நகல் வா.சா.ஆ.5. |
| 6. | வாதியின் ஆதார் அடையாள நகல் வா.சா.ஆ.6.(அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது). |
| 7 | 17.11.1958ம் தேதியிட்ட வாதியின் தந்தை சங்கன் பெயரில் உள்ள பத்திரம் நகல் வா.சா.ஆ.6. |
| 8. | 18.06.2017ம்தேதியிட்ட 1ம்பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு நகல் வா.சா.ஆ.8.ஆகும். |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>கு.வி.</u>வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
02.03.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஆர்.சி.ஓ.பி.எண். 06 /2016.
மனுதாரர் தரப்பு சாட்சி வாக்குமூலம். ம.சா.1.

.....

பெயர் - கணபதி மூப்பனார்.
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 02 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை.</u> நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை மனுதாரர் தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 23.03.1960ல் தபசில் சொத்தைப்பொறுத்து கணபதி மூப்பனாருக்கு செண்பகம் ஆசாரி எழுதிக்கொடுத்த பதிவு கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1. |
| 2 | தபசில் கட்டிடத்திற்குரிய தீர்வை ரசீது ம.சா.ஆ.2. |
| 3 | 16.10.1941ல் தபசில் சொத்தை அதன் உரிமைாளர் கோவில்பட்டி கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்ததை காட்டக்கூடிய அடமானப்பத்திரம் அசல் ம.சா.ஆ.3. |
| 4 | எதிர்மனுதாரர் எனக்கு எதிராக தாக்கல் செய்த ஆர்.சி.ஓ.பி.எண்.01./2016 வழக்கின் சார்பு நகல் ம.சா.ஆ.4. |
| 5 | எதிர்மனுதாரர் எனக்கு எதிராக தாக்கல் செய்த அ.வ.எண்.228/2015 வழக்கின் சார்பு நகல் ம.சா.ஆ.5. |
| 6 | தபசில் சொத்தின் தன்மை குறித்து பொறியாளர் வழங்கிய ஸ்திர சான்று ம.சா.ஆ.6. |
| 7 | நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் எக்ஸ்.1. |
| 8 | நீதிமன்ற ஆணையர் பொறியாளர் அறிக்கையுடன் தாக்கல் செய்த |

| | |
|---|---|
| | ஆணையர் அறிக்கை எக்ஸ்.2 ஆகும். |

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.
குு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
02.03.2020.

02.03.2020 மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.270/2012) வா.சா.1. கெங்கம்மாள்.

வா.சா.ஆ.8 ஆவணம் வழக்கு தாக்கல் செய்த பின்பு உள்ள காலத்திற்கான ரசீதுகள் என்றால் சரிதான். பொதுவாக பட்டாதாரர் பெயரில் தான் வீட்டு வரிரசீது வழங்கப்படுவது வழக்கம் என்றால் கிரையம் பெற்ற உரிமையாளரின் பெயரில் வழங்கப்படும். தாவா சர்வே எண்ணில் தாவாச்சொத்து போக தாவாச்சொத்திற்கு அருகில் இடங்களையும் சேர்த்து மொத்தம் 19செண்டு நிலம் கணபதி இராமசுப்பு பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். கணபதி இராசுப்பு பெயரில் உள்ள பட்டா தற்போது வரை உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. தாவாச்சொத்திற்கு எனது பெயரில் பட்டா உள்ளதா என்றால் பட்டா இல்லை. கிரையப்பத்திரம் மட்டும் உள்ளது. மொத்த சொத்தும் பிரதிவாதிக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரிலும் அவரின் கணவரின் பெயரான கணபதி இராமசுப்பு பெயரிலும் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தின் புது சர்வே எண் என்ன என்றால் தெரியாது. தாவாச்சொத்தின் மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. அது யாருடைய பெயரில் உள்ளது என்றால் கணபதி இராமசுப்பு தகப்பாரான கிருஷ்ணசாமி நாயக்கரின் பெயரில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீகள் அனைத்தும் மோசடியாக உருவாக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தீர்வை ரசீது பிரதவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பொதுவாக தாவாச்சொத்தின் பத்திரம் அதன் மூலப்பத்திரம் கிரையம் பெறும் நபரிடம் ஒப்படைத்து விடுவார்கள் என்றால் சரிதான். என்னிடம் தபசில் சொத்தை பொறுத்து அசல் பத்திரம் மற்றும் மூலப்பத்திரம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் ஒப்படைக்கப்பட்டது அது பேருந்தில் பயணம்

செய்த போது தொலைந்து விட்டது. அசல் ஆவணங்களை தொலைந்து போய்விட்டதாக பொய் சொல்லுகிறேன் என்றாலும் கணபதி இராமசுப்புவின் கையெழுத்து போலியானது என்றுதெரிந்து விடும் என்பதால் அசல் ஆவணங்களை தொலைந்து விட்டதாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. கிரையம் கொடுத்த இராமர்பாண்டியன் என்பவர் எங்கள் ஊரில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தவர் என்றால் சரிதான். அவர் ஊரில் கிராம நிர்வாக அலுவலராக இருப்பதால் அவருக்கு ஊரில் உள்ள நிலங்களின் விவரங்களை பற்றி நன்றாகத்தெரியும் என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. இராமர்பாண்டியன் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். இராமர்பாண்டியன் கிராம நிர்வாக அலுவலராக இருந்ததால் பிரதிவாதி வெளியூரில் இருப்பதை சாதகமாக பயன்படுத்தி எனக்கு மோசடியாக கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணம் கணபதிஇராமசுப்பு மோச்சம்மாளுக்கு நன்கொடைகொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்திற்கும் தாவாச்சொத்திற்கும் எந்தவித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. 2003ல் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் எழுதிக்கொடுத்த 3,4 வருடங்களில் எனக்குத்தெரியும். ஷை சொன்ன விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். கணபதி இராமசுப்பு தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். அவர் தென்னம்பட்டி கிராமத்தில் எப்போது வரை குடியிருந்து வந்தார் என்றால் 2003-லிருந்து வந்துபோன விவரம் எனக்குத்தெரியும். குடியிருந்த விவரம் பற்றி எனக்கு சரியாக தெரியாது. கணபதிஇராமசுப்பு எங்குவைத்து இறந்து போனார் என்றால் தெரியாது. அவர் எந்த தேதி வருடத்தில் இறந்தார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தென்னம்பட்டிக்கு வந்து போன சமயத்தில் எங்கு குடியிருந்தார் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. கணபதிஇராமசுப்பு அவர் மனைவி,மக்களுடன் இருக்கும் போது தான் இறந்து போனார் என்றால் அவர் குடும்ப வாழ்க்கை பற்றி எனக்குத்தெரியாது. 14,08,1999ல் கணபதிஇராமசுப்பு குலசேகரபட்டிணத்தில் வைத்து இறந்து போனார் என்றாலும் அதன்பின் தாவாச்சொத்தை நான் கிரையம் பெற்றதாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. 2003ல் கணபதி இராமசுப்பு இறந்ததாக நான் கூறுவதற்கு ஆதாரவாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கணபதி இராமசுப்பு ஒரு காலமும் தாவாச்சொத்தை யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை என்றாலும் நான்

கிரையம் பெற்றதாக கூறும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து கணபதிஇராமசுப்புவின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை பொறுத்து மோசடியாக கிரையம் பெற்றுள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
02.03.2020.

*மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.*

*ஓ.எஸ்.எண்.26/2015.*

*பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். பி.வா.சா.1.*

*.....*

*பெயர் - மாடசாமி.*
*த/பெ. -*
*கிராமம் -*
*தாலுகா -*
*தொழில் -*
*வயது -*

*1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 02 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.*

*முதல் விசாரணை.* *நான் இந்த வழக்கில் 2ம்பிரதிவாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.*

*பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்கள் குறியீடுசெய்ய வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*02.03.2020.*

| | |
|---|---|
| *1* | |
| | |
| | |

*பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.*

*குு.வி.*வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

*02.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.177/2008) வா.சா.1. சரோஜினி.*
*17,18 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.*

*நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் திண்டுக்கல் மாவட்டம் கன்னியாபுரம் கிராமத்தில் குடியிருக்கிறேன். வாதிகள் 4 பேர்களும் எனது உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். 8 முதல் 11 பிரதிவாதிகள் என் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் என்ன என்றால் குருசாமி. எனது அப்பாவின் அப்பா பெயர் என்ன என்றால் நாராயணசாமி என்ற நாரணப்ப நாயக்கர். எனது தாத்தாவின் அப்பா பெயர் என்ன என்றால் நாரணப்ப நாயக்கர். ஷ நாரணப்ப நாயக்கரின் அப்பா பெயர் என்ன என்றால் பேஷ் நாயக்கர் என்ற நாரணப்ப நாயக்கர். பேஷ் நாயக்கர் என்ற நாரணப்ப நாயக்கருக்கு நாரணப்ப நாயக்கர் மட்டும் தான் வாரீசு என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கில் எத்தனை சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் 5 சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. 5 அயிட்டச்சொத்துக்களில் 1வது அயிட்ட சொத்தின் சர்வே எண். என்ன என்றால் 223/பி2. அதன் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர் 9 செண்டு. அது எந்த கிராமத்தின் சர்வே எண் என்றால் அத்தைகொண்டான் சர்வே எண் ஆகும். வா.சா.ஆ.1,2 ஆவணத்தில் தபசில் சொத்துக்கள் அத்தைகொண்டான் கிராம சர்வே எண்ணில் உள்ள சொத்துக்கள் என்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஆலம்பட்டி என்று தான் உள்ளது ஆனால் அத்தைகொண்டான் கிராமம் என்று காட்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் காட்டப்படவில்லை என்றால் சரிதான். 1வது அயிட்டச்சொத்து பேஸ் நாயக்கர் என்ற நாரணப்ப நாயக்கரின் குமாரர் நாரணப்ப நாயக்கருக்கு வா.சா.ஆ.1மூலம் பாத்தியம் என்றும், 2முதல் 5 அயிட்டச்சொத்துக்கள் நாரணசாமி என்ற நாரணப்ப நாயக்கர் மற்றும் அவரின் சகோதரார் குருசாமி நாயக்கருக்கு பூர்வீகமாகப்பாத்தியப்பட்டது என்று கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எனது பிராதில் பேஷ் நாயக்கர் என்ற நாரணப்ப நாயக்கருக்கு பூர்வீகமாகப்பாத்தியப்பட்டதாக கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1வது அயிட்டச்சொத்து எந்த சர்வே எண் மற்றும் யாருடைய பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் நாளது தேதியில் மூக்கு கண்ணாடி அனியாமல் வந்துள்ளதால் என்னால் ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்க இயழவில்லை.*

*(சாட்சி வா.சா.ஆ.1,2 ஆவணங்கள் தொடர்பாக குறுக்கு விசாரணை செய்த*

போது கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நேரிடையாக பதில் கூறாமல் தான் மூக்கு கண்ணாடி அணியாமல் வந்துள்ளதாக கூறி வழக்கறிஞர் கேட்கும் கேள்விகளுக்கு தொடர்பற்ற பதில்களை கூறியதால் சாட்சி மூக்கு கண்ணாடி அணிந்து சாட்சியம் அளிக்க வரும்படி கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
02.03.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.207/2017.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் - மாடத்தி.

த/பெ. -

கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 02 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 23.11.2016ம் தேதியிட்ட போலீஸ் புகார் மனு ரசீது அசல் வா.சா.ஆ.1. |
| 2 | புகார் மனு உபய வாதிகளின் வாக்குமூலம் ஆகியவைகள் அடங்கிய கோப்பு தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி பெற்ற நகல் வா.சா.ஆ.2. |
| 3 | 23.08.2017ம்தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3. |
| 4 | பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.4.ஆகும். |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
02.03.2020.

*02.03.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.12 /2013) வா.சா.1.*

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.118/2018.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.2.

.....

பெயர் - ராஜையா
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 02 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>முதல் விசாரணை.</u> நான் இந்த வழக்கில் வாதிதரப்பு 2வது சாட்சி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | எனது ஓட்டுனர் உரிமைம் அடையாள அட்டையின் நகல் வா.சா.ஆ.4.ஆகும்.(அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது). |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>கு.வி.</u>வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.239/2018.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.2.

.....

பெயர் - தாமோதரன்.
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -
1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | எனது ஆதாரர் அடையாள அட்டையின் நகல் வா.சா.ஆ.7 ஆகும். (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது). |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

கு.வி. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் கோவில்பட்டி உள்ள முத்தையாமால் தெருவில் குடியிருக்கிறேன். வாதிகள் யாருக்காக வாரிசு சான்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இறந்து போன பாக்கியலட்சுமிக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளாள்கள். பாக்கியலட்சுமியின் உடன் பிறந்த 4 சகோதரிகள் வாதியை தவில்த்து வேலம்மாள் என்பவர் உள்ளார். பாக்கியலட்சுமிக்கு திருமணம் ஆகியுள்ளதா என்றால் உள்ளது. அவரின் கணவர் சங்கரநாராயணன் அவர் தற்போது உயிருடன் இல்லை. அவர்களுக்கு வாரீசுகள் உள்ளார்களா என்றால் குழந்தைகள் கிடையாது. பாக்கியலட்சுமி எப்போது இறந்தார் என்றால் 2016ல் நான் வாதிக்கு உறவினரா என்றால் பழக்கமானவர். வாதிகளுக்கு நான் பழக்கமானவர் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
ம.வி.இல்லை.

27.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.101 /2017 ) வா.சா.1. காளீஸ்வரன்.
வழக்கில் நான் 2ம்வாதி என்றால் சரிதான். 1ம்வாதி எனது தாயார் என்றால்

சரிதான். 3ம்வாதி எனது சகோதரி,4ம்வாதி எனது சகோதரர் என்றால் சரிதான். தபசில் சொத்தின் அளவு 5.19 செண்டு என்றால் சரிதான். அதை சுற்றி 4 அடி உயரத்தில் காம்பவுண்டு சுவர் உள்ளது என்றால் சரிதான். அதற்குள் கதவு எண்.10ல் 10 x 8 அடி அளவில் ஒரு அறை உள்ளது என்றால் சரிதான். கதவு எண்.10ல் 2002 ஆம் ஆண்டு வரை வாகன வட்டர் சர்வீஸ் பார்த்து வந்தாக நான் கூறுவதற்கு ஆதரவாக நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாகன வட்டர் சர்வீஸ் செய்வதற்கான உபகரணங்கள் அந்த அறையில் இருப்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாகனங்களை சுத்தம் செய்யும் தொழில் செய்வதற்கான தொழில் வரி செலுத்தியதை காட்டும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 29.01.2003 முதல் 21.03.2006வரை 3 ஆண்டுகள் மரைக்கடை நடத்துவதற்கான வாடகைக்கு தாவா கட்டிடம் பெற்றேன் என்றால் சரிதான். மாதம் ரூ.3000/-ம் அதற்கு முன்பணம் ரூ.6000/- என்றால் சரிதான். வாடகை காலம் முடிந்து தொடர்ச்சியாக 2012 ஜனவரியில் எனது தகப்பனாரிடம் வாடகைக்கு இருந்து வந்தார் என்றால் சரிதான். 3வது முறையாக எனது தகப்பனாருடன் 2009 ஜனவரி முதல் 2009டிசம்பர் வரை 11 மாத வாடகை ஒத்தி வைக்கப்பட்டது என்றால் சரிதான். மாத வாடகை ரூ.2000/- என்றால் சரிதான். 21.08.2009ல் எனது தகப்பனார் இறந்து போனார் என்றால்சரிதான். எனதுஅப்பா,நான் வாடகை ரசீது கொடுத்தது கிடையாது என்றால் சரிதான். வாடகை காலம் முடிவடைந்ததால் பிரதிவாதி தபசில் கடையிலிருந்து காலிசெய்து கொள்வதாக என்னிடம் கூிறயதாக கூறும் சங்கதிகளை எனது அறிவிப்பிலும், பிராதிலும் நான் கூறுவில்லை என்றால் சரிதான். எனது அப்பா காலத்தில் காம்பவுண்டு சுவரை 2அடி உயர்த்தி சிமெண்ட் தளம் போட்டு ஒரு ஏ.சி.அறை கட்டப்பட்டது குறித்து எனது அப்பா எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் எங்களிடம் கேட்காமல் கட்டிவிட்டார். எனது அப்பாவின் சம்மதத்துடன் தான் பிரதிவாதி கட்டினார் என்றாலும் அந்த விவரம் எனக்குத்தெரியாது என்றால் சரியல்ல. அதன் பின்பு நானும் எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அறிவிப்பில் பிரதிவாதியின் வசதிக்காக கட்டுமானங்களை ஏற்படுத்திக்கொண்டார் என்று கடையை காலிசெய்யும் போது அதை எடுத்து சென்றுவிடுதாக கூறியுள்ளேன். எனது அப்பா உயிருடன் இருந்த காலம் வரை தபசில் சொத்து சொந்த உபயோகத்திற்கு வேண்டுமென எனதுஅப்பாவும் நானும் எவ்வித அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால்

சரிதான். எனது அப்பா இறந்து 7 வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு வேண்டுமென்றே பிரதிவாதியை தபசில் சொத்திலிருந்து காலிசெய்யும் நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பா இருக்கும்காலத்தில் பிரதிவாதியை கடைசிவரை கடையில் வாடகைக்கு இருக்கும்படியும் விற்கும்போது கடையை பிரதிவாதியிடம் விற்பனை செய்து தருவதாக கூறியிருந்தார் என்றால் சரியல்ல. நான் எனது அப்பா இறந்த பின்பு பிரதிவாதி துஷ்டி கேட்டு வந்த போது என்னிடம் கடையை கிரையம் செய்துகொடுப்பது சம்பந்தமாக கேட்ட போது பிறகு பார்த்துக்கொள்ளலாம் என நான் கூறினேன் என்றால் சரியல்ல. எனது சமூகத்தை சேர்ந்த பெரியவர்களான சங்கரநாராயணன், பத்மநாபன், அய்யம்பெருமாள், குருசாமி,மாரியப்பன் பிரதிவாதியின் கணவர் ஆகியோர் என்னிடம் ரூ.15,00,000/-த்திற்கு கிரையம் பேசினார்கள் என்றும் அதை நான் மறுத்தேன் என்றால் நான் இடத்தை காலிசெய்ய வேண்டுமென்று கூறினேன். கிரையம் செய்ய நான் மறுத்துவிட்டேன். நான் சென்னைக்கு சென்ற பின்னர் நான் ரூ.28,00,000/-த்திற்கு கிரையம் முடிப்பதாக கூறினேன் என்றால் சரியல்ல. எனக்குஎட்டையபுரம் பேரூராட்சிக்கு அருகில் இரண்டு காலிமனை உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி 2003லிருந்து தற்போது வரை மின் இணைப்புக்கு வைப்பு தொகையை நான் திருப்பி செலுத்திவிடுவதாக நான் எனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை தபசில் கடையிலிருந்து காலிசெய்யக்கோரி அடியாட்கள் வைத்து மிரட்டினேன் என்றால் சரியல்ல. எனது மாமா தான் வந்தார் கடையை காலிசெய்யும்படி கூறினார். 2017 மார்ச் வரை வாடகையை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதை எனது பிராதில் வாடகையாக கருதமுடியாது என்றும் நஷ்டயீடாக எடுத்துக்கொள்வதாக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவின் காலத்திலோ அல்லது எனது காலத்திலோ வாடகைக்கு இருந்து வருபவர் செலுததிய பணத்தை நஷ்டயீடாக எடுத்துக்கொள்வது வழக்கம் இல்லை என்றால் சரியல்ல. 3வது நபருக்குத்தான் விற்பனை செய்யபோகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் தபசில்சொத்து சொந்த உபயோகத்திற்கு வேண்டுமென்றும் அது வாகன வாட்டர் சர்வீஸ்க்கு தேவைப்படுவதாக சொல்லுவது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வாட்டர் சர்வீஸ் செய்வதற்கான எந்தவிதமான உபயகரங்களும் இல்லை என்றால் சரியல்ல. ஆர்.சி.ஓ.பி.8/12 வழக்கை மேல்நடத்தவில்லை என்று 03.1.2017ல்

வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அந்த வழக்கை வாபஸ் பெற்றுவிட்டு தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எட்டையபுரம் பகுதி தேர்வுநிலை பேரூராட்சி என்றால் சரிதான். அந்த பகுதிக்கு நகராட்சி சட்டம் தான்பொருந்தும் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. 2017ஆம் ஆண்டு புதிய சட்டப்படி இவ்வழக்கு இநீதிமன்றதிதில் தாக்கல் செய்ய முடியாது என்றாலும் எனக்கு வழக்கு நடத்த வழக்கு மூலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சட்டத்திற்கு புறம்பாக பிரதிவாதியை இடைஞ்சல் செய்யும் நோக்கத்திலும் மற்றவர்களின் துாண்டுதலின் பேரிலும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நஷ்டயீடு கேட்டுள்ள பரிகாரம் சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. வாடகை காலம் முடிவடைந்ததாக தன்னிட்சைாக உரிமையாளரால் கூறமுடியாது என்றால் சரியல்ல.  நான் பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
27.02.2020.

*28.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ். 223 /2013) பி.வா.சா.1. மாரியம்மாள்.*

*எனக்கு தற்போது இரண்டு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடுக்ள வாதிகளின் வீட்டிற்கு கீழ்புறம் உள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு வீடு 2004ல் கட்டி பால்காய்ச்சினோம் என்றால் சரிதான். அடுத்த வீடு 7,8 வருடங்கள் கழித்து முதலில் கட்டிய வீட்டிற்கு முன்புறம் ஒரு வீடு கட்டினேன் என்றால்சரிதான். வாதி எனக்கு எதிராக 2009ல் ஒரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.அந்த வழக்கு தாக்கல் செய்யும் போது 2வது வீடு கட்டவில்லை என்றால் 2008ஆம் வருடம் கட்டிவிட்டேன். வாதி என்மீது வழக்கு போடுவதற்கு முன்பு வீடு கட்டுவது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு நாலாட்டின்புத்துார் காவல் நிலையத்தில் 2009ஆம் ஆண்டு வாதியால் எங்கள் மீது புகார் கொடுக்கப்பட்டு எனது கணவர் விசாரணைக்கு முன்னிலைப்பட்டார் என்றால் சரிதான். அந்த விசாரணையில் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டது என்றாலும் அது சம்பந்தமாக நாங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் வாதி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் எங்களுக்காக வழக்கறிஞர்கள் திரு.மாரிராஜ்,போகர்நாதன் ஆகியோர்கள் முன்னிலை ஆனார்கள் ஏ்ன்றால் சரிதான். அந்த வழக்கை முதலில் நடத்தாமல் விட்டு எனக்கு எதிராக தீர்ப்பான பின்பு அதன் பின்பு மனு தாக்கல் செய்து வழக்கு நடத்தினேன் என்றால் சரிதான். அதே கால கட்டத்தில் வாதிக்கு எதிராக கோவில்பட்டி கோட்டாட்சியர் அலுவலகத்தில் மோசடியாக வாதி கிரையம் பெற்றுள்ளதாக எனது வழக்கறிஞர் மனுக்கொடுத்து அதன்பேரில் விசாரிக்கப்பட்டது என்றால் மனுக்கொடுத்து விசாரித்தார்கள் ஆனால் அது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது 2010ஆம் ஆண்டு தான் கோட்டாட்சியரிடம் மனுக்கொடுத்ததற்கு அதை மறைத்து தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2வது கட்டிய வீட்டில் முன்பகுதியில் 2012ஆம் ஆண்டு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 2008ல் கட்டிய வீட்டிற்கு எனது கணவர் வெளிநாட்டிலிருந்து வந்த பின்பு பூச்சு வேலை செய்து முடிக்கப்பட்டதால் 2012 என்று போடப்பட்டுள்ளது. கட்டுமானம் முடிக்கப்பட்ட பின்பு காம்பவுண்டு சுவர் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. 2003ல் காம்பவுண்டு சுவர் கட்டிவிட்டோம். காம்பவுண்டுசுவர் முதலில் கட்டப்பட்ட வீட்டிற்கு மேல்புறம் இல்லை என்றால் சரிதான். 2வதாக வடக்கு பக்கம் கட்டப்பட்ட வீட்டின் தெற்கு பகுதியிலிருந்து வடக்கு நோக்கு காம்பவுண்டு சுவர்*

கட்டப்பட்டுள்ளது எனறால் சரிதான். 2வது வீடு கட்டும் சமயத்தில் தான் காம்பவுண்டுசுவர் கட்டப்பட்டது என்றாலும், அதை மறைத்து தற்போது சாட்சியம் அளிக்கிறனே் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள ஓ.எஸ்.366/2009 என்ற வழக்கு 21.02. 2012 ஆம் தேதியில் தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த தேதிவரை சுற்றுச்சுவர் கட்டப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றாலும், தீர்ப்புக்கு பின்பு தான் சுற்றுச்சுவர் கட்டினோம் என்றால் சரியல்ல. ஷ வழக்கில் வழக்கு முடியும்வரை நாங்கள் சுற்று சுவர் கட்டக்கூடாதென வாதிகள் தடையுத்தரவு வேண்டி வாதி தரப்பில இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டு உரிய விசாரணைக்கு பின்பு உத்தரவிடப்பட்டது என்றால் அது எனக்கு தற்போது நினைவில்லை. தாவா வழக்கில் முதலில் எனது கணவர் வழக்கறிஞர் மூலம் முன்னிலைப்பட்டு வழக்கை நடத்ததா காரணத்தினால் அவருக்கு எதிராக ஒது தலைபட்சமாக முடிவு செய்யப்பட்டது என்றால் எனது கணவர் வழக்கை நடத்தவில்லை. தாவா வழக்கில் முதலில் எங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பத்த போது நீதிமன்ற ஆணையாளர் தபசில் சொத்தை பார்வையிட வந்த நிலையில் எனது வழக்கிறஞர் இல்லாமல் நிலத்தை பார்வையிட நான் ஆட்சேபனை தெரிவித்தேன் என்றால் சரியல்ல. தாவா இடத்தை பார்வையிட நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற ஆணையர் எத்தனை முறை வந்தார் என்றால் முதலில் அளவீடு செய்த போது நான் இல்லை. 2வது முறை நீதிமன்ற ஆணையர் நிலத்தை பார்வையிட வந்த போது நான் உடன் இருந்தேன். வாதி தபசில் சொத்தை கிரையம் பெற்றது முதல் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். வாதியின் இடம் வாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்று முந்திய வழக்கில் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்புக்கு மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். முதல் வழக்கிலும்



வாதியின் இடத்தை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாகத் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முந்திய வழக்கிலும் தற்போது தாக்கல் செய்துள்ள பட்டாவை மட்டும்தான் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். எனக்கு பட்டா வழங்கிய போது வேறு யாருக்கும் பட்டா வழங்கிய விவரம் எனக்குத்தெரியுமா என்றால் எனக்கு இலவசபட்டா வழங்கப்பட்டுள்ளது. எனது வீட்டிற்கு மேற்கே உள்ளவர்கள் 5 நபர்களுக்கும் இலவச பட்டாதான் வழங்கப்பட்டுள்ளது. எனது வீட்டிற்கு

மேற்கே உள்ள நபர்கள் கிரையம் பெற்றதன் அடிப்படையில் பட்டா பெற்றுள்ளார்கள் என்றால் அவ்வாறு இல்லை. எனது தெற்கு வீட்டை விட வடக்கு வீடு எவ்வளவு தூரம் கிழக்கே தள்ளி உள்ளது என்றால் 1 அடி அளவில் கிராஸாக உள்ளது. தெற்கே கட்டிய வீடும் வடக்கே உள்ள வீடம்உள் கூடு அளவு ஒரே அளவா என்றால் ஒரே அளவு தான். தெற்கே கட்டிய வீட்டிலிருந்து கீழ்பக்கம் முன்னால் 8 அடி அளவு காலிமனை உள்ளது என்றால் அளவு தெரியாது. ஆனால் காலியிடம் இருக்கிறது. முருகேசன் எனது கணவருக்கு தம்பி என்றால் சரிதான். அவரது இடம் எனது வீட்டிற்கு கீழ்புறம் உள்ளது. அவரின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே எவ்வளவு இடம் கடவு உள்ளது என்றால் 4 அடி கடவு. எனது கணவரின் தம்பி இடத்திற்கு அருகில் எங்களுக்கு இடம் கிடையாது என்றால் சரிதான். எனது கணவரின் தம்பிக்கு தபசில் இடத்திற்கு அருகில் எவ்வித சொத்தும் இல்லை என்பதால் அவருக்கும், வாதிக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது வீட்டிற்கு மேல்புறம் மாடிபடி சுற்றுச்சுவர் எங்களால் தான் கட்டப்பட்டுள்ளது என்றாலும் அதற்கும் எனது கணவரின் தம்பிக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரிதான். காம்பவுண்டு சுவர் நான் சொல்லுவது போல் 2003,2004ல் கட்டவில்லை என்றாலும் வழக்கு முடிந்த பின்பு தான் வாதியின் இடத்தில் காம்பவுண்டு சுவர் கட்டியுள்ளேன் என்றால்சரியல்ல. மேற்கே காம்பவுண்டு சுவர் முடியும் இடத்தில் தான் மாடிப்படியும் அதன்உடன் சேர்த்து கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். காம்பவுண்டு சுவரின் உயரம் எத்தனை அடி என்றால் சுமார் 6 அடி உயரம் இருக்கும். அதன் கனம் 3/4 அடி இருக்குமா என்றால் இருக்கும். தாவா இடத்தை 2வது முறையாக ஆணையாளர் அளக்கும் போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். வடக்கு காம்பவுண்டு சுவரில் இரண்டு கதவுகள் உள்ளது என்றால் சரிதான். புதியதாக கட்டிய வீட்டிற்குநேராக தான் மெயின் கதவு உள்ளது என்றால் சரியல்ல. அந்த வீட்டின் வாசலுக்கும் மேற்கு பகுதியில் அமைந்துள்து. சுற்றுச்சுவரில் அமைந்துள்ள வாசலுக்கும் எனது வீட்டின் வாசலுக்கும் இடையே எவ்வளவு அடி இருக்கும் என்றால் நிறைய இடம் உள்ளது. அதன் அளவு எனக்குத்தெரியவில்லை. வாதிக்குப்பாத்தியப்பட்ட இடத்தில் மேற்கே உள்ள காம்பவுண்டு சுவர் வாதி எதிர்த்தும் கட்டப்பட்டுள்ளது அதைமறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் இடத்தில் நான் கட்டியுள்ள காம்வுண்டு சுவரை அகற்றித்தர கடமைப்பட்டவர் என்று

*சொன்னால் சரியல்ல. மேற்கே உள்ள சுவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி 30,35 அடி இருக்கும் என்றால் சரிதான். 2வது முறையாக நீதிமன்ற ஆணையாளர் அளந்து அறிக்கையில் சொல்லியுள்ள அளவுகள் சரியான அளவுகள் என்று சொன்னால் அது பற்றி எனக்குத்தெரியாது. நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் உள்ள அளவுப்படி தான் வாதி பரிகாரம் கோரியுள்ளார் என்றாலும் வாதிக்கு அந்த பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.*

*ம.வி.இல்லை.*

*28.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ். 38 /2016) பி.வா.சா.1. சுப்பம்மாள்.*

*நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் கொத்தாளி கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு தற்போது 70வயதிருக்குமா என்றால் இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் தனக்கு 54 வயது என்று குயிப்பிட்டுள்ளேன் அது வழக்கிற்காக பொய்யாக குறிப்பிஉடள்ளேன் என்றால் அது தட்டச்சு பிழையாகும். தாவாச்சொத்து நாராயணசாமி அய்யர் மற்றும் நாராயணஅய்யர் ஆகியோருக்குப் பாத்தியப்பட்ட ஆவணம் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவாச்சொத்தை 1959ல் நாராயணசாமி அய்யர் மற்றும் நாராயண அய்யர் ஆகியோரிடமிருந்து வாய்மொழியாக கிரையம் பெற்றதாகநான் கூறும் விவரத்தை நான் கிரையம் பெற்ற ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் இராமசாமி பண்டிதர் தனக்கு பூர்வீகமாகப்பாத்தியப்படட சொத்து என்று குறிப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளின் தகப்பனார் இராமசாமி பண்டிதர் 2008ல் இறந்து போனார் என்றால் தெரியாது. கிரையம் பெற்ற*

சொத்திற்கு 10வருடங்கள், கழித்து பட்டா பெற்றுள்ளேன் என்றால் கிரையம் வாங்கிய நாளிலிருந்தே பட்டா மாறுதலுக்கு 2,3 முறை மனுக்கொடுத்து 10வருடங்கள் கழித்து எனதுபெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளார்கள். தாவாச்சொத்தை நான் கிரையம்பெற்ற போது இராமசாமி பண்டிதர் தனியாக வாழ்ந்து வந்தார் என்றால் தனியாக தான் வாழ்ந்து வந்தார். ஆனால் கிரையம்கொடுத்த போது அவரின் வாரீசுகளுடன் வந்து தான் கையெழுத்து செய்து கொடுத்தார். எனக்கு கிரையம் செய்து கொடுத்த பத்திரத்தில் இராமசாமிபண்டிதரின் வாரீசுனகள் கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் இல்லை. தாவாச்சொத்தில் வாதிகளின் குலதெய்வம் உப்பிலியப்பன் கோவில் உள்ளதுஎன்றால் அவ்வாறு இல்லை. தாவாச்சொத்து இராமசாமி பண்டிதருக்கு பூர்வகமாகப்பாத்தியப்பட்டது அவர் பெயரில் பட்டா ஏற்பட்டு விவசாயம் செய்து வந்தார் என்றால் பட்டா அவர் பெயரில் இருந்த விவரம் எனக்கு தெரியாது ஆனால் அவர் விவசாயம் செய்த விவரம் எனக்குத்தெரியும். தாவாச்சொத்தை நான் கிரையம் பெற்ற போது வாதிகள் அனைவரும் வெளியூரில் இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. ஆனால் எழுதிக்கொடுக்கும் போது அனைவரும் இருந்தார்கள். வாதிகள் அவ்வப்போது அவர்கள் குலதெய்வத்தை கும்பிட தாவாச்சொத்திற்கு வந்து செல்வார்கள் என்றால் வந்து செல்வார்கள் ஆனால் அங்கு சாமி எதுவும் இல்லை. தாவாச்சொத்தை நான் கிரையம் பெற்ற போது தாவாச்சொத்தின் மதிப்பு ரூ.15,345/- இருந்தது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் முத்திரைக்கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமான வா.சா.ஆ.3 ஆவணத்தில் சுப்பையா பண்டிதர் மகன் இராமசாமி பண்டிதர் என காட்டபட்டுள்ளது என்றால் எனக்கு எழுதப்படிக்கத்தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குயைரயில் தாவாச்சொத்தின் மதிப்பு ரூ.2,00,000/-வரை பெறும் என்றால் சரிதான். அதை எனது நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி ஞாபகமில்லை. தாவாச்சொத்தின் மதிப்பு ரூ.2,00,000/-ம் பெறும் என்பதை காட்டஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1,2 ஆவணம் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பில் தாவாச்சொத்தில் நாராயணசாமி அய்யர், நாராயணஅய்யருக்கு ஆகியோருக்கு வாய்மொழியாக பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது. எனது அறிவிப்பிலும், நிருபண

வாக்குமூலத்தில் தாவாச்சொத்திற்கு எந்தக்காலத்தில் பட்டா எனது பெயருக்குமாற்றினேன் என்று கூறவில்லை என்றால் சரியல்ல. வாதியின் பாகத்தை ஒப்படைக்கவில்லை என்றால் வாதியின் பாகம் நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல. பூர்வீகச்சொத்தை இராமசாமி பண்டிதர் விற்க அவருக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் நான்பெற்ற கிரையம் சட்டப்படிசெல்லாது என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

28.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஐ.ஏ.469/19 இன ஓ.எஸ். 68 /2015) எ.ம.சா.1. வேலுச்சாமி.

வழக்கு சொத்தின் சர்வே எண் 86/6பி என்றால் சரிதான். சர்வே எண்.86/6பி-க்கு பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்றால் தெரியாது.86/6பி என்பது 86/6பி1, 86/6பி2 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கணினிப்பட்டா சர்வே எண்.86/6பி1-க்குரியதா என்றால் பழைய பட்டா தற்போது பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிய பட்டாவை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. சீனிவாசன் எனக்கு உறவினரா என்றால் எதிர்வீட்டுக்காரர். ராஜலட்சுமி உறவினரா என்றல் பக்கத்து வீட்டுக்காரர். அவர்கள் சார்பாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றால் சரியல்ல. வருவாய்துறை ஆவணங்களில் தாவாச்சொத்து புஞ்சை நிலம் என்று தான் உள்ளது என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஆர்.சி.ஓ.பி.எண்.02 /2019.

மனுதாரர் தரப்பு சாட்சி வாக்குமூலம். ம.சா.1.

.....

பெயர் - கனகம்
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

*1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*முதல் விசாரணை.* நான் இந்த மனுவில் 4ம்மனுதாரர் ஆவேன். தாவா மனுவில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை மனுதாரர் தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 01.09.1998 மனுதாரர் தகப்பனாரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து எழுதிக்கொண்ட வாடகை ஒப்பந்தப்பத்திரம் நகல் ம.சா.ஆ.1. |
| 2 | 25.08.2014 மனுதாரர் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.2. |
| 3 | மனுதாரர் தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.3. |
| 4 | 03.06.2015 ம்தேதியிட்ட வாடகை ஒப்பந்தம் நகல் ம.சா.ஆ.4. |
| 5 | 11.09.2018ல் தேியிட்ட மனுதாரர் தாயாரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.5. |
| 6. | தாவாச்சொத்துப்பத்திரம் நகல் ம.சா.ஆ.6. |
| 7 | தாவாச்சொத்தின் வரி ரசீது நகல் ம.சா.ஆ.7. |
| 8 | 26.06.2019ல் பொது ஆவணப்பத்திரம் அசல் ம.சா.ஆ.8. |
| 9 | 29.01.2019ம் தேதியிட்ட மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.9. |
| 10 | 11.02.2019ல் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.10. |
| 11. | 03.05.2019ல் கோவில்பட்டி நகராட்சி மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் ம.சா.ஆ.11.ஆகும். |

( ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.4 ஆவணத்தின் அசல் கைவசம் உள்ள நிலையில் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).
(ம.சா.ஆ.1முதல் ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ.10 ஆவணங்கள் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண். 10/2019.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் - பொன்னுச்சாமி
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 18.08.1962 வாதியின் தந்தை ஆழ்வார்சாமி பெயரில் உள்ள ரிஜிஸ்தர் கிரைய ஆவணம் சப்ரி நகல் வா.சா.ஆ.1. |
| 2 | 07.09.2005ல் 1 மற்றும் 2ம்பிரதிவாதிகளின் தந்தை அப்பாவு ஆசாரி 3ம்பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ள கிரைய ஆவணம் சப்ரி நகல் வா.சா.ஆ.2. |
| 3 | தபசில் சொததிற்குரிய வில்லங்கசான்று 1975 முதல் 2018 அக்டோபர் வரை உள்ள நகல் வா.சா.ஆ.3. |
| 4 | 13.11.2018பிரதிவாதிகளுக்கு வாதியின் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.4. |
| 5 | அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.5. |
| 6. | பிரதிவாதிகளால் பெற்றுக்கொள்ளப்படாமல் திருப்பப்பட்ட கவர் இரண்டு அசல் வா.சா.ஆ.6.ஆகும். |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.233 /2013.

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். பி.வா.சா.1.

.....

பெயர் - ஜோசப்புதுமைசவரி
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை.</u> நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 12/04/2013 அன்று பிரதிவாதி பஞ்சாயத்தில் செலுத்தியுள்ள வீடு கட்டஅனுமதி கட்டண ரசீது அசல் பி.வா.சா.ஆ.3. |
| 2 | 12.04.2013தேதியிட்ட பஞ்சாயத்து தலைவர் வழங்கியுள்ள கட்டிட வரைபட அங்கீகார உத்தரவு அசல் பி.வா.சா.ஆ.4. |
| 3 | பிரதிவாதி பெயரில உள்ள வீட்டுவரி ரசீதுகள் அசல் எண்ணம் 6 பி.வா.சா.ஆ.5. |
| 4. | 17.08.2013ல் பிரதிவாதி,வாதி மீது போலீசில் கொடுத்த புகார் மனுரசீது அசல் பி.வா.சா.ஆ.6. |
| 5. | 10.11.1993ல் அன்றுபிரதிவாதியின் தாயார் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள நன்கொடைபத்திரம் அசல் பி.வா.சா.ஆ.7. |
| 6 | 10.11.1993 அன்று பிரதிவாதி வாதியும் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்த பத்தரம் அசல் பி.வா.சா.ஆ.8. |
| 7. | தாவா சர்வே நம்பருக்குரிய அடங்கல் நகல் பி.வா.சா.ஆ.9. |
| 8. | ஓ.எஸ்.102/2014 வழக்கின் பிராது நகல் பி.வா.சா.ஆ.10. |
| 9. | ஓ.எஸ்.102/2014 வழக்கின் எதிர்வழக்குரை நகல் பி.வா.சா.ஆ.11. |
| 10 | ஓ.எஸ்.102/2014 வழக்கின் தீர்ப்புரை நகல் பி.வா.சா.ஆ.12. |
| 11. | ஓ.எஸ்.102/2014 வழக்கின் தீர்ப்பாணை நகல் பி.வா.சா.ஆ.13. |
| 12. | 31.07.2013 அன்று பஞ்சாயத்தில் மாடி கட்டுவதற்கான கட்டிட அனுமதி கட்டணம் செலுத்தியர சீது அசல் பி.வா.சா.ஆ.14. |
| 13 | 31.07.2013 அன்று பஞ்சாயத்து தலைவர் வழங்கியுள்ள மாடி கட்டுவதற்கான கட்டிட வரை அஞ்கீகார உத்தரவு அசல் மற்றும் கட்டிட வரைபடம் அசல் பி.வா.சா.ஆ.15ஆகும். |

(பி.வா.சா.ஆ.8 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் பிரதிவாதி தரப்பில் நிருபணம் செய்யப்படும் வரை ஷ ஆவணத்தை

*ஏற்றுக்கொள்ளக்கூடாதென்று வாதி தரப்பில ஆட்சேபனைதெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீட செய்யப்படுகிறது.)*

*<u>கு.வி.</u>வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.*

*27.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.183 /2011 ) வா.சா.1. சங்கரம்மாள்.*
*<u>6,7,12ம்பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.</u>*

*தாவாச்சொத்து எனது கணவருக்கு உயில் மூலம் பாத்தியம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.உயிலில் காட்டப்பட்டுள்ள அளவுகள் சரியானது என்றால் சரிதான். அந்த அளவுகள் எனது கணவரின் தாத்தா சுப்பா ரெட்டியாருக்குப்பாத்தியம் என்றால் சரிதான். தென்வடல் அளவுகள் தான் எனக்கும்,பிரதிவாதிக்கும் பிரச்சனை என்றால் சரிதான். உயிலில் தென்வடல் அளவு 5 1/4 அரைக்கால் கெஜம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5 1/4 அரைக்கால் கெஜம் அளவு 16 அடி என்றால் சரிதான். 16அடிக்கு வடக்கே பிரதிவாதிக்குப்பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். உயிலில் தென்வடல் கீழ்பக்கமும்,மேல்பக்கமும் 5 1/4அரைக்கால் கெஜம் தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது சொத்திற்கு தெற்கே சங்கர்ராஜ் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் சங்கர்ராஜ் வீட்டிற்கும் இடையே 6அடி கிழமேல் சந்து உள்ளது என்றால் சரிதான். அந்த சந்து எங்களுக்கும்,சங்கர்ராஜுக்கும் பொதுவான சந்து என்றால் சரிதான். அந்த சந்தின் இருவருக்கும் தலா 3 அடி பாத்தியம் உள்ளது என்றால சரிதான். 1வது தபசில் சொத்தில் தென்கிழக்கு மூலையில் ஒரு வீடும், மேல்கடையில் ஒரு வீடும் உள்ளது என்றால் சரிதான். மேலக்கடைசியில் உள்ள எனது வீட்டின் தென்வடல் அளவு 16 அடி என்றால் சரிதான். எனது கணவரின் தாத்தா பெயர் சுப்பா ரெட்டியார். சுப்பாரெட்டியாருக்கு கந்தசாமி ரெட்டியார்,அருணாசல ரெட்டிய ஆகிய இரண்டு ஆண்மக்கள் என்றால் சரிதான். சுப்பா ரெட்டியார் 23.01.1956ல் தனது மஇரண்டு ஆண்மக்களக்க நன்கொடை எழுதிவைத்த விவரம்தெரியுமா ஏ்னறால் தெரியாது.*

*எனது கணவரின் அப்பா கந்தசாமிரெட்டியாரும், அருணாசல ரெட்டியாரும் தாவாச்சொத்தையும் அதற்குவடக்கே உள்ள சொதத்தையும் பாகம் பிரித்துக்கொண்டதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. கந்தசாமிரெட்டியாருக்கு எத்தனை வாரீசுகள் என்றால் 3 ஆண்கள்,2 பெண்கள் வாரீசுகள். கந்தசாமிரெட்டியாரின் சொத்தில் அவரின் வாரீசுகள் அனைவருக்கும் பாகம் உண்டு என்றால்சரிதான். கந்தசாமி ரெட்டியாரின் வாரீசுகளுக்குள் அவரின் சொத்தை பாகம் பிரித்துக்கொண்டதை காட்ட ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிகளின் வீடு தென்வடல் அளவு தெரியுமா எ்னறால் தெரியாது. எனது கணவரின் பெயரில் தாவாச்சொத்திற்கு பட்டா உள்ளதா என்றால் உள்ளது. பட்டாபெறும் போது எந்த ஆவணத்தை காட்டி பட்டா பெற்றோம் என்றால் காட்டவில்லை. பிரதிவாதி 1975ல் வீடு கட்டினார் என்றால் எனக்கு 1980ல் திருமணம் முடிந்ததால் அது பற்றி எனக்குத்தெரியாது. நான் திருமணம் முடித்து எனது கணவரின் வீட்டிற்குவந்த போது பிரதிவாதியின் வீடு அங்குஇருந்தது என்றால் சரிதான். 1956 நன்கொடை பற்றி எனது பிராதில் சொல்லவில்லை என்றால் அது பற்றி தெரியாததால் சொல்லவில்லை. வழக்கில் 2வது தபசிலாக காட்டப்பட்டுள்ள இடம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளர் வைத்து அளந்து பார்த்தால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யான வழக்கு என்று தெரிந்துவிடும் என்பதால் ஆணையர் நியமனம் செய்ய மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியை இடைஞ்சல் செய்யவேண்டுமென்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. கூடுதலான அளவுகள் காட்டி மோசடியாக பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.*

*ம.வி.இல்லை.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*27.02.2020.*

*27.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ். 132/2014) வா.சா.2. ராமசுப்பு.*
*<u>1ம்பிரதிவாதி குு.வி.</u>*

*வாதி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் தபசில் சொத்திற்கு தென்பக்கம் சீனிவாசன் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். வாதி முத்துபாஸ்கர் எனது உறவினர் என்றால் சரிதான். சீனிவாசனுக்கு வேறு பெயர் உள்ளதா என்றால் சீனிராஜ் என்று அழைப்பார்கள். சீனிவாசன், சீனிராஜ் என்பவர் ஒரே நபர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.*

*<u>2,3 பிரதிவாதிகள் 1ம்பிரதிவாதியின் குு.வி.ஏற்றுக்கொண்டுள்ளார்</u>.*

*<u>ம.வி.</u>இல்லை.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*27.02.2020.*

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண். /2015.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் -
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | |
| | |
| | |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

*மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.*

*ஓ.எஸ்.எண். /2015.*

*வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.*

.....

*பெயர் -*
*த/பெ. -*
*கிராமம் -*
*தாலுகா -*
*தொழில் -*
*வயது -*

*1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*முதல் விசாரணை.* *நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.*

| | |
|---|---|
| 1 | |
| | |
| | |

*பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.*

*கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.*

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.232/2013.

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். பி.வா.சா.1.

.....

பெயர் - சரவணலட்சுமி
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் 6ம்பிரதிவாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 23.09.2013ம் தேதியில் 6ம்பிரதிவாதிக்கு 2ம்பிரதிவாதி எழுதிக்கொடுத்த சப்ரிஜிஸ்தர் கிரைய ஆவணம் நகல் பி.வா.சா.ஆ.1.ஆகும். |

வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டுமென பிராத்திக்கிறேன்.

குு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
27.02.2020.

27.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.57 /2019) வா.சா.1. வேலப்பசாமி.

எனது மனைவி தாவாவழக்கில் வாதியாக இருந்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் என்ன வேலை பார்த்து வந்தேன் என்றால் வட்டாட்சியராக வேலை பார்த்து வந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். நான் வட்டாட்சியராக வேலைபார்த்து வந்து வருவாய்துறை ஆவணங்களில் ஏதேனும் பெயர் மாற்றம் செய்யும் போது ஆவணங்களில் கண்ட நபர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்படுவது வழக்கம் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் எனது மனைவிக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் எனது மனைவிக்காக சாட்சியம் அளிப்பதாக வாசகம் துலங்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் எனது சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்து ஆதியில் யாருக்குப்பாத்தியம் என்றால் வீரராகவபெருமாள், சுப்பம்மாளுக்குப் பாத்தியம். பிராது தபசில் சொத்தின் பழைய கிராம நத்தம் சர்வே எண்.175/1 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பிராது தபசில் சொத்தின் மூலப்பத்திரம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தபசில் சொத்து குறித்து எனது மாமனார்,மாமியார் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1ஆகும். அதன் சார்பதிவாளர் நகலை வா.சா.ஆ.1ஆக வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 சுப்பையா என்பவர் எனது மாமியார்,மானாருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஷ சுப்பையாவுக்கு 1976ல் நல்லமுத்து ஆசாரி கிரையம ்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2ஆகும். எந்த வருடத்திலிருந்து பிரதிவாதியின் பெற்றோர்கள் தபசில் சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சுமார் 8 வருடங்களாக குடியிருந்து வருகிறார். 8வருடங்களுக்கு முன்பு பிரதிவாதியின் பெற்றோர்கள் எனது மனைவியிடம் வாடகைக்கு குடியிருப்பது சம்பந்தமாக எந்தவிதமான ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் பெற்றோர்கள் எதன் அடிப்படையில் தபசில் சொத்தில் குடியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் பிரதிவாதியின் அப்பா எனது சொந்தசித்தப்பா. அவர்களின் சொந்த வீடு சேதமடைந்து அவர்களுக்கு குடியிருக்க வேறு இடம் இல்லாத காரணத்தினால் எங்கள் அனுமதியின் பெயரில் குடியிருந்து வந்தார்கள். வீட்டில் குடியிருக்கும் வரை பராமரித்துக்கொள்ளும்படி அனுமதி கொடுத்திருந்தோம் என்றால் சரிதான்.

தபசில் சொத்தின் வீட்டு தீர்வை யாருடைய பெயரில் இருந்தது என்றால் முதலில் வீரராகவபெயரில் இருந்தது. அதற்கு தீர்வை குருவம்மாள் செலுத்தி வந்த காரணத்தினால் அவர் செலுத்தியதாக தீர்வையில் குறிப்பிடப்பட்டியிருந்தது. என்னிடம் காட்டப்படும் ரசீதுகள் கதவு எண்.1/11க்கு செலுத்தப்பட்ட தீர்வை ரசீதுகள் என்றால் சரிதான். ஷ தீர்வை ரசீதுகள் 2008முதல் 2018வரை செலுத்தப்பட்ட 10 ரசீதுகள் என்றால் சரிதான்.அது பி.வா.சா.ஆ.3 ஆகும். அதில் குருவம்மாள் பெயர் துலங்கும் என்றால் சரிதான். வீரராகவபெருமாள் எந்த வருடம் இறந்து போனார் என்றால் 1999ல் இறந்து போனார். குருவம்மாள் பெயரில் உள்ள வீட்டு தீர்வையை எப்போது வீரராகபெருமாள் பெயரில் மாற்றினோம்என்றால் ஓட்டப்பிடாரம் பஞ்சாயத்து யூனியனில் நான் மேல்முறையீடு செய்து எனது மாமனார் வீரராகபெருமாள் பெயருக்கு 2018ஆம் ஆண்டு மனுக்கொடுத்தேன். ஷ பஞ்சாயத்து ஆணையாளர் 2018ல் குருவம்மாள் பெயரிலிருந்து வீரராகபெருமாள் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவை வழக்கில் தாக்கல் செய்தள்ளேனா என்றால் செய்துள்ளேன். ஆணையாளர் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பு பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினரா என்றால் அனுப்பினார். இறந்து போன குருவம்மாளின் பெயரில் உள்ள வீட்டுத்தீர்வையை மாற்ற சட்டப்படி மனு செய்ய முடியாது என்றாலும் பிரதிவாதிக்கு எவ்வித அறிவிப்பும் வழங்கப்படாமல் இறந்த வீரராகபெருமாளின் பெயரில் வீட்டு தீர்வை பெயர் மாற்றம்செய்தது சட்டப்படி தவறு என்றால்சரியல்ல. வீட்டு தீர்வையை மாற்ற ஆணையாளர் பிறப்பித்த உத்தரவை நகலை வழக்கில தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் 07.01.2019ல் வீட்டு தீர்வை செலுத்தியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா வழக்கு மார்ச்2019ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் வழக்கிற்காக மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் கதவு எண்.1/11 முகவரிக்கு இறந்து போன குருவம்மாள் எரிவாயு பெற்றதற்கான சந்தா ரசீது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.4 ஆகும். வா.சா.ஆ.4 ஆவணம் பதிவு செய்யப்படாத உறுதிமொழி ஆவணம் என்றால் சரிதான். அது எங்குவைத்து ஏற்படுத்தப்பட்டது என்றால் மந்திதோப்பு ரோடு தாசில்தார் நகரில் உள்ள எனது வீட்டில் வைத்து ஏற்படுத்தப்பட்டது. அந்த ஆவணம் பிறப்பித்த போது உடன் யார் இருந்தார்கள் என்றால் ஜெயகிருஷ்ணன் விஜயாபுரி கிராமத்தை சேர்ந்தவரும் ஓசூரை சேர்ந்த

அரிச்சந்திரன் மற்றும் எனது மனைவி, நான் இருந்தோம். வேறு நபர்கள் யாரும் இல்லை. பத்திரம் யாருடைய பெயரில் வாங்கப்பட்டது என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. அதையார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். அதில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ஆவணத்தில் வேலப்பசாமி என்பது இடைசொருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வாடகை என எழுதப்பட்டு அதை அடித்து ஒத்திக்காக என்று திருத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி தபசில் சொத்தை எனது மனைவியிடம் ஒப்படைத்து விட்டதாக சொல்லுவதற்கும் அதன் பின்னர் வாடகைக்கு ஏற்றுக்கொண்டதாக் சொல்லுவதற்கு ஆதரவாக வா.சா.ஆ.4 ஆவணத்தை தவிர வேறு ஆவணம் எனது தரப்பில் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் பிரதிவாதியின் பெற்றோர்கள் ஒத்திக்கு குடியிருந்து வந்தாக வாசகங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆதியில் தபசில் சொத்தில் வீரராகபெருமாள், சுப்பம்மாளுக்குப் பாத்தியப்பட்டு இருந்தது என்றாலும், அவர்கள் இறந்த பின்னர் எனது மனைவிக்கு வாரீசு அடிப்படையில கிடைத்தது என்றால் சரிதான். எனது மனைவியிடமிருந்து பிரதவாதியின் பெற்றோர்கள் தபசில் சொத்தை 2007ல் விலைக்கு கொடுக்க கேட்டு எனது மனைவியின் சம்மதத்தின் பேரில் ரூ.16,000/- எனது மனைவி பெற்றுக்கொண்டு தபசில் சொத்தை குருவம்மாளுக்கு எனது மனைவி 2007ல் வாய்மொழியாக கிரையம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு கிரையம் கொடுக்கும் போது பிராது தபசில் சொத்திற்குரிய பதிவு கிரைய ஆவணங்கள் அனைத்தையும் ஒப்படைத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. 2007ல் எனது மனைவி குருவம்மாளுக்கு கிரையம் கொடுக்கும் போது தபசில் சொத்து தூர்ந்து போய் இருந்தது என்றாலும் அதை குருவம்மாள் மராமருத்து செய்து பிராது தபசில் சொத்தில் முழு உரிமையாளர் ஸ்தானத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. எனது மனைவி வாய்மொழியாக் கிரையம் கொடுத்த பின்னர் எனது மனைவி பெயரில் உள்ள வீட்டு தீர்வையை மாற்ற நேரிடையாக துரைச்சாமி கிராம ஊராட்சிக்கு வந்து சம்மதக்கடிதம் எழுதிக்கொடுத்தன் அடிப்படையில் குருவம்மாள் பெயருக்கு வீட்டுதீர்வை மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. குருவம்மாள் 2017ல் இறந்து போனார் என்றால் சரிதான். குருவம்மாளுக்கு எத்தனை வாரீசுகள் என்றால் 3 பெண்கள், ஒரு ஆண் மொத்தம் 4 வாரீசுகள். குருவம்மாளுக்கு பின்னர் பிரதிவாதி தபசில் வீட்டில்

*முழுஉரிமையாளர் ஸ்தானத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் பெற்றோர்கள் எந்தக்காலத்திலும் எனது மனைவியிடம் அனுமதியின் பேரில் பிராது தபசில் சொத்தில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவி குறிப்பிடும் 08.05.2018தேதியிலோ அல்லது வேறு எந்த தேதியிலோ பிராது தபிசல்சொத்தை பிரதிவாதி எனதுமனைவியடம் ஒப்படைவு பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும், 08.05.2018ம் தேதியிலோ அல்லது வேறு தேதியிலோ பிரதிவாதி எனது மனைவியடம் வாடகைக்கு குடியிருக்க அனுமதி கேட்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் எனது மனைவி அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்னர் பிரதிவாதி மருத்துவமனயில் சிகிட்சையில் இருந்ததால் அதற்குபதில் அறிவிப்பு அனுப்பவில்லைஎன்றால் சரியல்ல. பிரதிவாதி எனது மனைவியிடம் உறவினர் என்ற முறையில் கேட்டதில் தனதுகணவரின் வற்புறுத்தலின்பேரில் தான் அறிவிப்பை அனுப்ப எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் பதில்அறிவிப்புஅனுப்பவில்லை என்றால்சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. எனது மனைவி வாய்மொழியாக கிரையம் கொடுத்த பின்னர் சொத்தை அபகரிக்கும் கெட்ட எண்ணத்தில் பிரதவாதிவாடகைக்கு குடியிருப்பதாக பொய்யாக கூறி வழக்கு தாக்கல˙செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.*

*ம.வி.இல்லை.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*27.02.2020.*

*27.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ். 132/2014) வா.சா.2. ராமசுப்பு.*

*<u>1ம்பிரதிவாதி கு.வி.</u>*

*வாதி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் தபசில் சொத்திற்கு தென்பக்கம் சீனிவாசன் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். வாதி முத்துபாஸ்கர் எனது உறவினர் என்றால் சரிதான். சீனிவாசனுக்கு வேறு பெயர் உள்ளதா என்றால் சீனிராஜ் என்று அழைப்பார்கள். சீனிவாசன், சீனிராஜ் என்பவர் ஒரே நபர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.*

*<u>2,3 பிரதிவாதிகள் 1ம்பிரதிவாதியின் கு.வி.ஏற்றுக்கொண்டுள்ளார்</u>.*

*<u>ம.வி.</u>இல்லை.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*27.02.2020.*

*27.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு*

கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.226/2014) பி.வா.சா.1. வேலம்மாள்.

வாதி தரப்பில் கு.வி.

எனது கணவர் பெயர் என்னவென்றால் சங்கன் என்ற அய்யாக்குட்டி. தபசில் சொத்து அவருக்கு எப்படி பாத்தியம் என்றால் கிரையம் மூலம் பாத்தியம்.அவர் எப்போது இறந்து போனார் என்றால் சுமார் 28 வருடங்கள் இருக்கும். அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவருக்கு எத்தனை வாரீசுகள் என்றால் நான், எனதுமகன் பால்ராஜ்,மற்றும் மகளான 2ம்பிரதிவாதி வாரீசு ஆவார். தாவாச்சொத்து எனது கணவருக்கு கிரையம் மூலம் பாத்தியம் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருக்கும் போது தாவாச்சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் நான் தான் அனுபவம் செய்து வந்தேன். எனது கணவரின் பெயரில் தீர்வை,பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எனது கணவர் உயிருடன் இருக்கும் போது தாவாச்சொத்தை எனது மகன் பால்ராஜ் தான் அனுபவம்செய்து வந்தார் என்றால் நாங்கள் அனைவரும் சேர்ந்து கூட்டதாக அனுபவம் செய்து வந்தோம். அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளோ என்றால் செய்யவில்லை. எனது கணவருக்கு தாவாச்சொத்து போக வேறு சொத்து உள்ளது என்றால் உள்ளது. அதைநாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம். எனது கணவர் எனது பெயரில் சொத்து வாங்கியுள்ளார் என்றால் வாங்கவில்லை. எனது கணவர் இறந்த பின்னர் தாவாச்சொத்தை பாகம் செய்துள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் சேர்ந்து அனுபவம் செய்து வருகிறோம். தாவாச்சொத்தை தற்போது யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் வேல்முருகன் அனுபவம்செய்து வருகிறார். தாவாச்சொத்தை நான் அனுபவம் செய்து வந்த காலத்தில் எனது பெயரில் தனிப்பட்டாவோ கூட்டுப்பட்டவோ இல்லை என்றால் எனது கணவரின் பெயரில் தான் உள்ளது. நான் சொல்லுவதுபோல் பொது அனுபவத்தில் தாவாச்சொத்து இல்லை என்றாலும் எனதுமகன் பால்ராஜுக்குகொடுத்து அவர் தான்அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதை நான் பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக்கொண்டேன். அதற்கு பதில் அனுப்பினோ என்றால் அவர் நேரிடையாக வந்து தவறு செய்து விட்டதாக சொன்னதன் பேரில் அனுப்பவில்லை. தாவாச்சொத்தில் எனக்கு பாத்தியமில்லை என்பதால் தான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் உண்மைக்குமாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியமில்லாத சொத்தை

நானும் எனது மகளும் சேர்ந்து 3ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை 1991-லிருந்து தற்போது வரை வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்த பின்னர் எனது மகன் பால்ராஜ்க்குகொடுத்து அவர் முறையாக இவ்வழக்கின் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்த பின்னர் தாவாச்சொத்து மற்ற சொத்துக்களை பிரித்துக்கொடுக்க கோரி பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகளுக்கும், எனக்கும் 3 பங்குபாத்தியம் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சட்டப்படி பாகம் பிரிக்கப்படாத சொத்தை நானும்,எனது மகளும் 3ம்பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுதது சட்டப்படி செல்லத்தக்கதில்லை என்றால் சரியல்ல. பிராது தபசில்சொத்து எந்தக்காலத்திலும் எங்களது கூட்டு அனுபவத்தில் இல்லை என்றாலும் எனது மகன் பால்ராஜ் தான்அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. நான் எல்லா உண்மைகைளயும் தெரிந்து கொண்டு 3ம்பிரதிவாதிக்கு ஆதரவாக 1,2 பிரதிவாதிகளாகிய நாங்கள் கட்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பிராது தபசில்சொத்து எனக்கோ 3ம்பிரதிவாதிக்கோ எந்தவித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>3ம்பிரதிவாதி தரப்பில் கு.வி.</u>

எனது கணவர் இறந்த பின்னர் நாங்கள் 3 பேரும் கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிளாகிய நாங்கள் 3ம்பிரதிவாதிக்கு கிரையம் செய்துகொடுத்துள்ளோம் என்றால் சரிதான். எனது கணவர் இறந்த பின்னர் எங்களுக்குள் தாவாச்சொத்து சம்பந்தமாக எந்தவித பஞ்சாயத்தும் நடைபெறவில்லை என்றால் சரிதான். நாங்கள் 3 பேர்களும் சேர்ந்து தான் சொத்தை அடமானம் வைத்துள்ளோம் என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
27.02.2020.

*27.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.81 /20 ) வா.சா.1.*

*27.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குு.வி.தொடர்ச்சி .(ஓ.எஸ்.78 /2014 ) பி.வா.சா.1. நவநீதகிருஷ்ணன்.*

*பிராது 1வது தபசில் சொத்து விவரத்தில் மீனாட்சிசுந்தரம் வீட்டிற்கும் தென்வடல் பொதுச்சந்துக்கும் மேற்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மால் விவரத்தில் காட்டப்பட்டுள்ள மீனாட்சிசுந்தரம் கட்டிடம் மிகவும் பழமையானது என்றால் சரிதான். கட்டிடம் கட்டி எவ்வளவு காலம் இருக்கும் என்றால் எனக்கு தற்போது 52 வயதாகிறது. எனக்கு விவரம் தெரிவதற்கு முன்பே அந்த கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. எனது தகப்பனார் 1வது தபசில் சொத்தை மேற்கே உள்ள சொத்தை 04.09.1982ல் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அதன் பின்னர் அதற்கு அருகில் உள்ள சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். வருவாய் ஆணவங்களின் படி 2வது தபசில் சொத்து யாருடைய அளவுக்குள் வருகிறது என்றால் எங்கள் அளவுக்குள் வருகிறது. பத்திர அளவுப்படி 2வது தபசில் சொத்து 1வது தபசில் அளவுப்படி வருகிறது என்றால் சரியல்ல. ஆணையாளர் முதலில் அளக்கும் போது 2வது தபிசல்சொத்து 1வது தபசிலுக்கு உட்பட்டு தான் வநத்து என்றால் சரியல்ல. அது பொது சந்தாகத்தான் இருந்து வருகிறது. வாதி அவர் கிரையம் பெற்ற இடத்தில் தான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். தாவாச்சந்தை பொறுத்து 06.01.1997ல் வாதியின் முன் பாத்தியஸ்தருக்கும் எனது தகப்பனாரும் ஒரு ஒப்பந்தம்செய்து கொண்டதாக எனது பிராதில் சொல்லியுள்ளேன் அந்த ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. அவ்வாறு ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றாலும் ஒப்பந்தம் ஏற்பட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலர் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் வாதியின் வீட்டிற்கு கிழக்கே உள்ள சந்து பொதுச்சந்து அல்ல என்றும் அது வாதிக்கு தனித்துப்பாத்தியப்பட்டது என்று கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். 2வது தபசில் சொத்திற்கு மேற்கே தென்வடலாக கட்டியுள்ள காம்பவுண்டு சுவர் எத்தனை அடி என்றால் 4 அடிஉயரம் இருக்கும். 2வது தபசில்சொத்து என்பது வாதிக்கு தனிப்பட்ட சொத்து என்றாலும் அதில் 1 1/2அடி இடம் விட்டதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. 2வது தபசில் சொத்தில் எனக்கோ அல்லது எனது முன்னோர்களுக்கோ எந்தக்காலத்திலும் எவ்வித பாத்தியதையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்காக பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.*

*ம.வி.இல்லை.*

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.03 /2019.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் - பாலமுருகன்

த/பெ. -

கிராமம் -

தாலுகா -

தொழில் -

வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் 7ம்வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 08.07.1968ம் தேதியிட்ட ராமசாமி மணியக்காரர் பெயரிலான கிரைய ஆவணம் 774/1968 அசல் வா.சா.ஆ.1. |
| 2 | 12.01.1993ம் தேதியிட்ட 1முதல் 6 பிரதிவாதிகளின் பாகப்பிரிவினை ஆவண எண்.8 /1993 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. |
| 3 | 16.07.1997ம் தேதியிட்ட கிரைய ஆவண எண்.575/1997 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3. |
| 4 | 19.02.2007ம் தேதியிட்ட கிரைய ஆவண எண்.319/2007 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. |
| 5 | 14.12.2007ம் தேதியிட்ட ஆவண எண்.2677/2007 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. |
| 6. | 17.10.1998ம் தேதியிட்ட சுப்புலட்சுமியின் இறப்பு சான்று அசல் வா.சா.ஆ.6. |
| 7 | 20.08.2018ம்தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் வா.சா.ஆ.7. |
| 8 | 22.07.2018ம் தேியிட்ட வில்லங்கச்சான்று கணினி நகல் வா.சா.ஆ.8. |
| 9 | 09.08.2018ம் தேதியிட்ட வில்லங்கச்சான்று சார்பதிவக நகல் வா.சா.ஆ.9ஆகும். |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
26.02.2020.

26.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ். 206 /2012 ) வா.சா.1. பூல்தாய்.

எனக்கு 2 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எனது குடும்ப அட்டையில் எனது தாயாரின் பெயர் இல்லை என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவின் படி நான் தாக்கல் செய்து எனது குடும்ப அட்டையின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான் அது எக்ஸ்.1ஆகும். எனது வாக்காளர் அடையாள அட்டையின் நகல் எக்ஸ்.2.ஆகும். எக்ஸ.1,2 ஆவணங்களில் கதவு எண்.123 என்ற முகவரி தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் 3ம்பிரதிவாதிக்கு 2012ல் வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் அவருக்கு பாத்தியப்பட்ட நிலத்தை விற்றுள்ளார் என்றால் அவ்வாறு என்னிடம் கூறியுள்ளார். அந்த நிலங்கள் அவரின் குடும்பத்திற்குப்பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் எனது கணவருக்கு மட்டும் தனித்துப்பாத்தியதை செய்து அவரது குடும்பத்திற்குள் எவ்வித ஏற்பாடும் செய்து கொள்ளவில்லை என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. இந்த வழக்கின் 1ம்பிரதிவாதி எனது கணவருடன் பிறந்த மூத்த சகோதரர் என்றால் சரிதான். அவரும் எனது கணவருடன் சேர்ந்து சொத்தை விற்றாரா என்ற விவரம்எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி கடந்த 7,8 வருடங்களாக வெளியூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வாதி உள்ளூரில் குடியிருந்த போது அவரின் தாயாருக்குப்பாத்தியப்பட்ட வீட்டில் குடியிருந்தாரா என்றால் அந்த விவரம் எனக்குத்தெரியாது. வாதியின் குடும்ப விவகாரங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வாதி மற்றும் அவரின் குழந்தைகள் பற்றிய விவரங்கள் எனக்கு நேரிடையாகத் தெரியாது என்றாலும் கேள்விப்பட்டது தான் என்றால் சரிதான். வாதியின் அம்மா பெயர் வெயிலாட்சியம்மாள். அவரின் அம்மா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. வெயிலாட்சியின் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் பெயரில் சொத்துக்கள இருந்த விவரம் எனக்குத்தெரியாது என்றால் சரிதான். 1,2 தபசில் சொத்துக்கள் வெயிலாட்சியின் தாயார் முத்துராக்கம்மாள் பெயரில் உள்ளதாக வா.சா.ஆ.3 ஆவணமாக வழக்கில்குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. அதை பற்றிய விவரங்களை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் மூலம் வாதியின் தாயாரின் மூலம் வாதிக்குப்பாத்தியப்பட்டது என்றாலும் அதன் மூலம் வாதிக்கு 1/3 பாத்தியம் உண்டு என்றால் சரியல்ல. வாதியிடமிருந்து எனது கணவரோ அவருடன் பிறந்தவரோ எந்தவிதமான பாகவிடுதலை எழுதிக்கொள்ளவில்லை

என்றால் சரிதான். அதனால் வாதிக்கு 1/3 பங்கை வாதிக்கு கொடுக்கவேண்டிய கடமையிலிருந்து தவரி எனது கணவர் வேறு நபருக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார் அதனால் அந்த கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது கணவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. அந்த சாட்சி கையொப்பம் செய்துள்ள முகவரியிலும் வீட்டின் கதவு எண்.56 என்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. கதவு எண்.56 எனது கணவருக்கும் வாதிக்கும்,1ம்பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட வீடு என்றாலும் அதில் வாதிக்கு 1/3 பங்கு பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதிக்கொடுத்தவர் அவரின் புகைப்படத்தில் உள்ள நபர் எனது கணவரா என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாக்காளர் அடையாள அட்டை உள்ளது அதில் கதவு எண்.56 என்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ம்தபசில் சொத்து எனது கணவரின் குடும்பத்தாருக்குப் பாத்தியப்பட்ட வீடு என்றாலும் அதை மறைத்து தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வீடு எனது தாயாருக்குப் பாத்தியப்பட்டது என்பதை காட்ட தீர்வை ரசீதை தவிரவேறு ஆவணம் இல்லை என்றால் சரிதான். எனது கணவரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட வீட்டு தீர்வை ரசீதை தவறாக எனது அம்மாவின் பெயரில் மோசடியாக மாற்றி அதை பயன்படுத்தி தப்பு பாத்தியம் கொண்டாடி வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்கில் உள்ள சொத்துக்கள் 1/3 பாகம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் அதை மறுப்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
26.02.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.115 /2019.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் - பா.பரமசிவன்.

த/பெ. -

கிராமம் -

தாலுகா -

தொழில் -

வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 22.03.2017ம் தேதியில் வாதிக்கு பிரதிவாதி ரூ.60,000/-க்கு எழுதிக்கொடுத்த ரிஜிஸ்தர் அடமான பத்திரம் அசல் வா.சா.ஆ.1. |
| 2 | 19.03.2019ம்தேதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும்அஞ்சலக ரசீதுடன் வா.சா.ஆ.2. |
| 3 | பிரதிவாதி நோட்டீசை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த கவல் அசல் வா.சா.ஆ.3.ஆகும். |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குு.வி. இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
26.02.2020.

25.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.29 /2015 ) வா.சா.1. சொர்ணமாரியப்பன்.
13ம்பிரதிவாதி தரப்பில் கு.வி.

நான் படித்துள்ளேனா என்றால் 8வது வரை படித்துள்ளேன். நான் எந்த ஊரில் படித்தேன் என்றால் கடம்பூரில் படித்தேன். தாவாச்சொத்து பாலம்மாளுக்கு எப்படிப்பத்தியம் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவாச்சொத்தை பொறுத்து சமூகம் நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு உள்ள விவரம் எனக்குத்தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கின் எண்.யார் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் வழக்கு எண் தெரியாது. சரஸ்வதி,செண்பகம் என்பவர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். அந்த வழக்கின் வாதிகள் தான் தாவா வழக்கின் 2,3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். அ.வ.எண்.204/15 வழக்கில் நான் 10ம் பிரதிவாதி என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. எனக்கு முன்னிலைப்பட்ட வழக்கறிஞர் தான் எனது மகள் செண்பகவல்லி மற்றும் மருமகளுக்கு வழக்கறிஞர் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. தாவாச்சொத்தை பொறுத்து கோவில்பட்டி சார்பு நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வழக்கு பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.13/2015 வழக்கில் என்னை 1ம்பிரதிவாதியாக இணைத்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

18 முதல் 27 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.இல்லை என்று எடுத்துரைத்துள்ளார்கள். சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என

ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
25.02.2020.

25.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.153 /2014) வா.சா.1. தெட்சணாமூர்த்தி.

2,3,4 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.

எனக்கு எந்த ஊர் என்றால் தீத்தாம்பட்டி கிராமம். எனது தாயார் பெயர் பேச்சியம்மாள் என்றால் சரிதான். தபசில் சொத்து வேறு சொத்துக்களும் ஆதியில் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டியிருந்தது என்றால் சரிதான். என் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் என்னை சேர்த்து 7 ஆண்கள்,ஒரு பெண். எனது அண்ணன் பெயர் ரத்தினசாமி என்றால் சரிதான். ரத்தினசாமியின் மனைவி தான் 1ம்பிரதிவாதி செல்லம்மாள் என்றால்சரிதான். தபசில் சொத்து எனது தனித்த அனுபவத்தில இருப்பதை காட்ட எனது பெயரில் தனிப்பட்டா இல்லை என்றால் சரிதான். எனது பெயரிலும் தீர்வையும் கிடையாது என்றால் தீர்வை உண்டு. வா.சா.ஆ.4ஆன பட்டா எண்.1460ல் எனது பெயர்,1ம்பிரதிவாதி, அவரின் மகள் சுப்புலட்சுமி பெயரில் தான் சேர்த்து கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். எனது அண்ணன் ரத்தினசாமிக்கு ஒதுக்கிய சொத்தை அவர் விற்பனை செய்து விட்டதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனதுஅண்ணனுக்கு என்ன சொத்து ஒதுக்கிறார்கள் என்பதை காட்ட ஆவணம் தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை. ஓ.எஸ்.138/1996 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் நகலை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2013ல் வட்டாட்சியரிடம் பட்டா மாற்றம் செய்து சம்பந்தமாக மனுக்கொடுத்தாக சொல்லியுள்ளேன் அதன் நகலை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அம்மா உயிருடன் இருக்கும் போது பாகம் நடைபெற்றதாக சொல்லியுள்ளேன் அது எங்கு வைத்து எந்த எந்த சொத்துக்களை பொறுத்து யார் யாருக்கு எந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்ற விவரத்தை எனது பிராதில்

குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 09.04.1971ல் எனது அம்மா இருக்கும் போது வாய்மொழி பாகம் நடைபெற்றது என்றால் சரியல்ல. வாய்மொழி பாகம் எந்த வருடம் எங்கு வைத்து நடைபெற்றது என்றால் தெரியாது. எனது அம்மா எப்போது இறந்ததார் என்றால் தற்போதைய தேதியிலிருந்து சுமார் 30வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். எனது அம்மா உயிருடன் இருக்கும் போது 09.04.1971ல் பாகம் நடைபெற்றது தாவாச்சொத்து எனக்கும், 1ம்பிரதிவாதிக்கும், அவரின் மகள் சுப்புலட்சுமிக்கும் சேர்த்து தான் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தான் துணை வட்டாட்சியர் கூட்டுபட்டாவாக உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு நகல் எனக்கு வந்ததா என்றால் இல்லை. உத்தரவு நகல் அப்போதே எனது கையில் கிடைத்து விட்டது என்றாலும் எங்கள் மூன்று பேர்கள் பெயரில் கூட்டுப்பட்டா கிடைக்கப்பெற்றுள்ளோம் அதை மறைத்து தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

கு.வி.தொடர்ச்சி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டறத்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
25.02.2020.

*மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.*

*ஓ.எஸ்.எண்.225/2014.*

*வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.*

*.....*

*பெயர் - வி.கிறிஸ்டி*
*த/பெ. -*
*கிராமம் -*
*தாலுகா -*
*தொழில் -*
*வயது -*

*1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*முதல் விசாரணை.* *நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.*

| | |
|---|---|
| *1* | *29.06.2012ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ஆவணம் எஸ்.ஆர்.ஓ.நகல் வா.சா.ஆ.1.* |

*மு.வி.தொடர்ச்சி வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்ய* *வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*25.02.2020.*

*25.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு மு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.201 /2003 ) வா.சா.1. உத்தரப்ப நாயக்கர்.*

| | |
|---|---|
| 1 | |
| | |

*25.02.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஆர்.சி.ஓ.பி.எண். /20 ) வா.சா.1.*

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.263/2013.

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். பி.வா.சா.1.

.....

பெயர் - மாடசாமி.

த/பெ. -

கிராமம் -

தாலுகா -

தொழில் -

வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். தாவா வழக்கில் எனது தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 07.08.1973ம்தேதியில் கருப்பையாத்தேவர் பெயரில் உள்ள நில உடமைக்குறிப்பேடு பட்டா எண்.20 அசல் பி.வா.சா.ஆ.1. |
| 2 | 09.07.1975ம்தேதியில் கருப்பையத்தேவர் வாரீசு மக்கள் சுந்தரத்தேவர்,சின்னசுந்தரத்தேவர்,மாடசாமித்தேவர்,ராமசாமித்தேவர்,வேல்ச்சாமித்தேவர்,ஆகியோர்கள் பெயரில்உள்ள நில உடமைபதிவேடு பட்டா எண்.20 அசல் பி.வா.சா.ஆ.2. |
| 3 | கருப்பையாத்தேவர் வாரீசு மக்கள்பெயரில் உள்ள பட்டா எண்.438-க்குரிய கணினிப்பட்டா பி.வா.சா.ஆ.3. |
| 4 | கருப்பையாத்தேவர் வாரீசு மக்கள் பெயரில் உள்ள பட்டா எண்.187-க்கு கணினிப்பட்டா பி.வா.சா.ஆ.4.. |
| 5 | தபசில் சொத்திற்கு பெரிய சுந்தரம்,சின்னசுந்தரம்,மாடசாமி ஆகியோர் செலுத்திய தீர்வை ரசீதுகள் எண்ணடம் 16 அசல் பி.வா.சா.ஆ.5. |
| 6. | பட்டா எண்.187 புல எண்.80/4ல் கருப்பையாத்தேவர் வாரீசுதாரர்கள் பெயரைசேர்த்த மண்டல துணை வட்டாட்சியர் உத்தரவு அசல் பி.வா.சா.ஆ.6. |
| 7 | 05.11.2008ல் பிராது 7வது அயிட்ட சொத்தை 4ம்பிரதிவாதி காந்திராஜன் பவர்ஏஜெண்ட் நிலைமையில் விற்பனை செய்த கிரையப்பத்திரம் சப்ரி நகல் பி.வா.சா.ஆ.7. |
| 8. | 30.11.2011ல் பிராது 6வது அயிட்டசொத்தின் ஒரு பகுதியை 10 முதல் 15 பிரதிவாதிகள் பவர் ஏஜெண்ட் ஜானகி மூலம்கிரையம்செய்த கிரையப்பத்திரம்சப்ரி நகல் பி.வா.சா.ஆ.8. |
| 9. | 10.10.2008ல் பிராது 1வது அயிட சொத்தின் ஒரு பகுதியை 22,23,24 பிரதிவாதிகள் பவர் ஏஜெண்ட் வேலம்மாள் மூலம் கிரை7யம் செய்த கிரையப்பத்திரம்சப்ரி நகல் பி.வா.சா.ஆ.9. |
| 10. | 16.04.2010ல் பிராது 6வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதியை 22,23,24 பிரதிவாதிகள் கிரையம் செய்த கிரையப்பத்திரம் சப்ரி நகல் பி.வா.சா.ஆ.10. |

| | |
|---|---|
| 11 | 03.10.2013ல் வாதிகள் கொடுத்த மனுவின்மீது கோவில்பட்டி வட்டாட்சியர் பிறப்பிவித்த மேலெழுத்து உத்தரவு அசல் பி.வா.சா.ஆ.11. |
| 12. | கோவில்பட்டி கோட்டாட்சியர் சர்வே எண்.80/1பி,80/4 ஆகியவற்றிற்கு சுப்பையா என்பவர் கொடுத்த மனுமீது பிறப்பிவித்த உத்தரவு பி.வா.சா.ஆ.12.ஆகும். |

குு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
25.02.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

வ.வி.469/2019 இன் ஓ.எஸ்.எண். 68/2015.

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி வாக்குமூலம். எ.ம.சா.1.

.....

பெயர் - வேலுச்சாமி

த/பெ. -

கிராமம் -

தாலுகா -

தொழில் -

வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த மனுவில் 6ம்எதிர்மனுதாரர் ஆவேன். தாவா மனுவில் நான் எனக்காகவும், 2முதல் 5 மற்றும் 12,19 மற்றும் 22 ஆகிய எதிர்மனுதாரர்களுக்காக சாட்சிம் அளிக்கிறேன். தபசில் சொத்தில் கட்டிடம் கட்ட நாங்கள் பெற்ற கோவில்பட்டி இனாம்மணியாச்சி பஞ்சாயத்து கட்டிட அனுமதி வரைபடம் தாக்கல் செய்கிறேன். அதன் நகல் எ.ம.சா.ஆ.1.27.05.1999-ஆம் தேதி எனது பெயரில் இனாம்மணியாச்சி பஞ்சாயத்தில் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டதற்கான வரைபடம் எ.ம.சா.ஆ.2ஆக தாக்கல் செய்கிறேன். 31.07.1999ம் தேதி 21ம் எதிர்மனுதாரர் சீனிவாசன் இனாம்மணியாச்சி பஞ்சாயத்தில் வாங்கிய கட்டிட அனுமதி வரைபடம் எ.ம.சா.ஆ.3.ஆக தாக்கல் செய்கிறேன். மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யும்படி பிராத்திக்கிறேன்.

குறு.வி. எ.ம.சா.20 தரப்பில் குறு.வி.இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.

குறு.வி. எ.ம.சா.21தரப்பில் குறு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
25.02.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண். 239/2012.

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். பி.வா.சா.2.

.....

பெயர் - அன்னதுரை
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873 -ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 02 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். தாவா வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
02.01.2020.

*02.01.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.230/2016)வா.சா.1. ஜெயராணி.*

*3,5ம்பிரதிகள் தரப்பில் கு,வி.*

*எனக்கு சொந்த ஊர் தூத்துக்குடி என்றால் சரிதான். எனது கணவர் பெயர் திருமணிமுத்து என்றால் சரிதான். அவர் எனக்கு முதல் கணவர் ஆவார். எனக்கும் எனது கணவர் திருமணிமுத்துக்கும் பிறந்த குழந்தைகள் 2 பேர்கள் என்றால் சரிதான். எனது கணவர் திருமணிமுத்து இறந்த விவரத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது கணவருக்கும் எனக்கும் பிறந்த குழந்தைகளைப்பற்றி எதுவும் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஜெயபாலன் சுகாதார ஆய்வாளராக வேலைபார்த்து வருகிறார் என்றால் சரிதான். ஜெயபாலனை எங்கு வைத்து திருமணம் செய்தேன் என்றால் தூத்துக்குடியில் சிவன் கோவிலில் உள்ள முருகன் சன்னதில் வைத்து திருமணம் செய்தேன். அந்த கோவில் அரசு கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கோவில் என்றால் சரிதான். திருமணத்திற்கு யார் யார் வந்திருந்தார்கள் என்றால் ஜெயபாலன் தம்பி, அவரின் உறவினர்கள் 4,5 நபர்கள் வந்திருந்தார்கள். நான் ஜெயபாலனை திருமணம் செய்து கொண்டதது சம்பந்தமாக வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருமணத்தின் போது புகைப்படம் எடுத்துக்கொண்டதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஜெயபாலனை திருமணம் முடித்த சமையத்தில் நான் தூத்துக்குடியில் தான் குடியிருந்தேன் என்றால் ஓட்டப்பிடாரம் அருகில் குடியிருந்தேன். திருமணத்திற்கு பின்பு எங்கு குடியிருந்தேன் என்றால் ஓட்டப்பிடாரத்தில் தான் குடியிருந்தேன். மந்தித்தோப்பு கிராமத்தில் குடியிருக்கவில்லை. ஆனால் 2009 முதல் மந்தித்தோப்பில் தான் குடியிருந்து வருகிறேன். ஜெயபாலனுக்குநான் மனைவி என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனது வழக்கறிஞர் அலுவலகத்தில் உள்ளது. ஜெயபாலன் என்பவர் மங்கையர்கரசி என்பவரை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். ஜெயபாலனுக்கு சொந்த ஊர் எது என்றால் கோவில்பட்டி. ஜெயபாலன் பூர்வீகத்தைப்பற்றி எனக்கு எதுவும் தெரியுமா என்றால் தெரியும். ஜெயபாலனுக்கு கருப்பாயம்மாள் தாயார் என்றால் சரிதான். செண்பகவல்லி என்ற அபிநயா,ஜோதிகா,சங்கரி ஆகியோர்கள் மங்கையர்கரசிக்கும் ஜெயபாலனுக்கும் பிறந்த குழந்தைகள் என்றால் சரிதான். ஜெயபாலன் தாயார் கருப்பாயம்மாள் கோவில்பட்டி வ.உ.சி. நகரில் குடியிருந்தார் என்றால் சரிதான். நானும்,ஜெயபாலனும் வெவ்வேறு சமுதாயத்தை*

சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 15.09.2014ல் ஜெயபாலனுக்கு ஒரு பதிவு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. எனக்கு எழுதப்படிக்கத்தெரியுமா என்றால் சரியாகத்தெரியாது. ஜெயபாலன் பெயரில் வங்கிக்கணக்கு உள்ள விவரம் எனக்குத்தெரியுமா என்றால் தெரியும். வங்கிக்கணக்கில் என்னை நாமினியாக என்னை சேர்த்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. ஜெபாலன் எந்த வங்கியில் வரவு செலவு கணக்கு வைத்திருந்தார் என்றால் கயத்தார் கனராவங்கியில் வைத்திருந்தார். வங்கியில் அவர் நாமினியாக யாரை சேர்த்துள்ளார் என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. ஜெயபாலனை உடல்நிலை சரியில்லாமல் கோவில்பட்டியில் முரளி மருத்துவமனையில் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். கோவில்பட்டி முரளி மருத்துவமனையில் முதல் கட்ட சிகிட்சை முடித்த பின்பு திருநெல்வேலி அரசு மருத்தவமனையில் சிகிட்சை செய்து அங்கியிருந்து மேல்சிகிட்சைக்காக சென்னை ஸ்டென்லி மருததுவனைக்கு அனுப்பப்பட்டார் என்றால் சரிதான். ஷ கோவில்பட்டி மற்றும் திருநெல்வேலி மருத்துவமனைகளில் சிகிட்சை பெற்ற விவரத்தை வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தில் மந்தித்தோப்பு முகவரி குறிப்பிடாமல் 3ம்பிரதிவாதியின் வீட்டு முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு காரணம் எனது கணவரின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தத போது அவசர கதியில் எனது கணவரின் சிகிட்சைக்கா அடையாள ஆவணம் கேட்டதால் எனது கணவரின் அடையாள அட்டையை கொடுத்தேன். எனது கணவர் முதல் வேலை செய்து வந்ததால் அவருக்கு நிரந்தர முகவரியாக எனது கணவரின் தாயாரின் வீட்டு முகவரியை கொடுத்திருந்தார். அதன் அடிப்படையில் வா.சா.ஆ.10 ஆவணத்தில் முகவரியை மருத்துவமனையில் எழுதிக்கொண்டார்கள். அந்த நேரத்தில் மந்தித்தோப்பு கிராமத்தில் உள்ள முகவரியை காட்டக்கூடிய ஆவணங்களை நான் கொடுத்தேனா என்றால் கையில் வைத்திருந்தேன் எனது கணவரின் அடையாள் அட்டையை கொடுத்ததால் மந்தித்தோப்பு முகவரியிட்ட ஆவணத்தை கொடுக்கவில்லை. மந்தித்தோப்பு கிராமத்தில் ஜெயபாலன் குடியிருக்கவில்லை என்பதால் தான் மந்தித்தோப்பு கிராம முகவரியை காட்டவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் 2005ல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். குடும்ப அட்டையில்உள்ள ஜெயபாலன் வயது வித்தியாசமாக உள்ளதை திருத்துவதற்கான முயற்சி எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5

ஆவணத்தில் உள்ள ஜெயபாலன் என்பவர் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள நபர் இல்லை என்றால் சரியல்ல. அதனால் நான் குடும்ப அட்டையில் உள்ள வயது வித்தியாசத்தை திருத்த முயற்சி செய்வில்லை என்றல் சரியல்ல. வழக்கில் குறிப்பிட்டள்ள ஜெயபாலனின் இன்சியல் 'I' என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் ஊராட்சி மன்ற துணை தலைவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அப்போது ஊராட்சிமன்ற தலைவர் மாரியப்பன் என்பவார் இறந்து விட்ட காரணத்தினால் துணை தலைவர் தலைவர் என்ற இடத்தில் வையொப்பம் செய்துள்ளார். ஷ் ஆவணத்தில் கையெழுத்து உள்ள இடத்தில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் வழக்கு தாக்கல் செய்த போது பிராதுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தை நான் முதல் விசாரணை சாட்சியம் அளிப்பதற்கு 2 நாட்களுக்கு முன்புதான் பெற்றுள்ளேன் என்றுசொன்னால் சரியல்ல. ஜெயபாலன் என்பவர் 15.09.2014ல் ஒரு பதிவு பெற்ற உயில் சாசனத்தினை எழுதி வைத்துள்ளார் என்றாலும் அதில்கூட எனது பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 3ம்பிரதிவாதியான ஜெயபாலனின் தாயார் தற்போதும் கோவில்பட்டி வி.ஓ.சி.நகரில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். ஜெயபாலன் எழுதிவைத்த உயில் சாசனத்தில் தனக்கு பல்வேறு நோய்கள் இருப்பதாலும் தனக்கு வேண்டிய மருத்துவ சிகிட்சையை தனது தம்பியும், தனது தாயாரும் தான் உதவி செய்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் ஜெயபாலனுக்கு மருத்து சிகிட்சை செய்தாக சொல்லுவது பொய் என்றாலும் 3ம்பிரதிவாதியும் அவரின் தம்பியும் தான் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் எனது பெயரை எந்தஇடத்திலும்மனைவி என்று குறிப்பிடவில்லை என்றால்சரியலல. நான் தான் அனைத்து செலவுகளையும் செய்து வந்தேன். ராஜகுமாரி,லட்சுமி,பாரதி ஆகியோர்கள் யார் என்றால் அவர்கள் அக்கா,தங்கை,தம்பி ஆவார்கள். எனது கணவர் திருமணிமுத்து மூலம் பிறந்த விஜயலட்சுமி,கனி ஆகியோர்கள் எனது குழந்தைகள் ஆவார்கள். நான் மந்தித்தோப்பு கிராமத்தில் எப்போதும் குடியிருந்து வரவில்லை என்றால் சரியல்ல. ஜெயபாலன் இறந்த பின்னர் அவரின் சொத்துக்களை யார் யாருக்கு பாத்தியம் என்று அவர் எழுதிய உயிலில் விவரமாக குறிப்பிட்டள்ளார்என்றால் அவருக்கு சொத்து கிடையாது.அவரின் ஓய்வூதிய பலன்கள் மட்டும் தான். ஜெயபாலன் மனைவி மங்கையர்கரதி விவாகரத்து பெற்றியிருந்தாலும் ஜெயபாலனுடன் தான் இறுதிவரை வாழ்ந்து

வந்தார் என்றால் சரியல்ல. ஜெயபாலன் இறுதி சடங்கு மந்தித்தோப்பு கிராமத்தில் நடை பெறவில்லை என்றாலும் கோவில்பட்டி நடராஜபுரத்தில வைத்து நடைபெற்றது ஏ்னறால் சரியல்ல. அதனால் தான் அவரின் பணபலன்களை அடைவதற்காகத்தான் எனக்கு ஏற்கனவே திருமணம் ஆனதை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உயில் எழுதிவைத்த விவரம் எனக்கு ஏற்கனவே தெரிதிருந்தால் வழக்கு தாக்கல் செய்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. நான் ஜெயபாலனுக்கு எந்தவிதமான மருத்துவ சிகிட்சைக்கான செலவுகளையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னர் பின்யோசனை செய்து ஆவணங்களை உற்பத்தி செய்து வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும்,ஜெயபாலனுக்கும் எந்த விதமான சம்பந்தமான இல்லை என்றாலும்,நான் அவரின் மனைவி இல்லை என்றால் சரியல்ல. ஜெயபாலனுக்கு என்னை தவிர மற்றவர்கள் தான் அவரின் வாரீசு என்றால் சரியல்ல. நான் ஜெயபாலன் மனைவி இல்லை என்பதால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
02.01.2020.

*02.01.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.77/2019)வா.சா.1. கரியம்மாள்.*

*எனது சொந்த ஊர் எது என்றால் வெங்கடேஸ்வரபுரம் கிராமம். எனது கணவர் பெயர் என்னவென்றால் தங்கவேல் செட்டியார். எனது கணவரின் மூத்த மனைவி பெயர் என்ன என்றால் கரியம்மாள் தான். எனது கணவர் முதல் மனைவி யும் நானும் சகோதாரிகள் என்றால் இல்லை. எனது கணவருக்கு முதல் மனைவி இறந்த பின்னர் தான் என்னை திருமணம் செய்ததாரா என்றால் ஆமாம். 2முதல் 5 வாதிகள் எனது கணவருக்கு முதல் மனைவிக்கு பிறந்த குழந்தைகள் என்றாலும் 6,7 வாதிகள் எனது குழந்தைகள் என்றால் சரிதான். எனது கணவர் இறந்த பின்பு வட்டாட்சியர் அலுவலகத்தில் வாரீசு சான்று கேட்டு மனுக்கொடுத்தேன் என்றால் சரிதான். அது சம்பந்தமாக கிராம நிர்வாக அலுவலர், வருவாய்துறை ஆய்வாளர் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்னை விசாரித்த போது எனது கணவருக்கு நான் இரண்டாவது மனைவி என்பதால் தெரியவந்ததாலும், நான் முறையான தகவல்களை கொடுக்காததால் காரணத்தினால் நீதிமன்றம் மூலம்பரிகாரம் தேடிக்கொள்ளும்படி அனுப்பி விட்டார்கள் என்றால் சரியல்ல. பிரிவு 80 சி.பி.சி.படி அரசு அதிகாரிகளுக்கு அறிவிப்பு அனுப்பாததால் எனது வழக்கு நிலை நிற்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல.*

*ம.வி.இல்லை.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*02.01.2020.*

04.01.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.249/2013)வா.சா.1. சுப்புராஜ்.

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் துரைச்சாமிபுரம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்கு யார் யார்மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் ராஜம்மாள் மகாலட்சுமி ஆகியோர்கள் செல்வராஜ் திருப்பதிராஜ் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நான் யாருக்காக சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் ராஜம்மாள், மகாலட்சுமி ஆகியோருக்காக சாட்சியம் சொல்ல வந்துள்ளேன்.ராஜம்மாள் எனக்கு என்ன உறவு முறை என்றால் ராஜம்மாள் மதினி ஆவார். மகாலட்சுமி எனக்கு மனைவி ஆவார். ராஜம்மாள் எனக்கு சாட்சியம் சொல்ல எந்த அதிகாரம் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளார். எனது முதல் விசாரணையில் ஷை 1வது அயிட்ட சந்திற்கு கிழக்கே பிரதிவாதிகளுக்கு கிழக்கே 2 வீடுகள் பழைமையானது இருந்தது என்றால் சரிதான். ஷை வீட்டில் மேல்பக்கம் தென்வடல் 2 ஜன்னல்கள் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் மேல்பக்கச்சுவரில் ஜன்னல் இல்லை என்று தான் சொல்லியுள்ளேன். வழக்கில் தபசில் விவரத்தில் என்ன சொல்லியுள்ளேன் என்றால் 1ம்தபசில் சொத்தில் ராஜம்மாளுக்கும், மகாலட்சுமிக்கும் பாத்தியப்பட்ட சந்து நடைபாதை என்று காட்டியுள்ளேன். எங்களுக்கு பாத்தியப்பட்ட நடைபாதை என்று தாக்கல் செய்துள்ளேன் அதை தவிர வேறு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே 171/14 தீர்ப்பில் பிறந்துள்ள தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது அது சம்பந்தமாகத்தான் இந்த வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் நகலை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விஜயா, ராஜம்மாள், மகாலட்சுமி, ராமதிலகம்,துளசியம்மாள் 5நபர்கள் சேர்ந்து வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு 96/2006 வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு கீழமை நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு வழக்கு ஏ.எஸ்.34/2006 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஷை சொன்ன 2 வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர்தான் சன்சைடு வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. ஆரம்பத்திலிருந்தே அந்த சன்சைடு சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. அந்த சன்சைடு எப்போது வைத்தார்கள் என்றால் 4,5 வருடங்களுக்கு முன்பு வைத்தார்கள். பழைய வழக்கு சம்பந்தமாக எனக்குத்தெரியுமா என்றால் தெரியும். கோபால் நாயக்கர் 1951ல் வழக்கு தாக்கல்

செய்தார். கோபால் நாயக்கர் எனது மனைவிக்கு என்ன உறவு என்றால் அப்பாவின் அப்பா அவரக்கு தாத்தா ஆவார். 1951ல் கோபால் நாயக்கர் தாக்கல் செய்த வழக்கில் சமதானமாக சென்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு சமதானமாக சென்ற தீர்ப்பின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் அவ்வாறு இல்லை. 1,2 பிரதிவாதிகளுக்கு மேற்கு சுவர் அவர்களின் சொந்த சுவர் என்றால் சரிதான். 1951ல் அந்த வீட்டின் அமைப்பு எப்படி இருந்ததோ அப்படியே தான் தற்போதும் அமைந்துள்ளது என்றால் தற்போது மாற்றி அமைத்துள்ளார்கள். 1,2 வாதிகளின் வீட்டின் கிழக்குசுவர் அப்படியோ தான் உள்ளது என்றால் சரிதான். 1ம்பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்கே கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். ராஜம்மாள் வீட்டிற்கு வட்கே காலியிடம் என்றால் இல்லை. கிழமேல் தென்வடல் சந்து உள்ளது. ராஜம்மாள் வீட்டிற்கே வடக்கே போத்திராஜ் என்பவர் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது வீட்டின் வடக்கே சந்து உள்ளது அதற்கு வடக்கே போத்திராஜ் வீடு உள்ளது அந்த சந்து யாருக்குப்பாத்தியப்பட்டது என்றால் 1 1/2அகலம் எனக்கும் மீதி இடம் போத்திராஜுக்கும் பாத்தியப்பட்டுள்ளது. ராஜம்மாள் வீட்டின் வடக்கு சுவரில் ஜன்னல் உள்ளது என்றால் சரிதான். அந்த விவரத்தை நீதிமன்ற ஆணையாளர் வரும் போது சொன்னோ என்றால் சொன்னேன். எனக்கு வடக்கு சுவருடன் இடம் முடிவடைந்து விட்டது என்றால் ராஜம்மாள் வீட்டின் வடக்கு சுவருக்கு வடக்கே 1-1/2 அடி உள்ளது. தாவாப்படும் சந்து தற்போது 3 அடி 10 அங்குலம் உள்ளது என்றால் 3-1/2 அடியிலிருந்து 4 அடி வரை உள்ளது. 2ம்பிரதிவாதியின் வீடும், 1ம்பிரதிவாதியின் வீட்டின் மேற்கு சுவர் நேர்கோட்டில் உள்ளது என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி,2ம்பிரதிவாதி வீட்டிற்கு நடுவில் உள்ள சுவர் பொதுச்சுவர் என்றால் சரிதான். போத்திராஜை வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு முன்பு தெற்கு பக்கம் 1 1/2 அடி இடம் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் வடக்கு சுவர் பக்கம் ஜன்னல் வைத்து 2ம்பிரதிவாதியின் வீட்டோடு சேர்ந்த பழைய சுவர் என்றால் சரிதான். 2ம்பிரதிவாதியின் வீட்டிற்கு வடக்கே உள்ள போர்ட்டிக்கோவிற்க்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரிதான்.

கு.வி.தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என

ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
04.01.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.194/2016.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் - ரத்தினகுமார்.
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 04 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் 4ம் ஆவேன். தாவா வழக்கில் வாதி தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 02.10.1933ல் கிரைய ஆவணம் 1854/1933 ஆண்டி என்பவர் ராக்கமுத்துவுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.1. |
| 2 | 26.10.1964ல் கிரைய ஆவண எண்.2048/1964ல் பெரியமுத்தையா என்பவர் ராக்கமுத்துவுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சப்ரி நகல் வா.சா.ஆ.2. |
| 3. | 20.12.1964ல் ராக்கமுத்துவின் இறப்பு சான்றிதழ் சான்றிட்டநகல் வா.சா.ஆ.3. |
| 4. | 20.06.1957ல் சண்முகம் என்பவரின் இறப்பு சான்றிதழ்சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. |
| 5. | 11.02.2010ல் ராக்கம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6. |
| 6. | 03.02.1948ல் ஆவண எண்.330/1948ல் பெரிய ராக்கமுத்துவுக்கு மைனர் பூவலிங்கம் சின்ன அழகப்பனுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6. |
| 7. | 08.07.1940ல் ஆவண எண்.1095/1940ல் ராக்கமுத்து மற்றும் சண்முகம் ஆகியோருக்கு வேலாயுதமும், அவரது மைனர் மகன் செண்பகநாதனும் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7. |
| 8. | 19.11.2012 வில்லங்க சான்றிதழ் எண்.12653/2012 அசல் வா.சா.ஆ.8. |
| 9. | 01.09.2003ல் பூவலிங்கத்துக்கு டேனியல் என்பவர் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சப்ரி நகல் வா.சா.ஆ.9. |
| 10. | கணினிப்பட்டா எண்.517 சப்ரி நகல் வா.சா.ஆ.10. |
| 11. | 04.07.2012 பாக விடுதலை ஆவணம் எண்.9030/2012 சப்ரி நகல் வா.சா.ஆ.11. |
| 12. | பொது அதிகார ஆவணம் 615/2016 சப்ரி நகல் வா.சா.ஆ.12. |
| 13. | 28.01.2016ல் கிரைய ஆவண எண்.1905/2016 சப்ரி நகல் |

| | |
|---|---|
| | *வா.சா.ஆ.13.ஆகும்.* |

*<u>மு.வி.</u> தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*04.01.2020.*

*07.01.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.67 /2017)பி.வா.சா.1. ராமர்.*

*நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் +2 வரை படித்துள்ளேன். பதில்உறைக்கு நான் தான் விவரங்கள் சொன்னேன் என்றால்சரிதான். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் எத்தனை சொத்துக்கு வழக்கு தாதக்கல் செய்தள்ளார் என்றால் தற்போது நினைவில்லை. நான் பிள்ளையார்நத்தம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து எங்கள் ஊருக்கு பக்கத்து கிராமம் என்றால் ஒரே பிர்க்கா. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். எனக்கு கிரையம் கொடுத்தவர்கள் பெயர் தெரியுமா என்றால் 2முதல்4 பிரதிவாதிகள் அருள்ராஜ், அமல்ராஜ், செல்வராஜ் ஆகியோர்கள். எனக்கு விற்பனை செய்துள்ள 2முதல் 4 பிரதிவாதிகளின் குடும்பங்களை பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. வாதி அவரின் பெற்றோர்களிடம் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் வாதியின் பெற்றேர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. பிராது 2வது அயிட்டச்சொத்தின் சர்வே எண்.113/3ல் உள்ள நிலத்தை 2முதல் 4 பிரதிவாதிகளின் சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.113/3 வாதியின் தாயார் சவரியம்மாளுக்கு வா.சா.ஆ.6 கிரைய மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. வாதி பெற்றோர்களின் சொத்தை பொறுத்து 1/5 பாகம் கேட்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. பிராது தபசில் 1முதல் 3 அயிட்டச்சொத்தை பொறுத்து எனது கட்சி என்றால் சரிதான். 1முதல் 3அயிட்டச்சொத்தை தவிர்த்து மற்ற சொத்துக்களை பொறுத்து வாதிகள் பாகம் பிரிப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. நான் 2முதல் 4 பிரதிவாதிகளிடம் கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண்.128/16,113/3,113/4 ஆகியவை என்றால் சரிதான். ஷ நான் கிரையம் பெற்ற நிலங்களின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஞாபகமில்லை. அனைத்தும் புஞ்சை நிலங்கள் தான். நான் தாக்கல் செய்துள்ள பதில்உறையில் நான் கிரையம் பெற்ற சொத்தை தவிர்த்து மற்ற சொத்துக்களுக்கு வாதி கோரும் பரிகாரத்திற்கு எந்தவித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் மற்றும் எதிர்வழக்குரையில் வருவாய்துறை ஆவணங்களை சரிபார்த்து தான் கிரையம் பெற்றேன் என்று கூறவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் வாதி தபசில் சொத்தை பொறுத்து*

*கோரிய 1/5 பாகம் வாதிக்கு கிடைக்கத்தக்கதில்லை என்று நான் மறுத்துக்கூறவில்லை என்றால் சரியல்ல. வாதி 1முதல் 3 அயிட்டச்சொத்தை கிரையம் பெற்றுள்ளது செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் அதை எதிர்வழக்குரையில் நான் மறுத்துக்கூறவில்லை என்றால் சரியல்ல. 1வது அயிட்டச்சொத்தை நான் 6,7 அயிட்டச்சொத்தை கிரையம் செய்ததை செல்லக்கூடியது என்று வாதி கேட்கும் பரிகாரம் கிடைக்கக்கூடியது என்று நான் எனது எதிர்வழக்குரையில் கூறிவில்லை என்றால் சரியல்ல. வாதி பணம் பறிக்கும் கெட்ட நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனது எதிர்வழக்குரையில் 1ம்பிரதிவாதி மறுத்துக்கூறவில்லை என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள ஆவண விவரம் பற்றி ஷ ஆவணங்கள் செல்லக்கூடியதில்லை என்று ஒரு வரி கூட எதிர்வழக்குரையில் மறுத்து கூறவில்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் 3வது பாராவில் வாதி இதர சொத்துக்களை சேர்க்கவில்லை என்று சொல்லியுள்ளேன் அந்த இதர சொத்துக்களின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி தற்போது எனக்கு ஞாபகமில்லை. எதிர்வழக்குரையில் பாரா 6ல் அருள்ராஜ் என்று சொல்லியுள்ளேன் அவர் வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் அது அருளப்பன் என்பவருக்கு அருள்ராஜ் என்றுதட்டச்சு பிழையாக உள்ளது. ஷ விவரங்களை எனது முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. அருளப்பன் எப்போது காலமனார் என்றால் தேதி நினைவில்லை. அருளப்பனின் இறப்பு சான்றிதாழ். வாரீசு சான்றிதழ் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அருளப்பனின் வாரீசுகள் 3 பேர்கள் தவிர இன்னும் சிலர் இருப்பாக அவர்களுக்குள் ஏற்பட்ட வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் அவர்களின் குமாரர்களான 2முதல் 4பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்ட்டது என்றால் சரிதான். அருளப்பனுக்கு 2முதல் 4 பிரதிவாதிகள் தவிர இன்னும் சிலர் யார்*



*என்றால் அது பற்றி தற்போது ஞாபகமில்லை. நான் பெற்ற கிரையம் 1முதல்3 அயிட்ட சொத்துக்கள் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று எனது எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் 1 முதல் 3 அயிட்டச்சொத்துக்களை கிரையம் பெற்றதை காட்டக்கூடிய சான்றாவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அதற்கான காரணம் உள்ளதா என்றால் நான் சொத்தை விற்று விட்டேன் அப்போது பத்திரத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டேன். ஒரு அயிட்டசசொத்தான 128/16 வழக்கின் சோளார்*

கம்பெனிக்கு விற்றுவிட்டேன் என்றால் சரிதான். மற்ற இரண்டு சொத்துக்களையும் நான் கிரையம் பெற்றதை காட்டக்கூடிய ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம ்பெற்றது முதல் தாவாச்சொத்தை அனுபவம் செய்து வருவதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் பெற்ற சொத்திற்கான தீர்வை ரசீது மற்றும் பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கிரையம் பெற்றதற்கான மூல ஆவணங்களான சிட்டா,பட்டா போன்றவைகளை கிரையம் பெறும் போது பார்வையிட்டுள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ஷ ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு தபசில் சொத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவாச்சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு அளந்து பார்த்னோ என்றால் அளந்து பார்த்தேன். வில்லங்கம் போட்டுப்பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1முதல் 3அயிட்டச்சொத்திற்கு நான் கிரையம்பெற்ற பின்னர் பட்டா பெற்றுள்ளேனா என்றால் 2சொத்திற்கு பட்டா பெற்றுள்ளேன். அது எந்தசொததிற்கு என்றால் சர்வே எண். ஞாபகமில்லை. எனது பெயருக்கு பட்டா மாறுவதற்கு முன்பு கிராம நிர்வாக அதிகாரி விசாரணைக்கு அழைப்பாணை விடுத்தாரா என்றால் சரியாக நினைவில்லை. பட்டா மாறுதல் சம்பந்தமாக கிராம நிர்வாக அதிகாரியை நான் வழக்கில் சாட்சியமாக அழைக்க நான் தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். பட்டா மாறுதல் உத்தரவு வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை. பட்டா மாறுதல் சம்பந்தமாக வட்டாட்சியரை சாட்சியாக அழைக்க தயராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் கிரையம் பெற்ற சொத்தில் சர்வே எண்.128/16ல் சோளார் சிஸ்டம் அமைத்துள்ளார்களா என்றால் அமைத்துள்ளார்கள். அது எந்த பகுதி என்றால் அது பற்றி ஞாபகமில்லை. அதை நிருபிக்க தயராக உள்ளேனா என்றால் தயராக உள்ளேன். வா.சா.ஆ.11 ஆவணம் தான் 2முதல் 4பிரதிவாதிகள் எனக்கு விற்பனை செய்ததற்கான ஆவணம் என்றால் சரிதான். அதில் எங்களுக்கு வாய்மொழி பாகமாக ஒதுக்கப்பட்டதாக வாசகம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் அருளப்பன் காலத்திற்கு பின்பு ஷ சொத்துக்கள் வாரீசுள் ஆண்டு அனுபவித்து வருகின்ற சொத்துக்கள் என்றால்

*சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் பட்டா எண்.29 சர்வே எண்ணில் கண்டுள்ள சொத்துக்கள் அடங்கியுள்ளதாக வாசம் கண்டுள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.29ல் சர்வே எண்.113/3 அடங்கியுள்ளதாக வா.சா.ஆ.11 ஆவணம் கிரையம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற 3அயிட்டச்சொத்திற்கு எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் ஞாபகமில்லை. அதற்கு முயற்சி செய்தேனா என்றால் இல்லை. வாதியின் தாயார் பெயர் சவரியம்மாள் என்றால் சரிதான்.அவர் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. 2முதல் 4 பிரதிவாதிகளிடமிருந்து நான் 1முதல் 3 அயிட்டச்சொத்துக்களை 09.07.2007 கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வாதியின் தாயார் 5.11.2007ல் இறந்துள்ளார் என்றால் தெரியாது. அவர் இறப்பதற்கு 4 மாதத்திற்கு முன்பே அவரிடமிருந்து மோசடியாக வாதியிடமிருந்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் தாயார் சர்வே எண்.113/3ஐ செல்லையா நாயக்கரிடமிருந்து 1973ல் சர்வே எண்.113/3 கிரையம் பெற்றுள்ளதை தெரிந்து கொண்டு தான் ஷ கிரையம் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தை பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணம் அருளப்பனின் வாரீசு சான்றிதழ் அதில் 5*



*வாரீசுகள் உள்ள விவரம் துலங்கும் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. வா.சா.ஆ.1,2,5,6,7,ஆவணங்களின் மூலமாக வாதியின் தகப்பனார் மற்றும் தாயார் கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவர்கள் என்பது பற்றி புலப்படும் என்றால் அது பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணமான வா.சா.ஆ.14 ஆவணம் பட்டாவில் சர்வே எண்.113/3 என்பது இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.22 என்பது நான் கிரையம் பெற்ற சர்வே எண்.113/3 என்பது வாதியின் தாயார் சவரியம்மாள் பெயரில் ஏற்பட்டுள்ள ஆவணம் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. சர்வே எண்.113/3ல் கிணர் உள்ளது என்றால் பல வருடங்களுக்கு முன்பு இருந்து நான் கிரையம் பெறுவதற்கு முன்பே தூர்ந்து போய்விட்டது. கிரையம் பெற்ற இடத்தில் வாதியின் வீட்டில் உள்ளவர்களின் கல்லறைகள் இருந்தது என்றால் இல்லை. கிரையப்பத்திரத்தில் சாட்சியாக காளிராஜ் கையெழுத்து செய்துள்ளார் அவரை விசாரித்தால் அருளப்பனுக்கு எத்தனை வாரீசுகள் என்பது பற்றி தெரிய வரும் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் 6,.7 பிரதிவாதிகள் சோளார் சிஸ்டம் எந்த சொத்திலும் அமைக்கவில்லை என்றாலும் அதை நான் வழக்கிற்காக அமைத்துள்ளதாக*

பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாவாச்சொத்தை கிரையம் பெறும் போது அல்லது கிரையம் பெற்ற பின்பே அளந்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு அளவீடு செய்திருந்தால் செல்லான் பெற்றியிருப்பேன் என்றால் சரியல்ல. அதைவழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அருளப்பனுக்கும்,சவரியம்மாளுக்கும் 5 வாரீசுகள் என்றாலும் 1முதல் 3 அயிட்டச்சொத்துக்களை 3 பேர்களிடம் மட்டுமே கிரையம் பெற்றுள்ளேன் என்றாலும் 1முதல் 3 அயிட்டச்சொத்துக்களை வாதிகளை நான் பெற்ற கிரையம் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. சர்வே எண்.11/3 வாதியின் தாயார் உயிருடன் இருக்கும் போதே நான் மோசடியாக கிரையம் பெற்றதால் அதன் மூலம்நான் பெற்ற கிரையம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றால் சரியல்ல. வாதி 1/5 பாகம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்கதக்து என்றால் சரியல்ல. 1முதல் 3 அயிட்டச்சொத்துக்களை பொறுத்து நான் பெற்ற கிரையப்பத்திரம் செல்லக்கூடியதில்லை என்றாலும் அதை ரத்து செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
07.01.2020.

07.01.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.239 /2012)பி.வா.சா.2. அன்னத்துரை.

நான் சாட்சியம் அளிக்க நிதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதிகள் எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 25முதல் 30வருடங்களாக தெரியும். 1ம்பிரதிவாதியின் பெற்றேர்கள் பெயர் என்ன என்றால் துரைச்சாமி, ருக்குமணி ஆவார்கள். கருப்பாயி பெற்றோர்கள் பெயர் என்ன என்றால் சுப்பையா, பெருமாத்தாள். சுப்பையாவை எவ்வளவு காலமாக எனக்குத்தெரியும் என்றால் சுமார் 30வருடங்களாக தெரியும். சுப்பையாவின் மனைவி பெயர் என்ன என்றால் ருக்குமணி. சுப்பையாவுக்கு மொத்தம் எத்தனை வாரீசு என்றால் ரவி,கருப்பாயி ஆகிய இரண்டு வாரீசுகள். ரவி என்ன படித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. எனக்கு சொந்த ஊர் என்ன என்றால் நான் பிறந்ததே கரடிகுளம் கிராமம் தான்.நான் பிறந்தது செட்டிகுறிச்சி அருகில் உள்ள சிதம்பரம்பட்டி தான் எனக்கு பூர்வீகம் என்றாலும் அதன் பின்னர் தான் கரடிகுளம் வந்தேன் என்றால் சரிதான். மாடத்தியம்மாள்,செல்லம்மாளை தெரியுமா என்றால் தெரியும். மாடத்தியம்மாளின் கணவர் என்ன என்றால் ஞாபகமில்லை. மாடத்தியம்மாள் எந்த வருடம் இறந்தா என்றால் தெரியாது. செல்லம்மாளின் கணவர் பெயர் என்ன என்றால் துரைச்சாமி.செல்லம்மாள் எந்த வருடம் இறந்தார் என்றால் தெரியாது. மாடத்தியம்மாளுக்கு எத்தனை வாரீசுகள் என்றால் 6பேர்கள். அவர்கள் பெயர்கள் தெரியுமா என்றால் துரைராஜ் பெயர் தெரியுமம் மற்றவர்கள் வெளியூரில் குடியிருந்துவருகிறார்கள் அவர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது. ருக்குமணியை தெரியுமா என்றால் தெரியும். ருக்குமணியின் பெற்றேர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. ருக்குமணியின் அப்பா பெயர் முத்துசாமி என்றால் தெரியாது. முத்துசாமிக்கு சொந்த ஊர் இலங்கை என்றால் தெரியாது. முத்துசாமியின் முதல் மனைவி பெயர் கதிராயி என்றாலும் அவர்களுக்கு பிறந்த பெண் தான் ருக்குமணி என்றாலும் அதை மறைநத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ருக்குமணி ஸ்ரீலங்காவில் தான் பிறந்தார் என்றால் இருக்கலாம் ஆனால் அது பற்றி எனக்குத்தெரியாது. ருக்குமணியின் திருமணம் எங்கு வைத்து நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. அவர்கள் எந்த வருடம் தமிழ்நாட்டிற்கு வந்தார்கள் என்றால் 1984-ஆம் ஆண்டு வந்தார்கள். 1ம்பிரதிவாதி சொன்னதன் பேரில் சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும் 1ம்பிரதிவாதியின் பெற்றோர்கள் மற்றும் அவர்களின் வாரீசுகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது

என்றால் சரியல்ல. கருப்பாயின் அம்மா பெருமாத்தாளுக்கு பாலகிருஷ்ணன் என்ற கணவர் உண்டு என்றால் சுப்பையா என்பவரை தான் திருமணம் செய்திருந்தார். பாலகிருஷ்ணன் தற்போது கடிரகுளத்தில் இல்லை என்றால் அவர் யார் என்று எனக்குத்தெரியாது. எனக்கு பெருமாத்தாள் மற்றும் கருப்பாயை பற்றிய எந்தவிவரமும் எனக்குத்தெரியாது என்றால் சரியல்ல. சாட்சியம் சொல்ல எதற்காக வந்துள்ளேன் என்றால் 1ம்பிரதிவாதி எனக்குதெரிந்த விவரங்களை நீதிமன்றத்தல் சொல்லும்படி என்னை அழைத்து வந்தார். வழக்கு சம்பந்தமாக எனக்குஎன்ன விவரம் தெரியும் என்றால் 1ம்பிரதிவாதியின் தகப்பனாருக்கு நான் பிறக்கவில்லை என நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் அதுபற்றி எனக்குதெரிந்த விவரங்களை நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுப்பையாவும் நானும் ஒன்றாக விவசாய கூலி வேலைக்கு செல்வோம். சுப்பையா இலங்கையிலிருந்து வந்தார் என்றால் சரிதான். இலங்கையிலிருந்து வந்த விவரம் எனக்கு எந்த வருடம் தெரியும் என்றால் 40 வருடங்களுக்கு முன்பே தெரியும். ரவிக்கு தற்போது என்ன வயது என்றால் சுமார் 45 வயதிருக்கும். கருப்பாயிக்கு என்ன வயது என்றால் 30வயது இருக்கும். சுப்பையா இலங்கையிலிருந்து வந்த விவரம்ரவிக்கு எப்போது தெரியும் என்றால் ரவிக்கு 5வயது இருக்கும் பொழுது இலங்கையிலிருந்து வந்தார்கள். ரவி பிறந்ததும் இலங்கையில் என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
07.01.2020.

ஓ.எஸ்.எண்.73 /2019.
வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.2.
.....
பெயர் - இசக்கிமுத்து
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 07 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். தாவா வழக்கில் வாதி தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | எனது ஆதாரர் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.9.ஆகும். |

(வா.சா.ஆ.9ஆவணம் நகல் என்பவதால் அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது).
பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

கு.வி. மூக்கம்மாளும்,செல்லத்தாயும் எந்த தெருவில் குடியிருக்கிறார்கள் என்றால் புதுக்கோட்டை கிராமம் வடக்குத்தெருவில் வசித்து வருகிறார்கள். நான் கயத்தார் சுப்பிரமணியசாமி தெருவில் வசித்து வருகிறேன். புதுக்கோட்டையிலிருந்து கயத்தாருக்கு சென்று நான் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் சுமார் 20வருடங்களாக குடியிருந்து வருகிறேன். வாதிகள் இருவருக்கும் 60வயதுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். எனக்கு தற்போது 83 வயதாகிறது என்றால் சரிதான். புதுக்கோட்டையில் இறந்து போன வேதக்கண்ணுவின் தகப்பனார் பெயர் தெரியுமமா என்றால் வேதநாயகம் என்று அழைப்பார்கள். அன்னமரியாள் என்பவர் புதுக்கோட்டையில் இருந்தாரா என்றால் அப்படி ஒருநபர் இல்லை. ஜெபமணி,ஞாணபூ என்பவர்கள் இருந்தார்களா என்றால் அப்படி ஒரு நபர்கள் கிராமத்தில் கிடையாது. மூக்கம்மாள், செல்லத்தாயின் அம்மா பெயர் என்ன என்றால் ஞானத்தம்மாள் என்று அழைப்பார்கள். அவர்களுக்கு சரியான வேறு பெயர் என்ன என்றால் எனக்குத்தெரியாது. வருவாய் துறையினர் விசாரணையில் இறந்து போன வேதக்கண்ணுக்கு அன்னமரியாள் என்ற மனைவியும் ஜெபமணி,ஞானபூ என்ற வாரீசுகள் இருந்தாக தெரியவந்தது என்றால் அப்படிஒரு நபர்கள் எங்கள் ஊரில்இருந்தது கிடையாது. எனக்கு வயது ஆகிவிட்டதால் பழைய நினைவுகள் இல்லை என்பதால் முழுமையான விவரங்களை நான் சாட்சியமாக அளிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு மிகவும் வேண்டிய நபர்

என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
07.01.2020.

07.01.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.48/2010)வா.சா.1. பேச்சியம்மாள்.

வழக்கு சொத்து எந்த ஊரில் இருக்கிறது என்றால் கிழவிபட்டியில் உள்ளது. அதன் சர்வே எண் அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சர்வே எண்.29 அதன் விஸ்தீரணம் 1ஏக்கர் 39 செண்டு ஆகும். தாவாச்சொத்தை 1994ல் யார் யாரிடமிருந்து கிரையம் பெற்றார்கள் என்றால் 4பேர்கள் அனுபவம் செய்து வந்த சொத்தில் 2 பேருக்கு வாரீசுகள் யாரும் இல்லை மீதி 2 பேர் எனது அப்பாவுக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். எனது அப்பாவுக்கு முன்பு அனுபவம் செய்து வந்த ஷ 4 நபர்களின் பெயர்கள் தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்கில் 5ம்வாதி என்றால் சரிதான். எனது தகப்பனார் கருப்பசாமி வழக்கு தாக்கல் செய்த பின்பு இறந்து போனால் எங்களையும் வாதிகளாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். தபசில் சொத்தை எனது அப்பாவுக்கு முன்பு அனுபவம் செய்து வந்த ஷ 4 நபர்களுக்கு எவ்வாறு பாத்தியம் என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் பெயரில் எந்தவித ஆவணமும் இருக்கிறதா என்றால் அது பற்றி தெரியாது. தாவாச்சொத்து அரசு சொத்து என்று சொன்னால் சரியல்ல. வழக்குரை 7வது பாராவில் 'தபசில் சொத்து அரசுக்குப்பாத்தியப்பட்டதாக இருந்தாலும் 1ம்வாதியின் தொடர்ச்சியான அனுபவம் காரணமாக 1ம்வாதியின் பெயரில் பட்டா வழங்குவதற்கு பிரதிவாதிகளுக்கு எவ்வித பிரச்சனையும் இருக்க வாய்பில்லை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரையம் எழுதிக்கொடுத்த நபர்கள் எங்களுக்குப் பாத்தியப்பட்டு எங்கள் சொந்த அனுபவத்தில் இருந்து வருகிற தபசில் சொத்து என்று குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி அவர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது அல்லது வருவாய் துறை ஆவணங்கள் இருந்தது பற்றி எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். தபசில் சொத்திற்கு பட்டா தருவதற்காக வருவாய் துறையினருக்கு பலமுறை எனது தகப்பனார் மனுக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு தண்ட தீர்வை கட்டியுள்ளதாக எனது வழக்குரையில் கூறியுள்ளோம் என்றால் சரிதான். தாவாச்சொத்து தற்போது யாருடைய பெயரில் உள்ளது அல்லது அதற்கு முன்பு யாருடைய பெயரிலிருந்து என்பது சம்பந்தமாக வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. வழக்கு சொத்து வருவாய்துறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக காலனி வீடு கட்டுவதற்க்கு ஒதுக்கப்பட்ட நத்தம் இடம் என்றால் சரியல்ல. 1961ஆம் ஆண்டு

*நிலவரி திட்டத்தின்படி தாவாச்சொத்து நத்தம் புல எண்.29/1ல் 1.39ஏக்கர் நிலமானது சர்க்கார் புறம்போக்கு கிராம நத்தம் என வருவாய்துறை கணக்குகளில் பதிவு ஆகியுள்ளது என்றும், 1985ஆம் ஆண்டு நில உடமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் நத்தம் புல எண்.29/1ல் 0.56.5 ஹெக்டேர் கிராம நத்தம் என்று பதிவாகியுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்குத்தெரியாது. அரசு தரப்பில் பதில்உறை தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து தபசில் சொத்தில் பசுமை திட்டத்தின் கீழ் 4 நபர்களுக்கு பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்றால் சரிதான். ஷை வீடுகள் வழக்கு நிலுவையில் இருந்த போது கட்டப்பட்டது. அரசாங்கத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்தை எனது தகப்பனாரின் பெயரில் எழுதி வாங்கியது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் கோவில்பட்டி கோட்டாட்சியர் அனுப்பப்பட்டதற்கோ அல்லது அதனை பெற்றுக்கொண்டதற்கான ஆதாராம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் வருவாய் துறையில்  எனது தகப்பனாரால் எந்தவித மனுவும் சமர்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 1994ஆம் ஆண்டு முதல் தபசில் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை பட்டா கோரி மனு தாக்கல் செய்ததாக இவ்வழக்கிற்காக கூறப்படும் சங்கதிகள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு பட்டா வழங்கக்கோரியும் பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் சரிதான். பட்டா பாஸ்புத்தகம் சட்டப்படி வருவாய்துறைக்கு எதிராக பட்டா வழங்குதல் சம்பந்தமாக எந்தவழக்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தடை பட்டுள்ளோம் என்றாலும் அதை மீறி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா வழக்கை பொறுத்து உள்ளாட்சி துறையில் வட்டார வளர்ச்சி துறையின் கட்டுபாட்டின் கீழ் உள்ளதால் ஷை அலுவலரை தரப்பினராக சேர்க்காமல் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்க சட்டப்படி நாங்கள் தடை செய்யப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் மூலமாகவோ, வா.சா.ஆ.2 மூலமாகவோ நான் எந்தவிதமான உரிமையோ அனுபவமோ கோரஇயலாது என்றால் சரியல்ல. நான் கோரும் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல.*

பிரிவு 80சி.பி.சி.ன்படி அரசு அதிகாரிகளுக்கு அறிவிப்பு அனுப்பாமல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு சட்டப்படி ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை நாங்களோ எனது தகப்பனாரோ,அவருக்கு எழுதிக்கொடுத்தாக கூறும் நபர்களோ எந்தக்காலத்திலும் அனுபவித்தது கிடையாது என்றாலும் அவ்வாறு அனுபவம் செய்ய எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
07.01.2020.

*07.01.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குு.வி.செய்யப்பட்டது.(ஓ.எஸ்.132/2014)வா.சா.1. அழகர்சாமி.*

*<u>2,3பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.</u>*

*இராமசாமி நாயக்கர் 1ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் அவரின் ஊர்காரர்கள் பத்திரத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றால் சொந்த ஊர்காரர்கள் கையெழுத்து செய்துள்ளார்கள். இந்த வழக்கில் பூர்வீகச்சொத்துக்களை பாகம் செய்ததை காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் வாய்மொழியாக பாகம் செய்து கொண்டதால் ஆவணங்கள் எதுவும் பிறப்பிக்கவில்லை. சீனிவாசகம். சீனிராஜ் என்பவரும் ஒரே நபர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது சகோதரார் சீனிவாசன் பாகம் மனை வீட்டிற்கும் பொது சுவருக்கும் வடக்கு என்றுமால் காட்டப்பட்டுள்ளது அது 1ம்பிரதிவதியும்,வாதியும் கூட்டுசேர்ந்து எழுதிக்கொண்டார்கள் ஏ்னறால் அது பற்றி தெரியாது. 1ம்பிரதவாதிக்கு சீனிவாசன் என்ற சகோதரர் கிடையாது என்றாால் சரியல்ல. 1ம்பிரதிவாதி சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் வாதி மற்றும் எனக்கு எதிராக வாழ்க்கை பொருள் உதவி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.*

*ம.வி.இல்லை.*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒப்பம்)வி.முரளிதரன்,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*07.01.2020.*

22.01.2020 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு மு.வி.தொடர்ச்சி (ஓ.எஸ்.142/2019)வா.சா.1. சீனிவாசன்.

| | |
|---|---|
| 1 | 1ம்வாதியின் வாக்காளர் அடையாள அட்டை மற்றும் 2முதல் 4 வாதிகளின் ஆதாரர் அடையாள அட்டைகளின் நகலர் வா.சா.ஆ.3.ஆகும். (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது). |

குு.வி.

இறந்து போன எனது சகோதரர் ஆவுடையப்ப நாயக்கருக்கு என்னையும் சேர்த்து 7 சகோதரர்களும் ஒரு சகோதாரியும் உள்ளார்கள் என்றால் சரிதான். 1ம்வாதியும், 2ம்வாதியும் ஆகிய நாங்கள் மட்டுமே ஆவுடையப்ப நாயக்கரின் உடன் பிறந்த நபர்களில் தற்போது உயிருடன் இருக்கிறோம் என்றால் சரிதான். ஆவுடையப்ப நாயக்கருக்கு அவரின் மனைவி செல்லத்தாய் என்பவரின் இறந்து விட்டார் அதற்கான இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அதற்கான காரணம் அவர் இறந்து நீண்ட காலம் ஆகிவிட்டதால் இறப்பு சான்றிதழ் பெறவில்லை. என்னுடன் பிறந்த பெருமாள்சாமி, கிருஷ்ணசாமி, இராமானுஜம்,வேணுகோபால்,ரெங்கராஜ் ஆகியோர்கள் வாரீசுகள் இல்லாமல் இறந்து போனதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஷ நபர்கள் இறப்பு சான்றிதழ் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சகோதரர் ஆவுடையப்ப நாயக்கர் வாரீசு சான்று வேண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனுசெய்ததில் நான் நேரிடையான வாரீசு இல்லை என்ற காரணத்தினால் மனு நிராகரிக்கப்பட்டு மேலெழுத்து செய்து அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எனது மனுவின் பேரில் எங்கள் ஊரில் வந்து வருவாய் துறையினர் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். விசாரணையின் போது முழுமையான தகவல்களையும் ஆவணங்களையும் சமர்பிக்கப்படாததால் எனது மனு நிராக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரிவு 80 சி.பி.சி.ன் படி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பாமல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
22.01.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண். 78/2014.

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். பி.வா.சா.2.

.....

பெயர் - நவநீதகிருஷ்ணன்.
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் 2ம்பிரதிவாதி ஆவேன். தாவா வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | நாலட்டின்புத்தூர் கிராம நத்தம் புல எண்.961-க்குரிய புலப்பட நகல் பி.வா.சா.ஆ.1. |
| 2 | நாலட்டின்புத்தூர் கிராம நத்தம் புல எண்.961/2-க்குரிய நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவேடு நகல் பி.வா.சா.ஆ.2. |
| 3 | நாலட்டின்புத்தூர் கிராம நத்தம்நிலவரி திட்ட துாய சிட்ட நகல் பி.வா.சா.ஆ.3.ஆகும். |

கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
22.01.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஒ.எஸ்.எண்.217/2016.

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். பி.வா.சா.1.

.....

பெயர் - சக்திவேல்
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். தாவா வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | பிரதிவாதி,வாதிக்கு 04.10.2016ம்தேதியிட்டு தபசில் கடைக்கான வாடகை ரூ.6,300/-ஐ காசோலையுடன் அனுப்பிய கடிதம் பி.வா.சா.ஆ.2. |
| 2 | வாதி சங்க செயலாளர் 05.10.2016அன்று பெற்றுக்கொண்டத்றகான அஞ்சல் ஒப்புதல் அடடை பி.வா.சா.ஆ.3. |
| 3 | வாதி பிரதிவாதிக்கு 05.10.2016ம்தேதியிட்டு அனுப்பிய கடிதம் பி.வா.சா.ஆ.4. |
| 4 | தபசில் கடைக்கு பிரதிவாதி செலுத்திய மின் கட்டண இரசீது பி.வா.சா.ஆ.5.ஆகும். |

கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
22.01.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.218/2016.

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். பி.வா.சா.1.

.....

பெயர் - விஜயலட்சுமி.
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். தாவா வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | பிரதிவாதி,வாதிக்கு 04.10.2016ம்தேதியிட்டு தபசில் கடைக்கான வாடகை ரூ.6,300/-ஐ காசோலையுடன் அனுப்பிய கடிதம் பி.வா.சா.ஆ.2. |
| 2 | வாதி பிரதிவாதிக்கு 05.10.2016ம் தேதியிட்டு அனுப்பிய கடிதம் பி.வா.சா.ஆ.3. |
| 3 | தபசில் கடைக்கு பிரதிவாதி செலுத்திய மின் கட்டண இரசீது பி.வா.சா.ஆ.4.ஆகும். |

கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
22.01.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண். 91/2019.

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். பி.வா.சா.1.

.....

பெயர் - பாலாஜி
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் 2ம்பிரதிவாதி ஆவேன். தாவா வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
22.01.2020.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.

ஓ.எஸ்.எண்.233/2018.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம். வா.சா.1.

.....

பெயர் - கோமதி.
த/பெ. -
கிராமம் -
தாலுகா -
தொழில் -
வயது -

1873-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2020-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 -ஆம் நாள் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை. நான் இந்த வழக்கில் 3ம் வாதி ஆவேன். தாவா வழக்கில் வாதி தரப்பு சாட்சியாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை வாதி தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 17.08.2017ல் பாக்கியலட்சுமியின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.1. |
| 2 | 1ம்வாதியின் ஆதாரர் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.2. |
| 3 | 3ம்வாதியின் குடும்ப அட்டை நகல் வா.சா.ஆ.3. |
| 4 | 21.08.1999ல் பெருமாள் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4. |
| 5 | 10.09.2018ல் 1ம்பிரதிவாதியின் லேலெழுத்து கடிதம் அசல் வா.சா.ஆ.5. |
| 6 | 10.08.2009ல் வேலம்மாள் இறப்பு சான்று அசல் வா.சா.ஆ.6.ஆகும். |

(வா.சா.ஆ.1,2 ஆவணங்கள் அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது).பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

கு.வி.வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வி.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
22.01.2020.